இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


டில்லி வன்புணர்வு வழக்கில் நால்வருக்கும் தூக்கு உறுதி
பக். 06


ரஷ்யாவின் படைகளை எதிர்க்கும் திட்டமில்லை
பக். 07


யாழ்.மத்தி பலமான நிலையில்
பக். 22


பங்களாதேஷ் வெற்றி
பக். 23


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 108 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 30, வெள்ளி 14.03.2014


## ஜெனிவா சமரில் இலங்கையும் முழுவீச்சில்

*உயர் மட்டக் குழு களமிறக்கம்*

கொழும்பு, மார்ச் 14
ஜெனிவா நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இலங்கை அரசு தனது உயர் மட்டக் குழு ஒன்றை அங்கு களமிறங்க வுள்ளது. அந்தக் குழு மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக் கையில் குறிக்கப்பட்ட விட யங்கள் மற்றும் அமெரிக்கத் தீர்மான வரைவில் குறிப்பிட்ட

21 ஆம் பக்கம் பார்க்க

## மயிலிட்டியில் மீன்பிடிக்கலாம்; மீளக்குடியமர முடியாது

*யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி திட்டவட்டம்*

யாழ்ப்பாணம், மார்ச் 14
வலி.வடக்கின் மயிலிட்டியில் மீன்பிடிக்க முடியும், ஆனால் மீளக்குடியமர முடியாது. இவ் வாறு யாழ்.மாவட்ட இராணு வத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா திட்ட வட்டமா கக் கூறியுள்ளார் என்று தெரி வித்துள்ளார் வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர் வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம்.
வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில், யாழ்.மாவட்ட இரா ணுவத் தளபதிக்கும், வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழு வின் தலைவர் குணபாலசிங் கம் இருவருக்குமிடையே நேற்றுமுன்தினம் புதன் கிழமை சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. அந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக் கும் போதே குணபாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:
"பலாலி விமான நிலையத் தின் பாதுகாப்புக்கு அச்சுறுத் தல் இருப்பதால் மயிலிட்டி யில் மக்களைக் குடியமர்த்த முடியாது என்று யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சந்திப்பின்போது குறிப்பிட் டார். மயிலிட்டியில் மக்களை அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை மேற் கொள்வேன் என்று தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் இருப்ப தாகவும், பலாலி விமான நிலையத்தில் விமானங்கள் தரையிறங்கும் போது அல் லது ஏறும் போது மயிலிட்டி

21 ஆம் பக்கம் பார்க்க

# வன்னியில் நேற்றிரவு பதற்றம் இராணுவம், பொலிஸ் குவிப்பு

## ரி.ஐ.டி. நபரைப் பிஸ்ரலால் சுட்டதால் நிலைமை தீவிரம்

யாழ்ப்பாணம்.மார்ச் 14
வன்னியில் நேற்றிரவு கடும் பதற்றம் காணப்பட்டது. இரா ணுவத்தினரும் பொலிஸா ரும் குவிக்கப்பட்டு வீதிச் சோத னைகள் மேற்கொள்ளப்பட் டன. வீதிகளில் சென்றவர்கள் மறிக்கப்பட்டு அவர்களிடம் உடல் சோதனையும் நடத்தப் பட்டது. பவள் கவச வாகனங்க ளுடன் இராணுவத்தினர் அந் தப் பகுதி எங்கும் சரமாரியா கக் குவிக்கப்பட்டிருந்தார்கள் என்று மக்கள் தெரிவித்தனர். இதனால் மக்கள் மத்தியில் நேற்றிரவு முழுவதும் அச்ச மும் பீதியும் காணப்பட்டது.
சந்தேகநபர் ஒருவரைத் தேடிச் சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் நபர் ஒருவர் சுடப்பட்டதை அடுத்தே இத்த கைய தீவிர தேடுதல் நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட் டன என்று தெரிகிறது. எனி னும் இது குறித்து உத்தியோ கபூர்வத் தகவல் எதனையும் நேற்றிரவு பொலிஸ் பேச்சா ளர் தெரிவிக்கவில்லை. இந் தச் சம்பவம் பற்றித் தமக்குத் தகவல் ஏதும் வரவில்லை என்று பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.
கிளிநொச்சியில் உள்ள தரும புரம் பகுதியில் ஆயுதங்கள்


விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட தாயும் மகளும்

மறைத்து வைக்கப்பட்டிருக்கின் றது என்று கிடைத்த தகவலை யடுத்து, நேற்று மாலை அத னைத் தேடிச் சென்ற பயங் கரவாத தடுப்புப் பிரிவினர் மீதே பிஸ்ரலால் சுட்டுவிட்டு ஒருவர் ஓடித் தப்பினார் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.
இந்தத் தாக்குதலில் காயம டைந்த பொலிஸாரான ரட் ணகுமார (வயது-50) உடன டியாக அனுராதபுரம் வைத்தி யசாலைக்கு எடுத்து விரை யப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது. அவரை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து வந்த பின்னரே அனுராத புரம் வைத்தியசாலைக்கு மாற்றினார்கள் என்று தெரி விக்கப்பட்டாலும் நேற்றிரவு அதனை உறுதிப்படுத்த முடிய வில்லை.
இதேவேளை, பிரிட்டிஷ் பிரத மர் வந்தபோது யாழ்ப்பா ணத்திலும் வவுனியாவிலும் நடைபெற்ற காணாமற்போ னோரின் உறவினர்களது போராட்டத்தில் முன்னணி யில் நின்று கதறியழுது ஊட கங்களின் பார்வையில் சிக்கிக் கொண்ட சிறுமியும் அவரது

21 ஆம் பக்கம் பார்க்க

## சந்தேகநபரை மடக்கினர் நெல்லியடிப் பொலிஸார்

*சினிமா பாணி வன்புணர்வுக் குற்றத்தில்*

யாழ்ப்பாணம், மார்ச் 14
தமிழ் சினிமா பாணியில் காதல னைத் தாக்கிவிட்டு அவர் முன் னாலேயே இளம் பெண்ணை மூவர் வன்புணர்ந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள பாலேந்

21 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு கோப்பாயை சேர்ந்த ஆசிரியருடையது

*அவரது சகோதரி நேற்று அடையாளம் காட்டினார்*

யாழ்ப்பாணம்.மார்ச் 14
முல்லைத்தீவு மாங்குளம் காட்டுப் பகுதி யில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள், கோப் பாய் மத்தி, கோப்பாயைச் சேர்ந்தவரும் வவுனியா நேரியகுளம் மகாவித்தியால யத்தின் விஞ்ஞானப் பாட ஆசிரியருமான கார்த்திகேசு நிரூபன் (வயது-30) என்பவ ருடையது என்று அடையாளம் காணப் பட்

21 ஆம் பக்கம் பார்க்க


பொலிஸாரால் மீட்கப்பட்ட ஆவணங்கள்

## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் 80 சதவீத வாக்குப் பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14
நேற்று இடம்பெற்ற மேல் மாகாண மற்றும் தென் மாகா ணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில் யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டத்தில் 80 சதவீதத்திற்கும் அதிகமான தபால் மூல வாக்காளர்கள்

21 ஆம் பக்கம் பார்க்க

## 24 இந்திய மீனவர் விடுதலை

*32 பேர் இன்று விடுவிக்கப்படுவர்*

யாழ்ப்பாணம், மார்ச் 14
மன்னாரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 24 பேர் அவர் களது படகுகளுடன் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இலங்கை கடல் எல்லைக் குள் மீன்பிடியில் ஈடுபட்ட குற் றச்சாட்டில் தலைமன்னாரில் வைத்து கடந்த 5 ஆம் திகதி

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் உயிரிழப்புக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
கடந்த செப்ரெம்பர் மாதம் காணாமல் போன ஆசிரியர் உயிரிழந்து எலும்புக் கூடாக

21 ஆம் பக்கம் பார்க்க

## கொலையல்லாத மரணம் விளைவித்தவருக்கு ஒரு லட்சம் அபராதமும் ஒத்திவைத்த சிறையும்

யாழ்ப்பாணம், மார்ச் 14
கொலையல்லாத மரணம் விளைவித்த நபர் ஒருவருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்த தோடு இரண்டு வருடக் கடூழி யச் சிறைத்தண்டனை விதித்து அதனை ஆறு வருடங்களுக்கு ஒத்திவைத்தது.
சுன்னாகம் சூராவத்தையில் 2011 ஆம் ஆண்டு இடம் பெற்ற சம்பவம் தொடர்பா கவே இவ்வாறு தீர்ப்பு வழங் கப்பட்டுள்ளது. ஒரே வீட்டில் வசிக்கும் தனது மாமனாரு டன் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த தம்பு பாலசிங்கம் என்பவர் உயிரி

21 ஆம் பக்கம் பார்க்க

## தீர்க்கமான அரசியல் தீர்வுதான் மீளிணக்கத்துக்கு அத்திபாரம்

20 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைத் தமிழர் ஆஸியில் கொலை

## சந்தேகநபர் பொலிஸாரால் கைது

சிட்னி, மார்ச் 14

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

48 வயதான விசாகீசன் என்ற இந்த இலங்கை தமிழர் பெண்டல் ஹில் பகுதியில் உள்ள ஆஸியூனிட்டி ரியல் எஸ்டேட் என்ற தனது வர்த்தக நிலையத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார். அவர் உடனடியாக வெஸ்ட்மீட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதும் அங்கு சிகிச்சைகள் பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவராக சந்தேகிக்கப்படும் 30 வயதான நபர் ஒருவர் சம்பவ இடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் வைத்து அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் மனநலப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தற்போது விசாரணைகளுக்காகப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ் அதிகாரியான ஹெரால்ரொய்ட்,

"சந்தேக நபர் கைது செய்யப்படும் போது இரத்த கறைகள் அவரின் உடலில் காணப்பட்டது. எனினும் கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இருக்கவில்லை. குறித்த நபர் ரயில் பாதையைக் கடந்து சென்று தன் மீது படிந்திருந்த இரத்த கறையைக் கழுவியுள்ளார். இந்த கொலைக்கும் ரியல் எஸ்டேட் வர்த்தகத்திற்கும் சம்பந்தம் இருக்கின்றதா என்பது சரியாகத் தெரியவில்லை." என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அவரது அலுவலகத்தில் திருட முயன்ற நபராலேயே அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்த நபர் திருட்டில் ஈடுபட முயன்றமையை அவதானித்த அவர், அந்த இளைஞனுடன் முரண்பட்டு மோதியிருக்கின்றார். இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதை அடுத்து அலுவலகத்துக்குள் இருந்த தடி ஒன்றை எடுத்துக் கொண்டு அந்த இளைஞனை ஈசன் துரத்தும் காட்சி அவரது அலுவகத்தில் உள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதும், அவற்றை உறுதிப்படுத்த முடியவில்லை.

கொலை செய்யப்பட்ட விசாகீசன் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். இவரது இரண்டாவது மனைவி ஷானிக ஒரு சிங்களப் பெண்ணாவார். (ற)



உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு நேற்று வருகை தந்த இலங்கைக்கான கனேடிய நாட்டு தூதுவர் ஷலி வைற் மற்றும் அந்த நாட்டின் ஆசிய பசுபிக் பிராந்திய அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகம் ஜவ் நன்கிவெல் ஆகியோர் உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ. சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் ஆகியோருடன் கலந்துரையாடினர். (ற-21)

# இந்திய - இலங்கை மீனவர் பேச்சு; திகதி தீர்மானிப்பதில் இழுபறிநிலை

யாழ்ப்பாணம், மார்ச் 14

இந்திய - இலங்கை மீனவர்களின் இரண்டாம் கட்டப் பேச்சுக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படாமல் இழுபறி நிலையிலேயே உள்ளது.

இந்தியத் தரப்பு இந்த வாரம் பேச்சுக்கான திகதியைக் கோரியுள்ள நிலையில், இலங்கைத் தரப்பினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதால் இன்னமும் முடிவு செய்யப்படாத நிலைமை நீடிக்கின்றது.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் பேச்சு நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அதையடுத்து இரு நாட்டு அமைச்சர்கள் மட்டத்திலான முதற்கட்டப் பேச்சு கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி டில்லியில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இரு தரப்பு மீனவர்களுக்கிடையிலான பேச்சு கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றது.

அந்தப் பேச்சையடுத்து இரண்டாம் கட்ட மீனவர் பேச்சு நேற்று கொழும்பில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டருந்தது. எனினும் இந்தியத் தரப்பினர் இலங்கைக்கு வராத காரணத்தால் திகதி குறிப்பிடப்படாமல் பேச்சு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இருதரப்புப் பேச்சை எதிர்வரும் 18 ஆம் அல்லது 19 ஆம் திகதியில் நடத்துவதற்கு இந்தியத் தரப்பு சம்மதம் தெரிவித்திருக்கின்றது. ஆனால் இலங்கைத் தரப்பினர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்குப் பின்னரே இது சாத்தியமாகும் என்று தெரிவித்துள்ளர். அதனால் பேச்சுத் திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படாமல் இழுபறி நிலையில் உள்ளது. (ற)

## கைகலப்பில் ஈடுபட்டோர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமில் கைகலப்பில் ஈடுபட்டமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.

உறவினர்களுக்கிடையேயான தனிப்பட்ட குடும்ப பிரச்சினை காரணமாக வாக்குவாதம் ஏற்பட்டுப் பின்னர் அது கைகலப்பாக மாறியது. அது தொடர்பாக கைகலப்பில் ஈடுபட்ட இரு தரப்பினரும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடந்த 9 ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தனர்.

அதனடிப்படையில் இரண்டு தரப்பினரையும் சேர்ந்த 8 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒரு தரப்பைச் சேர்ந்த 6 பேரும், மற்றைய தரப்பைச் சேர்ந்த கணவன், மனைவி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

"6 பேர் கொண்ட குழுவில் ஒருவரிடமிருந்து இரும்பினாலான முள் ஆயுதம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)

# 'ஆவா' தலைவனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சமூக விரோதக் குழுவான 'ஆவா குறூப்' தலைவனான, பிரதான சந்தேக நபருக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதான சந்தேக நபரான 'ஆவா' என்றழைக்கப்படும் விநோதன் என்பவருக்கு எதிராக கைக்குண்டு வைத்திருந்தமை தொடர்பாகப் பொலிஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர். அதனால் அது தொடர்பில் தனியே வழக்குத் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அதன் காரணமாக அவருக்கு பிணை அனுமதி மறுக்கப்பட்டது.

இந்தக் குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 3 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் பவிலன் மற்றும் திவாகரன் ஆகிய இரண்டு பேரும் கடந்த மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

> "யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களு டன் தொடர்புடைய குற்றச்சாட் டில் 'ஆவா குறூப்' என்ற பெயரில் இயங்கிய 12 பேர் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப் பட்டனர்.

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 'ஆவா குறூப்' என்ற பெயரில் இயங்கிய 12 பேர் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள், இரும்பினாலான ஆயுதங்கள், கைக்குண்டு என்பவை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களையும் மீட்டிருந்தனர். (ற-4)

# மாங்குளம் விபத்தில் நால்வர் காயம்



விபத்துக்குள்ளான இ. போ.ச. பஸ்

மாங்குளம், மார்ச் 14

மாங்குளத்துக்கும் பனிக்கங்குளத்திற்கும் இடைப்பட்ட 27 ஆவது மைல்கல் பகுதியில் நேற்று இடம்பெற்ற பஸ் - பிக்கப் வாகன விபத்தில் நால்வர் படுகாயமடைந்தனர்.

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான இ. போ.ச. பஸ்ஸும் - பிக்கப் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் பிக்கப் வானத்தில் பயணம் செய்த ஏ.டி. சமிந்தவும், பஸ்ஸில் பயணம் செய்த எஸ். ராஜ்மோகன், சி. பாலேஸ்வரன் மற்றும் எம். மனோகரன் ஆகியோரே படுகாயமடைந்த வர்களாவார்.

படுகாயமடைந்த நால்வரும் சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-400, 422,18)

## மன்னாரில் 21 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம்

மன்னார், மார்ச் 14

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டும் விதமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள் இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தப் போராட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணை, மன்னார் மனிதப் புதை குழி தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், மீனவர்கள், விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், தமிழ் மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் தொடர்பில் நீதி கோரியே குறித்த உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ற)

# ஆணின் சடலம் பரந்தனில் மீட்பு



சடலத்தை மீட்ட வேளை

*கிளிநொச்சி, மார்ச் 14*

*கிளிநொச்சி பரந்தன் பகுதியில் ரயில் பாதைக்கு அருகில் பற்றைக்குள் இருந்து ஆண் ஒரு வரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சடலம் தண்டவாளத்துக்கு அருகில் தலை சிதைந்த நிலை யில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. சடலத்தை மீட்ட பொலிஸார் அதனை கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். இதுவரை சடலம் இனங்காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு பளையில் இருந்து சென்ற ரயிலில் மோதி குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(ஐ-18-55-101)*

14 MAR 2014



## நடமாடும் வாணிப வாகனம் பாலத்தின் கீழ் விழுந்து சேதம்

ஓமந்தை, மார்ச் 14
ஓமந்தைப் பகுதியில் நடமாடும் வாணிப வாகனம் ஒன்று பாலத்தின் கீழ் விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.
நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் ஓமந்தைப் பகுதி எரிபொருள் நிலையத்தில் எரிபொருளை நிரப்பிக்கொண்ட இந்த வாகனம் கிளிநொச்சியை நோக்கிப் புறப்பட்டது. அடுத்த ஓரிரு நிமிடங்களில் எரிபொருள் நிலையத்துக்கு முன்னால் உள்ள பாலத்தின் கீழ் விழுந்து வாகனம் விபத்துக்குள்ளானது.
தெய்வாதீனமாக வாகனத்தில் இருந்தவர்களுக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் வாகனம் பலத்த சேதமடைந்தது.
(ஒ-421)

# மருத்துவர்களின் கோரிக்கைக்கு எதிராக உள்ளூராட்சித் தலைவர்கள் அணிதிரள்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14
உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளையினர் இன்று அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளனர் என்று அறிவித்துள்ள நிலையில், அவர்களின் கோரிக்கைக்கு எதிராக உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் அணி திரண்டுள்ளனர்.
தமது பிரதேசத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் இடத்திற்கு பதிலீட்டு அதிகாரி ஒருவரை நியமிக்ககாத வரையில் சுகாதாரப் பரிசோதகரை விடுவிக்க முடியாதுள்ளது என்று வட மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, பிரதேச சபைகளின் கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏன் அவசியம் என்பதை வலியுறுத்தி 11 பிரதேச சபைகளின் தலைவர்கள் ஒப்பமிட்ட கடிதம் வட மாகாண முதலமைச்சர், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் மற்றும் ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பிரதேச சபைகளுக்கு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆளணி ஒன்றை உருவாக்கித் தருமாறு கேட்டு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எச். எம். அதாஉல்லாவுக்கும் அவர்கள் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.
தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமாரைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மிரட்டினார் என்று கூறப்படும் குற்றச்சாட்டைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தல் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பணி நிறுத்தம் செய்வதாக அறிவித்தைத் தொடர்ந்தே இந்த முரண்பாடு தோன்றயுள்ளது.
சுகாதார வைத்திய அதிகாரிக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் இடையிலான தனிப்பட்ட பிரச்சினை பொலிஸாரின் முன்பாக இணக்கமாகத் தீர்க்கப்பட்டது. எனினும் அதன் பின்னர் அரச மருத்துவ அதிகாரிகள் கொடுத்த அழுத்தத்தின் பேரில் இந்தப் பிரச்சினை மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.
இந்தப் பிரச்சினை நீதிமன்ற விசாரணையில் இருக்கத்தக்க தாக, இன்று அரை நாள் அடையாளப் பணி நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் அலுவலகத்தின் கீழ் வரும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்களின் சங்கம் அறிவித்திருந்தது.
சுகாதார வைத்திய அதிகாரியை மிரட்டினார் என்று கூறப்படும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச சபைகளின் கீழ் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வருமாறு வலியுறுத்தியும் இந்தப் போராட் டத்தை நடத்துவதாக சங்கம் அறிவித்துள்ளது.
சங்கத்தின் அழுத்தத்தை அடுத்து பிரதேச சபைகளின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை உடனடியாக சுகாதாரத்த திணைக் களத்துக்கு விடுவிக் குமாறு உத்தர விடப்பட்டது. அதனை எதிர்த்தே தற்போது பிரதேச சபைகளின் தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். (உ-86)

## போலி தாலிக்கொடி வைத்து அசல் நூதனமாகத் திருட்டு

*மானிப்பாயில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மார்ச் 14
வீடொன்றினுள் புகுந்த திருடர் தாலிக்கொடியை எடுத்து அதிலிருந்த தாலியைக் கழற்றி போலியான தாலிக் கொடியில் தாலியை இணைத்து வைத்து அசல் தாலிக் கொடியுடன் மாயமாகியுள்ளனர். இந்த நூதனத் திருட்டு மானிப்பாய் நகரை அண்மிய பகுதியில் நடந்துள்ளது.
குறித்த வீட்டார் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்றிருந்தனர். வெளியே சென்றுவிட்டுத் திரும்பியவர்கள் வழமையாக நகை வைக்கும் இடத்தில் இருந்த மாற்றத்தைக் கண்டு சந்தேகம் கொண்டு பார்த்த போதே இந்த நூதனத் திருட்டை கண்டுபிடித்துள்ளனர். அங்கிருந்த வேறு நகைகள் எவையும் திருடப்படவில்லை.
உடனடியாக இதுகுறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டபோதும், வீட்டுக்காரர் நகைகளைத் தொட்டு விட்டதால் திருடியவர்களின் கைரேகையை அவர்களால் பதிவு செய்யமுடியாது போனது.


**“தாலிக்கொடியை எடுத்து அதிலிருந்த தாலியைக் கழற்றி போலியான தாலிக் கொடியில் தாலியை இணைத்து வைத்து அசல் தாலிக் கொடியுடன் மாய மாகியுள்ளனர்**

இந்தத் திருட்டுத் தொடர்பாக தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், இது தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-4-50)

# திடீரெனப் பற்றி எரிந்த சொகுசு பஸ் நாசம்

*பயணிகள் தப்பினர்; உடைமைகள் அழிவு; புளியங்குளத்தில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மார்ச் 14
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் சொகுசு பஸ் திடீரெனத் தீப்பற்றியதால் 45 இற்கும் மேற்பட்ட பயணிகள் மயிரிழையில் உயிர்தப்பினர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை வவுனியா கனகராயன் குளம் குறிசுட்டான் குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் - கொழும்புக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் சொகுசு பஸ் நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தது.
நேற்று அதிகாலை 3.45 மணியளவில் கனகராயன்குளம் பகுதியில் பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக பஸ்ஸின் பின்பகுதி திடீரென தீப்பற்றிக்கொண்டது.



திடீரெனத் தீப்பற்றிய சொகுசு பஸ்

இதனையடுத்து பயணிகள் 45 பேர் வரையானோர் பஸ்ஸில் இருந்து அவசர அவசரமாக இறங்கித் தப்பினர்.
எனினும் பயணிகளது உடைமைகள் தீக்கிரையாகியுள்ளன. தீயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியாது போனதால் பஸ் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.
சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தொழில்நுட்பக் கோளாறு காரண மாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
(ஒ-421-422-18)


## பிரதேச சபைக்குள் ஓடி ஒளித்த சைக்கிள் திருடன் மாட்டினான்

யாழ்ப்பாணம், மார்ச் 14
சைக்கிள் திருடிய கள்வனைத் துர்த்திச் சென்றபோது, அவன் சைக்கிளையும் போட்டுவிட்டுச் சங்கானை பிரதச செயலகத்தினுள் நுழைந்து தப்பிக்க முற்பட்டபோது பொதுமக்களிடம் மாட்டிக் கொண்டான். அவனுக்கு 'உரிய' கவனிப்பு வழங்கிய மக்கள் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
சங்கானைச் சந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருடிக் கொண்டோடியபோது அங்கிருந்தவர்கள் திருடனை விரட்டிச்சென்றுள்ளனர். ஓடி ஓடிக் களைத்த கள்வன் வேறு வழியின்றி சைக்கிளையும் போட்டுவிட்டு சங்கானைப் பிரதேச செயலகத்துக்குள் புகுந்து மறைந்து கொள்ள முற்பட்டுள்ளான். ஆனாலும் துரத்திக்கொண்டு வந்தவர்கள் சரியாக அவனை இனங்கண்டுகொண்டு 'உரிய' கவனிப்புகளை வழங்கினர்.
பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-4)

# வவுனியா மூன்றுமுறிப்பில் தாக்கப்பட்டது தனியார் பஸ்

*சாரதி, நடத்துநர் காயம்; இ.போ.சவினர் விசாரணையில்*

வவுனியா,மார்ச் 14
மட்டக்களப்பு, கல்முனையில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பஸ்மீது வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் வைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது இது தொடர்பாக தெரிய வருவதாவது:-
நேற்று அதிகாலை 4 மணியளவில் மட்டக்களப்பு, கல்முனையில் இருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ், வவுனியா மூன்றுமுறிப்பை அண்மித்த வேளை வவுனியா போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மேற்படி பஸ்ஸை வழிமறித்து சாரதி மீதும் நடத்துநர் மீதும் தாக்குதல் நடத்தி பஸ்ஸையும் சேதப்படுத்தி உள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் சாரதியான எஸ்.வசந்தன் (வயது-40), நடத்துநரான எஸ்.கஜமுகன் (வயது-35) ஆகியோர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அதிகாலை கல்முனையில் இருந்து தனியார் பஸ் புறப்பட்ட வேளை, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் வவுனி யாவை நோக்கிப் புறப்பட்டுள்ளது.
இவ்விரு பஸ்களின் நடத்துநர்கள், சாரதிகளுக்கு இடையிலே போக்குவரத்து நேரம் தொடர்பாக முறுகல் நிலை ஏற்பட்டு வாழைச் சேனைப் பகுதியில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.
அதை அடுத்து வவுனியாவை அண்மித்த வேளை மீண்டும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப் பாக மாறியது.



சேதத்துக்குள்ளான பஸ்

தாக்குதலுக்குள்ளான பஸ், வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள் எப்பட்டு வருகின்றன.
(ஒ-421)

## திக்கம் கிராமச் சங்கக் கட்டடத்தை புனரமைக்க ரூ.5 லட்சம் ஒதுக்குக

*யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை*

வடமராட்சி, மார்ச் 14
திக்கம் கிராமிய அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்ய 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கித் தருமாறு சங்கம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இந்தக் கோரிக்கையில் ;
எமது கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் ஒரு கிராமிய செயலகம் போல இயங்கி கிராம மக்களுக்கு அளப்பரிய சேவைகளை வழங்கி வருகின்றது.
இந்தக் கட்டடத்தில் திக்கம் உப அஞ்சல் அலுவலகம், ஜே/396 பிரிவுக்கான கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உத்தியோகத்தர் ஆகியோருக்கான அலுவலகங்கள் மற்றும் திக்கம் பாலர் பாடசாலை , வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பாற்சாலை ஆகிய 6 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

**கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் ஒரு கிராமிய செயலகம் போல இயங்கி கிராம மக்களுக்கு அளப்பரிய சேவைகளை வழங்கி வருகின்றது.**

இவ்வாறான கிராமிய செயலகக் கட்டடத்தில் திருத்த வேலைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கோருகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-173)

# இலங்கை அரசுடனே தமிழர் பேச வேண்டும்

## அதுவே தீர்வைத் தரும் என்கிறார் குர்ஷித்

தமிழர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசுடனே பேச்சு நடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

லண்டனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம். இலங்கைத் தமிழர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச வேண்டும். அப்போதுதான் இலங்கை அரசை இது தொடர்பாக நாம் உந்தித் தள்ள முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கஞ்சா வைத்திருந்தமை; சந்தேக நபருக்கு பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்.நகரில் 1.8 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்படிருந்த நபர் யாழ்.மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் குறித்த சந்தேகநபர் தொடர்பான பிணை விண்ணப்பம்பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோதே பிணை அனுமதி வழங்கப் பட்டது.

கஞ்சாபோதைப்பொருள் வைத் திருந்தார் என்ற குற்றச்சாட் டின்பேரில் கடந்த வருடம் பெப்ரவரி 25 ஆம் திகதி மீனாட்சி அம்மன்வீதி கொழும்புத் துறையில் வைத்துச் சந்தேகநபர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த செல்வராஜா விஜயகுமார் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று நேற்றுப் பிணை அனுமதி வழங்கியது. 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் சந்தேக நபர் விடுவிக்கப் பட்டார். (ற-4)

# நாளை காலை முதல் மாலை வரை மின் தடை

யாழ்ப்பாணம்,மார்ச் 14



கோப்புப்படம்

புதிய உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோயில் வீதி, நல்லூர், இராசாவின் தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன் வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி -

பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயில் சந்தி வரை, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, நொதேன் கொம்பனி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி, தட்டார்தெரு - நாச்சிமார் கோயில் வரை,

ஐயனார் கோவில் வீதி, கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோயில் - சிவன் கோயில், கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தி - சிவன் வடக்கு வீதி, சிவன் பண்ணை வீதி, சிவப்பிரகாசம் வீதி, வைத்தீஸ்வரா சந்தி - சீனிவாசகம் வீதி -

காதி அபூபக்கர் வீதி, பி.ஏ. தம்பி வீதி, ஓடை லேன், மணிக்கூட்டு வீதி, கன்னாதிட்டி சந்தி,கன்னாதிட்டி வீதி, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதி - நல்லூர் கோயில், கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி, சங்கிலியன் வீதி, கனகரத்தினம் வீதி, நாவலர் வீதி, ஆனந்தன் வடலி வீதி, புங்கன் குளம் வீதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாயன்மார்கட்டு, நல்லூர் குறுக்கு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

முல்லைத்தீவு மாவட்டத்திலே கல்வியிலும்
விளையாட்டிலும் சிறந்து விளங்கும் எமது
மு/ விசுவமடு மகாவித்தியாலயம் 2014 ஆம்
ஆண்டுக்கான புதுக்குடியிருப்பு கோட்ட மட்ட
மெய்வன்மைப் போட்டியில் முதலிடத்தினை பெற்றுள்ளது
மகிழ்ச்சிக்குரியது.
இவ் வெற்றியைப் பெற்றுத் தந்த வீரர்களை
பாராட்டுவதுடன் இவ் வெற்றிக்காக உழைத்த
பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர்,
பாடசாலை சமூகத்தினரையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

தோழர்கள் விளையாட்டுக்கழகம்
விசுவமடு.


# ஜே.வி.பியின் நிகழ்வில் இனந்தெரியாதோர் தாக்குதல்

## 12 பேர் காயம்

கொழும்பு, மார்ச், 14

பாணதுறைப் பகுதியில் ஜே.வி.பியின் சோசலிச கலைச் சங்கம் நடத்திய வீதி நாடகத்தின் நிகழ்வின் போது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில 12 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 2 மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றது.

பாணதுறை பஸ் நிலையத்தில் சோசலிஸ கலைச் சங்கத்தினர் வீதி நாடக நிகழ்வை நடத்திய போது அங்கு வந்த அரச ஆதரவு குழுவினரே தம்மை தாக்கியதாக ஜே.வி.பியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை பாணதுறை பொலிஸார் மேற்கொண்டுவருன்றனர். (ஜ-10)


## HOLY FAMILY CONVENT JAFFNA
## PAST PUPILS' ASSOCIATION
## ANNUAL GENERAL MEETING-2014

All members of the above Association are invited for the Annual General Meeting which will be held on **16th of March 2014 at 3.30 p.m.** in the School hall. Members are kindly requested to renew their membership during the Meeting. The Past Pupils who wish to join the Association could do so at the beginning of the Meeting.

We request the members to contribute generously to the Fund Raising Raffte to be conducted by the Association.

**President,**
**Principal, Holy Family Convent Jaffna.**

(45729)(5.6)


# ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர் பிள்ளைகளுக்கு வெகுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுடைய பிள்ளைகளில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குப் பண வெகுமதிகள் வழங்கப்படவுள்ளன. அதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அதற்கான விண்ணப்பப் படிவங் களை இல.70, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது www.etfb.lk என்ற இணையத் தள முகவரியில் தரவிறக்கம் செய்து கொள்வதன் மூலமோ பெற்றுக் கொள்ள முடியும்.

2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளில் சித்தியடைந்த, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5 ஆயிரம் பேருக்கு தலா 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வெகுமதிகள் அவர்களின் உயர் கல்விக்காக வழங்கப்படவுள்ளன.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் "புலமைப் பரிசில் அலுவலர், புலமைப் பரிசில்கள் பிரிவு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, இல. 92, கிருள வீதி, நாரஹென் பிட்டி, கொழும்பு - 5" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ற-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
15 . 08 . 1951

மறைவு
12 . 02 . 2014

அமரர் **சின்னத்தம்பி கனகரத்தினம்**

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே எமை வளர்த்து பாசமழை பொழிந்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இறைவனடி சேர்ந்தீரோ என்றும் நாம் மறுவோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

எமது குடும்பத் தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து, அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (14.03.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

குடும்பத்தினர்.

ஆவரங்கால் கிழக்கு புத்தூர். க. மணிவண்ணன் (மகன்)



## விற்பனைக்குண்டு

CEYGRA KZ xxxx இலக்க CHINA 3 WHEEL (மூன்று சில்லு) கார் விற்பனைக் குண்டு. **தொடர்பு : 077 2220604**



## நாய்க்குட்டி விற்பனைக்கு

மானிப்பாயில் 45 நாள் நிரம்பிய கிரேடன்(CRETDANE) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774080094 (சு...)


## கண்ணீர் அஞ்சலி



நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர் காலஞ் சென்ற **செல்லையா நடராசாவின்** அன்பு மனைவி

திருமதி **காந்திமதி நடராஜா**

அவர்களின் மறைவையொட்டி மேற்படி தேவஸ்தானத்தின் பரிபாலன சபையினர் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கின்றோம்.

பரிபாலனசபை
நுணாவிற்குளம் கண்ணகைஅம்மன்
தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்

### கந்தவனம் கணபதிப்பிள்ளை



காந்தியூர் புலோலி தென்மேற்கைச் சேர்ந்த கந்தவனம் கணபதிப் பிள்ளை நேற்று (13.03.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக்கணவரும் செல்வராசா (வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்தியசாலை), கணேசராசா (மேஸ்திரியார்), நட்ராசா (மாவட்டப்பதிவாளர் - கச்சேரி மன்னார்), வைகுந்தராசா (ஆசிரியர் கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்), அருந்தவமலர் (முகாமை உதவியாளர் வடமராட்சி கல்வி வலயம்), வசந்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவாஜினி, செல்வரதி, விஜயலதா (முகாமை உதவியாளர் வலயக் கல்வி அலுவலகம் மன்னார்), ரேவதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் பளை), ஸ்ரீவிக்கினேசராசா (சாலைப் பரிசோதகர் கிளிநொச்சி டிப்போ) ஆகியோரின் அன்புமாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காந்தியூர் ... தென்மேற்கு, புலோலி. 077 3644601

தகவல்
குடும்பத்தினர்.

## 'கீதை காட்டும் பாதை' இன்று நல்லூரில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன்மணிமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியிலிருந்து 7.30 மணி வரை 'கீதை காட்டும் பாதை' என்ற கருப்பொருளி லான அருளுரையும், 15 நிமிடங்களுக்கு அது தொடர் பான சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகளால் நடத்தப்பட உள்ளது. (ஓ)

## சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் நாளை

நீர்வேலி, மார்ச் 14

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்ததினம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையமும் தாவடி ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதியும் இணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீமத் சுவாமி ரிதமயானந்தா கலந்து கொள்வார்.

பிரம்மஸ்ரீ கு.தியாகராச குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் தாவடி ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் "யாருக்கு யார் சொந்தம்" என்றநாடகமும் இடம்பெறும்.


## செயற்கை அவயவம்; நடமாடும் சேவை கிளிநொச்சி, முல்லையில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மன்னார் மெத்தா செயற்கை அவயவ நிறுவனத்தினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது

கிளிநொச்சியில் எதிர்வரும் 23 ஆம் ,24 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கிளிநொச்சி கருணா நிலையத்திலும், முல்லைத்தீவில் எதிர்வரும் 25ஆம்,26 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கள்ளப்பாடு மீனவர் கூட்டுறவு சமாசத்திலும் நடமாடும் சேவை நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையில் செயற்கை அவயவங்களைப் பொருத்த வேண்டியவர்கள் பங்கு பற்றி பயன்பெறலாம் என்று மெத்தா நிறுவனம் அறிவித்துள்ளது. (ஒ-14)



நயினாதீவு - குறிகாட்டுவான் கடல் போக்குவரத்துக்கான கடற்பாதை நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் பொதுமக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. நயினாதீவில் இருந்து முதன் முதலில் பாதை பெருமளவு பயணிகளுடன் குறிகாட்டுவான் நோக்கிச் செல்வதைக் காணலாம். (ஒ-7)

# துன்னாலை மயானத்தில் கட்டப்பட்ட மதிலையும், கட்டடத்தையும் அகற்றுக

### நடவடிக்கை எடுக்கக் கோரி முதலமைச்சருக்கு மனு

வடமராட்சி. மார்ச் 14

குழப்பத்தை ஏற்படுத்தும் விதத்தில் துன்னாலை மத்தி வேருண்டை மயானத்தில் அனுமதி இன்றி கட்டப்பட்ட சுற்றுமதிலையும் மடத்தையும் இடித்து அப்புறப்படுத்துமாறு அம்மயானத்தை பயன்படுத்துவோரில் ஒரு சாரார் வடமாகாண முதலமைச்சர், உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள், துன்னாலை மத்திய கிராமசேவையாளர் பிரிவில் வேருண்டை மயானம் அமைந்துள்ளது. 24 பரப்பைக் கொண்ட இந்த மயானக் காணி பிரதேச சபைக்குச் சொந்தமானது.

இந்த மயானத்தில் சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களும் தங்களுக்கு ஏற்ற இடத்தில் தகனக்கிரியைகளைச் செய்து வந்துள்ளார்கள். பல நூற்றாண்டு காலத்துக்கு முற்பட்ட இந்த மயானத்தில் ஒரு கால கட்டத்தில் அதன் கிழக்குப் பகுதியில் மண் அகழ்ந்து எடுக்கப்பட்ட காரணத்தால் அப்பகுதி பள்ளமாக உள்ளது. இதன் மேற்குப் புறத்தில் ஒரு கிணறும், மயான மடமும் அமைந்துள்ளன.

பிரதேச சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் 2011 ஆம் ஆண்டுக்குப் பின் மயானத்தின் நடுப் பகுதியில் ஒரு சாராரால் சுற்றுமதில் அமைத்து அதற்குள் ஒரு மடம், ஒருகுழாய்க் கிணறு போன்றவை அமைக்கப்பட்டு அங்கு செல்வதற்கு 150 மீற்றர் நீளமான கொங்கிறீற் பாதையும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மயானத்தை துன்னாலை மத்தி, நெல்லியடி கிழக்கு, கட்டைவேலி, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு, துன்னாலை மேற்கு, துன்னாலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாவித்து வருகின்றனர்.

ஆனால் புதிதாகக் கட்டப்பட்ட சுற்றுமதில் மற்றும் மடம் சம்பந்தமாக கரவெட்டி பிரதேச சபையிடம் அனுமதி கோரப்படவில்லை. அனுமதி வழங்கப்படவுமில்லை என பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். இது குறித்து பிரதேச சபையின் பல உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறியிருந்தோம். மயானத்தில் அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள கட்டடம் இடிக்கப்படமாட்டாது எமக்குக் கூறப்பட்டது.

இது தொடர்பாக பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதி பெறாமல் மயானத்தை பிரித்துக் கட்டியவர்கள் சமுகம் கொடுக்கவில்லை. இத்தகைய செயலை நாம் கண்டிப்பதோடு இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (ஒ-173)

## ரூ.6 ஆயிரம் அபராதம்

வலி. வடக்கு, மார்ச் 14

இரண்டாயிரம் மில்லிகிறாம் கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் ஆறாயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள ஒருவர் கஞ்சாவை வைத்திருந்த வேளையில் இளவாலைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இத்தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. (ஒ-86)

## கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா

நெல்லியடி. மார்ச் 14

கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி நிகழ்வுக்கு மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கு.ஸ்ரீபாஸ்கரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

எனவே பங்குபற்றும் அனைத்து விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும், விளையாட்டு ஆர்வலர்களையும் அன்றைய தினம் குறித்த நேரத்துக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ)

## மீனவர்களின் தொழில் வளர்ச்சிக்கு ரூ.30 லட்சம் பெறுமதியான வலை, வள்ளம்

### இன்று கிளாலி இறங்குதுறையில் கையளிப்பு

பூநகரி, மார்ச் 14

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள மீனவர்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ள ஜெசாக் நிறுவனம், இன்று வெள்ளிக்கிழமை மாலை கிளாலி இறங்குதுறையில் வைத்து 30 லட்சம் ரூபா பெறுமதியான வலை, வள்ளம், இயந்திரம் போன்ற மீன்பிடி உபகரணங்களை மீனவர்களுக்கு வழங்கவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் உள்ள பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் கிளாலி அகத்தி நகர், புலோப்பளை கிழக்கு, சங்கத்தான் வடக்கு ஆகிய நான்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 300 மீனவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்த முன்வந் துள்ள ஜெசாக் நிறுவனம், முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவி வருகின்றது. இதன் அடிப்படையில் கிளாலி, அகத்தி நகர், புலோப்பளை கிழக்கு ஆகிய மூன்று சங்கங்களைச் சேர்ந்த 12 பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் 3 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் இன்று மாலை கிளாலி இறங்கு துறையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை பிரதிப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-115)




## முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவுப் பொருள்கள்

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கொடிகாமம் வீதியில் உள்ள அன்னை திரேசா முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவுப் பொருள்களை வழங்கியுள்ளனர். சத்துணவுகளை வழங்கிய கழகத்தின் தலைவர் த.இரவீந்திரன், செயலாளர் த.கந்தையா, உறுப்பினர் செந்தூரன் ஆகியோருடன் முன்பள்ளிச் சிறார்களும், ஆசிரியைகளும் காணப்படுகின்றனர். (வ-9)

# உ.கிழங்கு செய்கையின் ஆர்வத்தால் மிளகாய்ச் செய்கையைக் கைவிட்ட விவசாயிகள்

அச்சுவேலி, மார்ச் 14

யாழ்.மாவட்டத்தில் காலபோக மிளகாய் பயிர்ச் செய்கை வழமையை விட இம்முறை வீழ்ச்சி கண்டுள்ளது. யாழ்.மாவட்டத்தின் உத்தேச இலக்கு 900 ஹெக்ரேயராக இருந்த போதிலும் அதில் 600 ஹெக்ரேயர் அளவிலேயே இம்முறை மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக விவசாயத் திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இதற்குக் காரணம் விவசாயிகள் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையில் அதீத ஆர்வம் கொண்டமையும், காலநிலை முரண்பாடும் தான் என்று கூறப்படுகின்றது.

மிளகாய்ப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெருமளவில் மிளகாய் அறுவடை மூலம் கணிசமான அளவு வருமானம் ஈட்டுகின்றனர். தம்புள்ளை மத்திய சந்தை, கொழும்பு சந்தையில் பச்சை மிளகாயின் விலை அதிகரித்துள்ளதால் வெளிமாவட்ட வியாபாரிகள் "படி" வாகனத்தின்மூலம் உள்ளூர் தரகர்களின் உதவியுடன் தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று பச்சை மிளகாயை கொள்வனவு செய்கின்றனர்.

மிளகாயை பழமாக்கி காயவைத்து செத்தலாக விற்பனை செய்வதிலும் பார்க்க, பச்சை மிளகாயாக அறுவடை செய்வதன்மூலம் 40 வீதத்துக்கு குறையாத மேலதிக வருமானம் விவசாயிகளுக்கு கிடைப்பதோடு, மிளகாயின் விளைச்சலும் கூடியளவு கிடைக்கின்றது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பச்சையாக மிளகாயை பிடுங்குவதால் மிளகாய்ச் செடி பூத்துக் காய்ப்பது அதிகரிக்கின்றது என்று கூறப்படுகின்றது.

பச்சை மிளகாய் ஒரு கிலோ 75 முதல் 90 ரூபா வரையான விலையில் கொள்வனவு செய்யப்படுகின்றது. அத்துடன் எந்தவிதமான கழிவு, வரி அறவீடு இன்றி பணம் செலுத்தப்படுவதால் விவசாயிகள் சந்தைக்கு எடுத்துச் சென்று அலையாமல் விவசாய முயற்சியில் தமது பெருமளவு நேரத்தைச் செலவிட வாய்ப்புக் கிட்டுகிறது.

காலபோக மிளகாய் பயிர்ச் செய்கையில் எம்.ஐ.கிறீன் இனம் அதிகளவில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. அத்துடன் கே.ஏ -2, எம்.ஐ.- 2 இனங்களும், உள்ளூர் கலப்பு இனங்களான மாதகல் கலப்பு, கைதடிக் கலப்பு, அனலைதீவு கலப்பு ஆகிய இனங்களும் பயிரிடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

எம்.ஐ.கிறீன் இனம் நோய் எதிர்ப்புத் தன் மையுடன் அதிக விளைச் சலை கொடுப்பதோடு அதன் கவர்ச்சிகரமான தோற்றம் சந்தைப்படுத்தலுக்கு வாய்ப்பாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-11)



ரயிலில் பிரசாரம் செய்யும் கேஜ்ரிவால்

# ரயில் பயணம் செய்து கேஜ்ரிவால் பிரசாரம்

## கறுப்புக் கொடி காட்டி இளைஞர்கள் எதிர்ப்பு

மும்பை,மார்ச் 14
மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் மக்களவைத் தேர்தலில் ஆம் ஆத்மி வேட்பாளரை ஆதரித்து அந்தக் கட்சியின் தலைவர் அர்விந்த் கேஜ்ரிவால் பிரசாரம் செய்தார். உள்ளூர் ரயிலில் அவர் பயணம் செய்ததால் ஏற்பட்ட நெரிசலால் மக்கள் அவதிக்குள்ளாயினர்.

மும்பை புறநகர்ப் பகுதியான அந்தேரியிலிருந்து சர்ச்கேட் வரை உள்ளூர் ரயிலில் பயணம் செய்து அர்விந்த் கேஜ்ரிவால் தேர்தல் பிரசாரம் செய்தார். சர்ச்கேட் நிலையத்தில் கேஜ்ரிவால் இறங்கியதும், அவரை வேடிக்கை பார்க்க மக்களும் தொண்டர்களும் குவிந்ததால்பெரும்நெருக்கடிஏற்பட்டது.


### கறுப்புக் கொடி

அங்கு சில இளைஞர்கள் கேஜ்ரிவால் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கறுப்புக் கொடி காட்டினர். நாங்கள் எந்த அமைப்பையோ கட்சியையோ சேர்ந்தவர்கள் அல்ல. தனது பேட்டியின் குறிப்பிட்ட சில பகுதிகளை அதிகமாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும்படி செய்தியாளரிடம் கேஜ்ரிவால் வேண்டுகோள் விடுக்கும் காட்சியை வீடியோவில் பார்த்தோம். அதனால் அதிர்ச்சியடைந்து அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகக் கறுப்புக் கொடி காட்டினோம் என அந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக ரயிலில் அவர் பயணம் செய்த போது, செய்தியாளர்கள் கேஜ்ரிவாலை நெருங்கிப் பேட்டி எடுக்க முடியாத வகையில் கட்சி நிர்வாகிகள் அவரைச் சூழ்ந்து வளையம் போல் நின்றிருந்தனர். பிற்பகலில் நடைபெறவிருந்த செய்தியாளர் சந்திப்பையும் கேஜ்ரிவால் தவிர்த்து விட்டார். சர்ச்கேட் ரயில் நிலையத்தில் ஆம் ஆத்மி தொண்டர்கள் முண்டியடித்து வெளியேறியதால், அங்கு வைக்கப்பட்டிருந்த கருவிகள் சில சேதமடைந்தன. (த)

# டில்லி வன்புணர்வு வழக்கில் நால்வருக்கும் தூக்கு உறுதி

## டில்லி உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு



தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் நால்வர்

புதுடில்லி,மார்ச் 14
புதுடில்லி மருத்துவ மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில், குற்றவாளிகள் 4 பேரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்து டில்லி உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.


நால்வரின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்து வந்த டில்லி உயர் நீதிமன்ற நீதிபதிகள் ரேவா கேத்ராபால், பிரதீபா ராணி தலைமையிலான அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியது. டில்லியில் கடந்த ஆண்டு டிசெம்பர் 16 ஆம் திகதி ஓடும் பஸ்ஸில் 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட மருத்துவ மாணவி, சிகிச்சை பயன் அளிக்காமல் உயிரிழந்தார்.

இந்த வழக்கில் ஒரு குற்றவாளிக்குச் சிறுவர் என்ற அடிப்படையில் 3 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது சிறுவர் நீதிமன்றம். ராம்சிங் என்ற முக்கிய குற்றவாளி, திகார் சிறையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இதனிடையே, மற்றைய 4 குற்றவாளிகளான முகேஷ் (வயது-26), அக்ஷய் தாக்கூர் (வயது-28), பவன் குப்தா (வயது-19), சர்மா (வயது-20) ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதித்து, டில்லி சிறப்பு நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் 13 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இந்தத் தூக்குத் தண்டனையை எதிர்த்துக் குற்றவாளிகள் நால்வரும் டில்லி உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர்.

இந்த நிலையில், குற்றவாளிகள் நால்வரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்து டில்லி உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. (த)



இந்தியாவில் பொதுத் தேர்தல் பிரசாரம் படுசூடாகவுள்ளது. வேட்பாளர்களும் கட்சிகளும் தேர்தல் பிரசாரத்துக்காக பல்வேறு உத்திகளையும் புதிய முறைகளையும் கையாண்டு வருகின்றனர். இந்தியாவின் பிரதமர் வேட்பாளராக பா.ஜ.கவின் சார்பில் போட்டியிடும் நரேந்திர மோடியின் பிரசாரக் கூட்டங்களில் தேநீர் வழங்கப்படுகிறது. இந்தத் தேநீர் வழங்கப்படும் கோப்பைகளிலும் மோடியின் படம் அச்சிடப்பட்டுள்ளது. (த)

# பிரதமருடன் அழகிரி திடீர் சந்திப்பு



அழகிரி

புதுடில்லி,மார்ச் 14
முன்னாள் மத்திய அமைச்சரும் தி.மு.க முன்னாள் தென் மண்டல அமைப்புச் செயலாளருமான மு.க.அழகிரி டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் நேற்றுக் காலை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது அழகிரியுடன் கே.பி.ராமலிங்கம் உடன் இருந்தார். சுமார் 15 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிகிறது.

சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அழகிரி, தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி முறிவு குறித்துப் பிரதமர் மன்மோகன் சிங் வருத்தம் தெரிவித்ததாகவும் பதிலுக்குத் தாமும் வருத்தத்தைப் பதிவு செய்ததாகவும் கூறினார். 2009 இல் இருந்து 2013 வரை மத்திய அமைச்சரவையில் பணியாற்றத் தனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்ததாகவும் கூறினார். மதுரை விமான நிலையத்துக்கு முத்துராமலிங்க தேவர் பெயரை வைக்க வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

கடந்த 3 தினங்களாகவே பிரதமரைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்ததாகவும் அதனை ஒட்டியே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளதாகவும் அழகிரி கூறினார்.

புதிய கட்சி தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டபோது, இது குறித்து ஆதரவாளர்களுடன் ஆலோசித்து 2 மாதங்களுக்குப் பின்னரே முடிவெடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

கட்சியில் இருந்து தற்காலிமாக நீக்கப்பட்டுள்ள அழகிரியின் ஆதரவாளர்களின் பெயர் அண்மையில் தி.மு.க வெளியிட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவில்லை. (த)

# கட்சி மாறும் காங்கிரஸ் தலைவர்கள்

புதுடில்லி,மார்ச் 14
வட மாநிலங்களில் அறிவிக் கப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலில் அதிருப்தி அடைந்த காங்கிரஸ் தலைவர்கள் கட்சி மாறத் தயாராகியுள்ளனர்.

இதில் பீஹார், ஜார்க்கண்ட் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் சிலர் வேறு கட்சிகளுடன் தொடர்பு கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை காங்கிரஸ் வெளியிட்ட முதல் வேட்பாளர் பட்டியலில் ஜார்க்கண்டின் முக்கிய தலைவரான சுபோத் காந்த் சஹாய் போன்ற சிலரது பெயர்கள் அறிவிக்கப்படவில்லை. இதற்கு டில்லி தலைமையிடம் முன்னாள் மத்திய அமைச்சரான சுபோத் அதிருப்தியை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

இவரைப்போல, ஜார்க்கண்டில் அதிருப்தி அடைந்த ராஜ்ய சபையின் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரீபன் மராண்டி மற்றும் மற்றொரு காங்கிரஸ் தலைவர் மனோஜ் யாதவ் ஆகியோர் பாரதிய ஜனதாவுடன் தொடர்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பீஹாரில் பாடலிபுத்ராவில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விரும்பினார் அந்த மாநில மூத்த தலைவரான லலித் மோஹன்சிங். ஆனால், இந்தத் தொகுதியைக் கூட்டணிக் கட்சி தலைவரான லாலு தன் மகளான மிசா பாரதிக்கு ஒதுக்கிகொண்டார்.

எனவே, அதே பாடலிபுத்ராவில் போட்டியிட வேண்டி லலித், திரிணாமுல் காங்கிரசுடன் ரகசியப் பேச்சு நடத்தி வருவதாகக் கருதப்படுகிறது.

இந்த மாநிலத்தின் இன்னொரு தலைவரான மெஹபூப் அலி கெய்சரும் போட்டியிட வாய்ப்பு கிடைக்காமல், மம்தாவின் தொடர்பில் இருக்கிறார். இந்த நிலை, ராஜஸ்தான் மாநிலத்திலும் தொடர்கிறது. (த)

# சதானந்த கவுடா யாகம்

பெங்களூர்,மார்ச் 14
பெங்களூர் வடக்குத் தொகுதியில் பா.ஜ.க. சார்பாகப் போட்டியிடும் முன்னாள் முதல்வர் சதானந்த கவுடா தேர்தலில் வெற்றிபெற வேண்டி விடிய விடியச் சிறப்பு யாகத்தில் ஈடுபட்டார்.

பெங்களூர் தெற்குத் தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. பொதுச் செயலாளர் அனந்த் குமார் உட்பட பலர் அதில் கலந்துக் கொண்டனர். (த)

# தமிழகத்தில் வேட்பாளர்களுக்கு வலை விரிக்கும் காங்கிரஸ்

## ஓடி ஒளிக்கும் முக்கிய தலைவர்கள்

சென்னை,மார்ச் 14
தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்களை வலை வீசித் தேடிவருவதாகக் கூறப்படுகிறது.


தேர்தலில் போட்டியிடவில்லை என ஜி.கே.வாசன் அறிவித்து விட்டார். ப.சிதம்பரத்துக்கும் தேர்தலில் போட்டியிட விருப்பமில்லை என்கிறார்கள். மணி சங்கர் ஐயர் மயிலாடுதுறைக்குப் பதிலாக டில்லியைத் தேர்ந்தெடுப்பதாகக் கூறுகிறது காங்கிரஸ் வட்டாரம்.

தங்கபாலு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் ராகுல் உத்தரவிட்டால் தேர்தலில் போட்டியிட உள்ளனராம். என்றாலும் ராமநாதபுரத்தில் திருநாவுக்கரசர், ஆம்ஸ்ரோங்; சிதம்பரத்தில் மணிரத்தினம், தற்போதைய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நெல்லை ராமசுப்பு, கடலூர் கே.எஸ்.அழகிரி, காஞ்சிபுரம் விஸ்வநாதன் ஆகியோர் போட்டியிட ஆர்வம் காட்டுகின்றனர். கிருஷ்ணசாமி, சித்தன், அருண் உள்ளிட்டோர் வயதைக் காரணம் காட்டி ஒதுங்குவதாகக் கூறப்படுகிறது.

கேரளாவில் காங்கிரஸ் கூட்டணியிலிருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியில் உள்ளது. இந்திய யூனியன் காயிதே மில்லத் லீக் உட்படச் சில முஸ்லிம் அமைப்புகள் அ.தி.மு.க.வின் அணியில் உள்ளன. இதனால், காங்கிரஸுக்கு முஸ்லிம் வாக்குகள் கிடைப்பதும் சந்தேகமே.

எண்ணூர் துறைமுகத்துக்குக் காமராஜர் பெயரை வைத்தது நாடார் வாக்குகளை வசப்படுத்தும் என்று வாசன் நம்புகிறார். ஆனால், சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு கொள்கை, இலங்கை விவகாரம் போன்ற காரணங்களால் தமிழகத்தில் நாடார் சமூகத்தினர் ஆதிக்கம் செலுத்தும் இரண்டு வணிகர் அமைப்புகளும் காங்கிரஸ் மீது கோபத்தில் உள்ளன. (த)


## நியூயோர்க் கட்டட வெடிப்பின்போது 6 பேர் சாவு



தீயணைப்புப் பணி

நியூயோர்க், மார்ச் 14
நியூயோர்க் நகரில் இரண்டு அடுக்கு மாடிக் குடியிருப்புகள் வெடிப்பில் விழுந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் கூறுகின்றனர்.
இந்த வெடிப்பு எரிவாயு கசிந்ததால் ஏற்பட்டது என்று நியூயோர்க் நகர மேயர் பில் டெப்லேசியோ கூறினார்.
இன்னும் ஒன்பது பேரைக் காணவில்லை. சுமார் 24 க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர்.
வெடிப்பு நடந்தபோது பூகம்பம் போன்ற ஒரு சத்தம் கேட்டதாக அயலில் வசிப்பவர்கள் கூறினர்.
சுமார் 250 தீயணைப்புப் படை வீரர்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டனர். (த)

## வெனிசுலாவில் மீண்டும் வன்முறை



தொடரும் போராட்டம்

கரகாஸ், மார்ச் 14
வெனிசுலாவில் அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் தொடர்கிறது. வன்முறைகளால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது. அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சிக்கு எதிராகக் கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி முதல் பெரும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பாதுகாப்புப் படையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்வெடிக்கிறது. இம்மோதல் வன்முறையாக வெடித்து உயிரிழப்புக்குக் காரணமாகிறது.
இந்நிலையில் மாணவர்களும் அரசு எதிர்ப்பாளர்களும் மீண்டும் தீவிர போராட்டத்தில் ஈடு பட்டனர். இதில், கடந்த திங்கள் மாலை டானியல் டினோகோ (வயது-24) என்ற மாணவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (த)



துருக்கியின் அங்காரா நகரில் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. இதன்போது போராட்டக்காரர் ஒருவரைச் சுற்றி வளைத்துத் தாக்கும் பொலிஸார். (த)

# ரஷ்யாவின் படைகளை எதிர்க்கும் திட்டமில்லை

### உக்ரைன் அதிபர் பேட்டி




ஒலெக்ஸாண்டர் டர்க்கினாவ்

கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதா, வேண்டாமா என்பது பற்றி நாளை மறு தினம் பொது வாக் கெடுப்பு நடத் தப் போவதாக அறிவித்துள்ளனர்.

கிவி, மார்ச் 14
உக்ரைனின் கிரிமியா பகுதியில் உள்ள ரஷ்யப் படையினரை எதிர்த்துப் போரிடும் திட்டம் ஏதுமில்லை என்று உக்ரைன் அதிபர் ஒலெக்ஸாண்டர் டர்க்கினாவ் கூறியுள்ளார்.
இது தொடர்பாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்கு அதிபர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:
கிரிமியாவுக்கு எதிராக ராணுவ ரீதியான தாக்குதலை எங்களால் மேற்கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால், எங்களின் கிழக்கு எல்லைப் பகுதியில் பாதுகாப்பு அற்ற சூழ் நிலை ஏற்பட்டு விடும்.
கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதா, வேண்டாமா என்பது பற்றி நாளை மறு தினம் பொது வாக்கெடுப்பு நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர். இந்த வாக்கெடுப்பு நடவடிக்கை போலியானது. பொதுவாக்கெடுப்பின் முடிவை, கிரிமியாவில் அல்ல, ரஷ்யாவில் தான் தீர்மானிப்பார்கள். பெருமளவிலான கிரிமியாவைச் சேர்ந்த மக்கள், இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கமாட்டார்கள் - என்றார்.
இந்தப் பிரச்சினைக்குத் தூதரக ரீதியில் தீர்வு காண்பதற்கு ரஷ்யா மறுப்புத் தெரிவித்து வருகிறது. வெளியுறவுத் துறை அமைச்சகம் மூலமும், அரசு உயர் அதிகாரிகள் மூலமும் பேச்சு நடத்துவதற்கு ரஷ்யா ஒப்புக்கொள்ளவில்லை என்று டர்க்கினோவ் கூறினார்.
கிரிமியா பகுதியில் உள்ள ரஷ்யப் படையினர், உடனடியாக வெளியேறவேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்றம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக செனட் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உக்ரைனின் இறையாண்மையைப் பாதுகாக்க, ரஷ்யப் படையினரை அந்த நாட்டி லிருந்து வெளியேறவேண்டும். அவ் வாறு வெளியேற மறுத்தால், ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று செனட் சபை தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (த)

## உக்ரைனுக்கு ஆதரவு அமெரிக்கா அறிவிப்பு



பராக் ஒபாமா

வொஷிங்ரன், மார்ச் 14
ரஷ்யாவுடனான சர்ச்சையில் உக்ரைனுக்கு ஆதரவு வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உறுதியளித்துள்ளார்.
அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள உக்ரைனின் இடைக்காலப் பிரதமரிடம், பராக் ஒபாமா இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.
கிரைமியா பிராந்தியத்தில் இருந்து ரஷ்யா தமது துருப்பினரைத் திரும்பப் பெறாவிடின், சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை விளாடிமிர் புடின் எதிர்கொள்ள நேரிடும் எனப் பராக் ஒபாமா எச்சரித்துள்ளார்.
இதற்கு முன்னர் ஜி-7 நாடுகள் இவ்வாறான அச்சுறுத்தலை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
ஒருபோதும் தமது நாடு ரஷ்யாவிடம் சரணயடையாது என ஒபாமாவுடனான சந்திப்பின் பின்னர் உக்ரைனின் இடைக்காலப் பிரதமர் ஆர்செனி யட்சன்யுக் தெரிவித்துள்ளார்.
21 ஆம் நூற்றாண்டில் சர்வதேச சாசனங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மீறும் வகையில் உக்ரைனில் ரஷ்யாவின் ஆதிக்கம் மேலோங்குவது ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (த)

# மாயமான மலேசிய விமானத்தின் விமானி கடமை நேரத்தின்போது சிகரெட் புகைப்பவர்

### பயணி ஒருவர் அதிர்ச்சித் தகவல்

கோலாலம்பூர், மார்ச் 14
மாயமான மலேசிய விமானத்தின்விமானிஒருவர்விமானியறைக்குள் புகைப்பிடிக்கும் வழக்கம் உள்ளவர் என முன்னர் பயணித்த பயணி ஒருவர் தெரிவித்துள்ளார்.
பறிக் அப்துல் ஹமீட் என்ற குறித்த 27 வயதான விமானி தன்னையும் தனது நண்பி ஒருவரையும் விமானியறைக்குள் அழைத்துத் தம்முடன் அளவளாவியதாக அவர் தெரிவித்துள்ளார்.
2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தானும் தனது நண்பி ஒருவரும் பயணித்த விமானத்தைச் செலுத்திய ஹமிட் என்ற விமானி வரிசையில் நின்று கொண்டிருந்த தம்மை அவதானித்ததாகவும், தாம் விமானத்துக்குள் ஏறி அமர்ந்ததும் விமானப் பணியாள்களை அனுப்பி விமானி அறைக்குள் வருமாறு அழைத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.
விமானம் மேல் எழுகின்ற சந்தர்ப்பத்தில் இருந்து தரையிறங்கும் வரையான முழுப் பயணத்தையும் இந்த இரு நண்பிகளும் விமானி அறையினுள்ளேயே கழித்துள்ளனர்.
விமானி அறையினுள் பயணிகள் அனுமதிக்கப்படுவது முற்றிலும் தவறானது என்பது குறிப்பிடத்தக்கது.
அன்று விமானத்தைச் செலுத்திய ஹமீட்டும் மற்றைய விமானியும் நட்புடன் பழகியதை நினைவு கூர்ந்த றூஸ் என்ற அந்த பெண், அவர்கள் புகைப் பிடித்ததையும் அவர்களின் செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார். தன்னையும் தனது நண்பியான மாரீயையும் விமானிகள் இருவரும் கோலாலம்பூரில் தங்க வேண்டும் என்றும் இரவு விருந்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அன்புக் கோரிக்கை விடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (த)



பயணிகளுடன் விமானிகள்




துணிக்கடையில் ஒபாமா....

## மனைவி , மகள்களுக்காக துணிகள் வாங்கிய ஒபாமா

நியூயோர்க், மார்ச் 14
நியூயோர்க்கில் உள்ள ஒரு புகழ்பெற்ற துணிக்கடையில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தனது மனைவி, மகள்களுக்காகத் துணிகள் வாங்கினார்.
முன்னறிவிப்பு ஏதுமின்றி ஒபாமா அந்தக் கடைக்குச் சென்றதால் அங்கிருந்த வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.
அமெரிக்க அதிபர் என்ற மிகப் பெரிய பொறுப்புக்கு நடுவிலும் தனது குடும்பத்தினர் மீது மிகுந்த அக்கறை செலுத்தி வரும் ஒபாமா, சிறந்த குடும்பத் தலைவராக விளங்குகிறார்.
இந்நிலையில், மன்ஹற்றன் நகரில் உள்ள புகழ்பெற்ற ஜி.ஏ.பி துணிக் கடைக்குள் அவர் செவ்வாய்க்கிழமை திடீரென சென்றதாக வெள்ளை மாளிகை செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.
பின்னர் அங்கிருந்த விற்பனையாளரிடம் தனது குடும்பத்தினருக்காகத் துணி எடுக்கப்போவதாக ஒபாமா கூறியுள்ளார்.
இதையடுத்து, அங்கிருந்த புதிய துணி வகைகளைப் பணியாளர் ஒபாமாவுக்குக் காட்டியுள்ளார்.
மகள்களுக்காகச் சாம்பல் மற்றும் வெள்ளை நிறங்களில் கோடுபோட்ட சுவெட்டர்களை அவர் தேர்ந்தெடுத்தார். (த)

# புலமைப்பரிசிலில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 14

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் தலைமையில் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் கிளி நொச்சி தேசிய சேமிப்பு வங்கியால் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி.வி.கிறேசன், வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சின்மயா மிஷன் சுவாமி ஜாக்ரத் சைதன்யா, கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் அ.பங்கையற்செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டு சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (ஓ)

**TV கள் மலிவு விற்பனை**

எங்குமே கிடைக்காத மலிவு விலையில் SONY Wega TVகள் 21"- 14500/= Sony, Panasonic 29" -16000/=, DVD-3000/= Box, அம்பிளிபயர் என்பன.

தொடர்பு: 077 044 0570

சோவி ரேர்ட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)

(30701)(4.6.3) 56, K.K.S வீதி, சுன்னாகம்.

**62 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

14.03.2014

சோமசுந்தரம் ஜெயவசீகரன்


(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரியும், நாடகக்கலை அண்ணாவியாரும்)

பண்டாரி அம்மன் ஆசியுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்

பள்ளம் சீமா ஒழுங்கை, தம்பசிட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(33403)(12.3.6)




**வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்**
**அச்சுவேலி எரிபொருள் நிலையம் கனப்பி அமைத்தல்**
**கேள்விக் கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தால் அமைக்கப்பட்டுவரும் அச்சுவேலி எரிபொருள் நிலையத்துக்கு கனப்பி அமைக்கவுள்ளமையால் அதற்கான கேள்விக் கூறுவிலை சங்கத்தால் கோரப்படுகின்றது.

இதற்கான விவரங்களை நேரில் சங்க தலைமைக்காரியாலயத்தில் பெற்று 20.03.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றது.

பொதுமுகாமையாளர், வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி. 14.03.2014

(சி/12666)(3.6.4)

# தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 14

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் உணவு பதனிடல், தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள், கணினி தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் மற்றும் கைத்தொழில் தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிகளைத் தொடர விரும்புபவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

(ஐ- 400)

# மாணவர்களுக்கான விஞ்ஞானப் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

தமிழ்மொழி மூல மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையேயான விஞ்ஞானப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வினா விடைப் போட்டிக்கான வாய் மூலப் பரீட்சை, கண்காட்சி என்பன நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முறையே யாழ்.பல்கலைக்கழகத்திலும், இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறும்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் நடைபெறும்

போட்டிகளில் பங்குபற்றுவோர்களுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும், கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் பாடசாலை அதிபரூடாக உதவிப் பொதுச்செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ். விஞ்ஞான சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


metropolitan

Canon

**LEAN MEAN COPY / PRINT**

உங்கள் வியாபாரத்தை முன்னோக்கி செல்வதற்கு பல்வகை தொழிற்பாடு தீர்வு...

- நிமிடத்திற்கு 20 பிரதி மற்றும் அச்சிடும் வேகம்
- நவீன தொழிநுட்ப முறையில் பிரதி
- வலையமைப்பின் ஊடாக பிரதிகள் மற்றும் கலர் பிரதி ஸ்கேன்
- A3 அளவு வரையிலான பிரதி
- மிகக்குறைந்த பாவனைச் செலவு
- தன்னியக்க சுத்திகரிப்பு வசதி



DIGITAL MULTIFUNCTIONAL NO. 01 DEVICE IN SRI LANKA

imageRUNNER 2420L

*standard machine with one paper tray only

Rs.129,900/- + VAT
உடன்
இலவச காகிதம் மற்றும் 5,000 பிரதிகளுக்கான டோனர்
இச்சலுகை மார்ச் 31 வரை மட்டுமே


Sales Hotline
Taniya 0777 230 752
Shamila 0114 610 419

Metropolitan Office (Pvt) Ltd
12,Magazine Road,Colombo 08,Sri Lanka
Tel:+9411 4700200 | Fax:+9411 4700267
E-mail: salesmal@metropolitan.lk | Web: www.metropolitan.lk

கம்பஹா கிளை
No.106, Colombo Road, Gampaha.
இரத்தினபுரி கிளை
No. 578, Colombo Road, New Town, Ratnapura
மாத்தறை கிளை
No.382, Dharmapala Mawatha, Pamburana, Matara.
கண்டி கிளை
No.605 , Peradeniya Road, Kandy.
குருணாகலை கிளை
No. 42, Wilgoda Road, Kurunegala.
அனுராதபுரம் கிளை
No.334/110 F, Maithripala Senanayake Mw., Anuradhapura.
யாழ்ப்பாணம் கிளை
No.186/22, Gurunadha Swami Kovil Lane Off Point Pedro Road, Jaffna.

(C/12682)

**வாணி றெக்ஸ் வழங்கும் அசத்தலான விசேட பரிசில்கள்**







சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சகல வகையான புடைவை வகைகளுக்கும் விசேட விலைக் கழிவுகள்
அத்துடன் கொள்வனவுக்கேற்ப பெறுமதியான பரிசில்களும்!!

10,000/= மேல் கொள்வனவுக்கு ஒரு அழகிய குடை
20,000/= மேல் கொள்வனவுக்கு ஒரு சுவர் மணிக்கூடு (L)
30,000/= மேல் கொள்வனவுக்கு ஒரு பெரிய சுவர் மணிக்கூடு (XL)
அல்லது ஒரு றெயின் கோட்

இச்சலுகைகள் 15.03.2014 முதல் 30.03.2014 வரை மட்டுமே

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். தரமான தெரிவுக்கு முந்துங்கள்.

வாணி றெக்ஸ் இல. 81, பெரிய கடை, யாழ்ப்பாணம். T.P: 021 222 5578, 021 222 9286

## போசாக்கு முத்திரை சீராக வழங்கப்படவில்லை

வவுனியா, மார்ச் 14

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு சமுர்த்தி போசாக்கு முத்திரைகள் கிடைப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சமுர்த்தி அதிகார சபையால் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை பெற்ற தாய்மார்களுக்கான போசாக்கு முத்திரை வழங்கப்படுகின்றன. எனினும் நெடுங்கேணி பிரசேத்தில் இவ்வாறு தகுதி உடையவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

இதேவேளை நெடுங்கேணி பிரதேசத்தில் சமுர்த்தித் திட்டத்துக்கான விவரங்களை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சரியான முறையில் மக்களிடமிருந்து திரட்டாத காரணத்தாலேயே இவ்வாறான பிரச்சினைகள் எழுவதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்னர். (ஐ)

## வறட்சிப் பாதிப்பு குறித்து பதிவுகள் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 14

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் வறட்சியால் பாதிப்புக்களை எதிர்நோக்குவோர் தொடர்பில் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

வருடந்தோறும் துணுக்காயில் வறட்சி காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பல கிராமங்களில் குடி தண்ணீருக்கு நெருக்கடி ஏற்படுகிறது. இந்த நிலையில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விவரங்களைத் திரட்டி மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ஐ-18)

# கிராம அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்

### கிளிநொச்சி அரச அதிபர் அறிவுரை

கிளிநொச்சி, மார்ச் 14

கிராம அலுவலர்கள் அர்ப்பணிப்பு மிகுந்த பணியை மக்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.


நேற்று முன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்தில் புதிய கிராம அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் பணத்திலிருந்தே அரச அலுவலர்களாகிய நாம் எமது வேதனத்தைப் பெறுகின்றோம். எனவே மக்களுக்குச் சிறந்த பணியை நாம் ஆற்றியாக வேண்டும்.

கிராம அலுவலர்கள் மக்களோடு இணைந்து பணியாற்ற வேண்டியவர்கள் என்பதால், அவர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

மாவட்டச் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் கிராம அலுவலர்களுக்கான பயிற்சிகள் 10 நாள்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



கிளிநொச்சி அரச செயலகத்தில் புதிய கிராம அலுவலர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்ட வேளை......

# வீதியின் நடுவே மின் கம்பங்கள்

மன்னார் கோந்தப்பிட்டி பகுதியில் புனரமைக்கப்பட்ட வீதிகளின் நடுவே மின்கம்பங்கள் அகற்றப்படாமல் உள்ளமை குறித்து மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மன்னார் புராதன கோட்டைக்குப் பின்புறமாக அமைந்துள்ள கோந்தப்பிட்டி பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் வீதிகளின் நடுவே குறித்த மின் கம்பங்கள் அகற்றப்படாமல் உள்ளன. அவற்றை அகற்றாது புனரமைப்புப் பணியில் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.


மன்னார் நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இந்த கிராமத்தில் முறையற்ற வகையில் வீதி அமைக்கப்படுவது குறித்து எவரும் கருத்தில் எடுக்கவில்லை. புனரமைப்புப் பணிகள் குறித்து மன்னார் நகர சபைக்கு அறிவிக்கப்படாமலேயே அவை மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

அரசுடன் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி முஸ்லிம் மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு முறையற்ற வகையில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சரியான அளவுப் பிரமாணங்கள் இன்றி இந்த புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதால் மன்னார் நகர சபை இவ்விடயம் குறித்துக் கருத்தில் எடுக்க வேண்டும் எனவும், அபிவிருத்தி விதிகளுக்கு உட்பட்டு மின் கம்பங்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் நகர சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமக்கும் குறித்த வீதிப் புனரமைப்புக்கும் எதுவித தொடர்பும் இல்லை. எங்களிடம் அனுமதி எதுவும் பெறப்படவில்லை. நகர சபைக்கு உட்பட்ட பகுதிஎன்பதால்அபிவிருத்திப் பணிகளின் போது சபையின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தன்னார்வ நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் குறித்த வீதி புனரமைக்கப்பட்டு வருவதாகச் சிலர் தெரிவிக்கின்றனர். (ஐ)



நடுவீதியில் அகற்றப்படாது காணப்படும் மின்கம்கங்கள்

# பட்டாணிச்சூரில் உருவானது சமுர்த்திச் செயலணிக் குழு

### நீண்ட இழுபறிக்குப் பின்னர்

வவுனியா, மார்ச் 14

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் சமுர்த்திச் செயலணிக் குழு அமைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முன்னாள் சமுர்த்தி செயலணிக்குழுவின் தலைவர் அ.ஜறூஸ் தலைமையில் இந்த ஆண்டுக்கான சமுர்த்திச் செயலணிக்குழு அமைக்கப்பட்டது.

பட்டகாடு, வேப்பங்குளம், பட்டாணிச்சூர் பகுதி சமுர்த்திப் பயனாளிகள் மத்தியில் ஏற்பட்ட நீண்ட இழுபறி நிலைக்குப் பின்னர் இந்த சமுர்த்திச் செயலணிக் குழு அமைக்கப்பட்டது.

ஏற்கெனவே இந்த ஆண்டுக்கான சமுர்த்திச் செயலணிக் குழுவை அமைக்க இரண்டு தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியில் முடிவடைந்த நிலையில் மூன்றாவது தடவையாகவே தற்போது இந்தச் செயலணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

> “ முன்னர் இரண்டு தடவை கள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை தோல்வியில் முடிவடைந்தன.

முன்னைய கூட்டங்களுக்குச் சமுகமளித்தோர் தொகை குறைவாக .இருந்தமையால் இந்த நிலை ஏற்பட்டதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ரமேஸ் தெரிவித்தார்.

எனினும், பலத்த வாதப் பிரதிவாதங் களுக்குப் பின்னர் இந்தக் குழு அமைக்கப்பட்டது. தலைவராக எஸ். பானு, உப தலைவராக அ.ஜறூஸ், செயலாளராக ம.ரமேஸ், உப செயலாளராக எஸ்.வசந்தா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் வவுனியா சமுர்த்திப் பொறுப்பதிகாரி எஸ். சாந்தி, வேப்பங்குளம் சமுர்த்தி வங்கி முகாமையா ளர் எஸ். ஜானகி உட்படப் பலரும் சமுகமளித்திருந்தனர். (க-402)



மன்னார் நகர சபை உறுப்பினர்கள் வீதித் திருத்தப் பணியைப் பார்வையிட்டனர்.

# மன்னார் நகரசபையிடம் காணி கையளிப்பு

மன்னார்,மார்ச்14


மன்னார் சாவற்கட்டு 30 வீட்டு திட்டப்பகுதியில்' அமைந்திருக்கும் காணியை நகரசபையிடம் தேசிய வீடமைப்பு அதிகார சபை நேற்று உத்தியோகபூர்வமாக கையளித்தது.

அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தனியார் ஒருவர் குறித்த காணியை அபகரிக்கிறார் என பொதுமக்களால் குற்றம் சாட்டப்பட்ட நிலையில், குறித்த காணி தொடர்பில் கடந்த வாரம் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

குறித்த காணி தேசிய வீடமைப்பு அதிகார சபையினது என்றும் அதில் சிறுவர் பூங்கா அமைக்க மன்னார் நகர சபைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும்,இந்த நிலையில் காணியை தனியார் ஒருவர் அபகரிக்க முற்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் காணிக்கான ஆவணங்களை மன்னார் நகர சபையிடம் தேசிய வீடமைப்பு அதிகார சபை கையளித்துள்ளது.

இந்த நிகழ்வு நேற்று மன்னார் நகர சபையில் இடம்பெற்றது. இதில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மன்னார் முகாமையாளர் டி.யூட் செல்வராஜா குலாஸ் உத்தியோக பூர்வமான மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானபிரகாசத்திடம் காணிக்காண ஆவணத்தைக் கையாளித்தார்.

நிகழ்வில் நகர சபையின் உப தலைவர் யேசுதாசன் ஜேம்ஸ், நகர சபையின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் மற்றும் நகரசபையின் ஊழியர் எஸ்.குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)



நகர சபையிடம் காணிப் பத்திரம் கையளிக்கப்படுகறது

# மணிசங்கர் குருக்கள் வீதியின் திருத்தப் பணிகள் ஆரம்பம்

மன்னார், மார்ச் 14

மன்னார் உப்புக்குளம், மணிசங்கர் குருக்கள் வீதியின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் நகரசபைஉறுப்பினர்என்.நகுசீன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நீண்ட காலமாக குறித்த வீதி அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்பட்டது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

> “ நீண்ட காலமாக குறித்த வீதி அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் நகர சபை குறித்த வீதியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அந்த வீதிக்கு செம்மண் நிரப்பி முதற்கட்டப் பணியை நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (வ-56)

# மது,புகைத்தலுக்கு எதிராக மன்னாரில் விழிப்புணர்வு

மன்னார், மார்ச் 14

வட மாகாண சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் சுகாதார வார நிகழ்வுகளின் 3 ஆம் நாள் நிகழ்வாக மது மற்றும் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை தட்சனா மருத மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடை பெற்றது.

கடந்த 10 ஆம் திகதி முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை சுகாதார வாரமாக சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தி குறித்த நாள் களில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுத்து வருகிறது.

நேற்று முன்தினம் புதன் கிழமை மூன்றாம் நாள் நிகழ்வாக மது மற்றும் புகைத்தலுக்கு எதிரான விழிப் பூட்டும் நிகழ்வு மடு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ரி. ஒஸ்மன் டெனி தலைமையில், தட்சனா மருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம் பெற்றுள்ளது.

தட்சனா மருதமடு, முள்ளிக் குளம், கீரிசுட்டான், பாலம் பிட்டி ஆகிய கிராமங்களை மையப் படுத்தி இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன் போது மாணவர்கள் புகைத்தல் மற்றும் மதுவுக்கு எதிராக எழுதப்பட்ட சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (ஐ-56)



விழிப்புணர்வு ஊர்வலத்தில் மாணவர்கள்

## இலக்கிய கருத்தரங்கு

மட்டக்களப்பு,மார்ச் 14

மட்டக்களப்பு வின்சென்ற் தேசிய பாடசாலையில் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாச் சபையால் கம்பராமாயணக் கதா பாத்திரங்கள் எனும் தலைப்பில் இலக்கியக் கருத்தரங்கு இடம்பெற்றது.

வின்சென்ற் தேசிய பாடசாலை அதிபர் திருமதி ராஜகுமாரி கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் புனித மிக்கேல் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (ச)



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு வாழைச்சேனையில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனம்கண்டு புகை விசிறப்பட்டது. (ச)

## அத்துமீறிய குடியேற்றம்; சட்ட நடவடிக்கை எடுக்குக

### கூட்டமைப்பு வேண்டுகோள்

மட்டக்களப்பு,மார்ச்14

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலரைக் காரணமின்றி முறைகேடான வகையில் இடமாற்றம் செய்ய வேண்டாம் என்றும் கெவுளியாமடு பிரதேசத்தில் அத்து மீறிக் குடியேறியுள்ளவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொன். செல்வராசா, பா. அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கி. துரைராஜசிங்கம், பிரசன்னா இந்திரகுமார், இரா. துரைரெட்னம், கோ. கருணாகரம், ஞா. கிருஷ்ணபிள்ளை, மா.நடராசா ஆகியோரும் கையொப்பமிட்டு மாவட்ட அரச அதிபரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 2014.03.04 ஆம் திகதி பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் ஒரு சில சிங்கள மக்களும் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கெவுளியாமடுப் பகுதியில் அத்துமீறிக் குடியேறியுள்ள வெளிமாவட்ட பெரும்பான்மையின மக்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாக பௌத்த பிக்கு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

அத்துமீறி குடியேறியுள்ளவர்களுக்குஎதிராகச்சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# திருமலையில் 11 ஆலயங்கள் ரூ.5 மில்.செலவில் புனரமைப்பு

### சம்பந்தன் எம்.பியின் கோரிக்கையை அடுத்தே நிதி

திருகோணமலை,மார்ச் 14

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட 5 மில்லியன் ரூபா நிதியில் திருகோணமலையில் 11 இந்து ஆலயங்கள் புனரமைப்புச் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மேலும் சில இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளன என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் மூதூர் தொகுதி இணைப்புச் செயலாளர் ஜெயினுதீன் அமீர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வருடாந்தம் திருகோணமலை மாவட்டத்துக்கு 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிதியில் மாவட்டத்தின் பல்வேறு குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படுவது வழமை. ஆனால் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 5 மில்லியன் ரூபா நிதியும் இந்து ஆலயங்களுக்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனால், முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே, அவரால் வழங்கப்பட்ட பட்டியலிலுள்ள இந்து ஆலயங்களுக்கு முழு நிதியும் வழங்கப்பட்டது.

பாலையூற்று ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்துக்கு 5 லட்சம், ஆண்டாங்குளம் ஆண்ந்தபுரி ஸ்ரீ அருள்மிகு வைரவர் ஆலயத்துக்கு 4 லட்சத்து 50 ஆயிரம், காந்திநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு 5 லட்சம், திரியாய் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்துக்கு 5 லட்சம், ஸ்ரீ சுவாமிமலை பிள்ளையார் ஆலயத்துக்கு 5 லட்சம், ஸ்ரீ கந்தளாய் பிள்ளையார் ஆலயத்துக்கு 5 லட்சம், கந்தளாய் ஸ்ரீ அருள் முத்து மாரியம்மன் ஆலயத்துக்கு 5 லட்சம், கட்டைப்பறிச்சான் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்துக்கு 5 லட்சம், கங்கை இறால்க்குழி அம்பலதாடியன் ஆதிசிவன் ஆலயத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம், இறால்க்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம், ஸ்ரீ ஈச்சந்தீவு பிள்ளையார் கோயிலுக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாஎன நிதிஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆலயங்களுக்கான புனரமைப்பு வேலைகள் கடந்த பெப்ரவரிமாதம் முழுமையாக முற்றுப் பெற்றுள்ளன-என்றார். (ச-5)



சட்டவிரோத மதுப் போத்தல்களை கைப்பற்றிய பொலிஸார்

## மதுபானப் போத்தல்கள் பொலிஸாரிடம் சிக்கின

மட்டக்களப்பு,மார்ச் 14

களுவாஞ்சிக்குடியில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் சட்ட விரோதமாக விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்ட மதுபானப் போத்தல்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி என்.ரி.அபூபக்கர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின்போதே சட்ட விரோதமான முறையில் போத்தல்களில் அடைத்து கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை மதுபானப் போத்தல்களைத் துறை நீலாவணைப் பகுதியில் வைத்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ச)

யாழ். ரோட்டறிக் கழக
Rotary
RI DISTRICT 3220
ஏற்பாட்டில் இலங்கையின் முதல்தர
கேக் அலங்கார நிபுணர்
ஆர்.எல். கிளமன்ட்
மற்றும்
அவரது மாணவர்கள்
இணைந்து வழங்கும்
மலர் 2014
கேக் கண்காட்சியும்
பயிற்சிப் பட்டறையும்
காலம்: நாளை (15.03.2014) சனிக்கிழமை
நேரம்: காலை 9.00 - பி.ப 6.00 மணிவரை
பயிற்சிப்பட்டறை: அமர்வு 1 - மு.ப 10.00 - நண்பகல் 12.00 வரை
அமர்வு 2 - பி.ப 2.00 - பி.ப 4.00 வரை
இடம்: இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபம்
இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம்.
சர்வதேசத் தராதரமிக்க ஆசிரியரால் நேரடியாக நடத்தப்படும் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி சமையற்கலை பயிற்சிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு
முற்பதிவுகளுக்கும் விவரங்களுக்கும்: 078 284 5010
வருகையாளர்களுக்கான பரிசுக் குலுக்கலில் கவர்ச்சிகரமான பரிசில்கள் காத்திருக்கின்றன.
(C/12618)(10.6.3)

வீடு வாடகைக்கு
யாழ்.செயலகத்தில் இருந்து 1km தூரத்தில், 333, கண்டி வீதியில் (ஏ9 வீதி) 3250 சதுர அடிப்பரப்பில் ஏனைய வசதிகளுடன் 6 அறைகள் கொண்ட வீடு உடனடி வாடகைக்குண்டு. இதில் 5 படுக்கை அறைகள், நவீன இணைந்த குளியல் அறைகள் உள்ளவை. 3 PHASE மின் வசதியும் உண்டு.
தொடர்பு: 350, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 2761 (45894)(3.6.4)

விற்பனைக்கு
மில் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 170 0163

காணி விற்பனை
மருதடி வீதி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ) பாடசாலை, இந்தியத்தூதரகம் என்பவற்றுக்கு அருகில்) 1¼ பரப்பு வீதம் இரண்டு காணித் துண்டுகள் நல்லூர் சுற்றாடலில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 053 8405


கிருஷ்ணா அடகு சேவை
பதிவு இல : J/DS/BR/472
மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013ஆம் ஆண்டு 28.02.2013 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி (15.04.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.
புதுப்பிக்கத் தவறின் 15.04.2014 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
உரிமையாளர்: A.S.Surendran
இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311
இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046
(சி/12831)(2.7.6.3)

14 MAR 2014



காலி மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழருக்கு எதிராக போர் நடத்தவில்லை

## நாட்டில் மத நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது என்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,மார்ச் 14
பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர் நடத்தப்பட்டதே தவிர தமிழர்களுக்கு எதிராகப் போர் நடத்தப்படவில்லை.
நாட்டில் மத நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
காலிமைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மத நல்லிணக்கம் தொடர்பில் விமர்சனம் செய்யும் தரப்பினர், இலங்கையின் மத நல்லிணக்கம் பற்றி நேரில் வந்து பார்வையிட்டுக் கொள்ள முடியும்.

**அரசில் அங்கம் வகிக்கும் எவரையும் விலக்கும் திட்டமில்லை. அரசை விட்டு வெளியேற விரும்புவோரை நாம் தடுக்கப் போவதில்லை.**

பயங்கரவாதத்துக்கு எதிராக போர் நடத்தப்பட்டதே தவிர தமிழர்களுக்கு எதிராகப் போர் நடத்தப்படவில்லை. மக்களின் இதயங்களை வென்றெடுப்பதே எமது நோக்கமாகும்.
நாட்டில் பிரச்சினைகளை தீர்ப்பதே அரசின் நோக்கமாகும். எனினும், சில. ராஜதந்திரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பிரச்சினை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.
அரசில் அங்கம் வகிக்கும் எவரையும் விலக்கும் திட்டமில்லை. அரசை விட்டு வெளியேற விரும்புவோரை நாம் தடுக்கப் போவதில்லை -என்றார். (ச)

# போலி ஆவணம் மூலம் அரச காணி விற்பனை

## இரு சந்தேகநபர்கள் கைது



கோப்புப்படம்

கொழும்பு,மார்ச் 14
நகர அபிவிருத்து அதிகார சபைக்குச் சொந்தமான காணியை போலி ஆவணங்களைத் தயாரித்து விற்பனை செய்த இரு சந்தேகநபர்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரது வீட்டை நேற்றுமுன்தினம் அதிகாலை சோதனையிட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த காணிப் பதிவாளர் நாயகம் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட உண்மையான 56 காணி உறுதிப்பத்திரங்களையும், போலியாகத் தயாரிக்கப்பட்ட 110 உறுதிப் பத்திரங்களையும் மீட்டுள்ளனர்.
இந்தத் தகவலைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
சந்தேக நபர்கள் மாலபே பிரதேசத்திலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் காணியை 42 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்று அவர் கூறினார். (ச)

# 'அலுகோசு' பதவிக்கு மீண்டும் விண்ணப்பம்

தூக்குத் தண்டனை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கு மீண்டும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.
புதிதாக அலுகோசு ஒருவரை நியமிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம தெரிவித்தார்.
கடந்தவாரம் அலுகோசு பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், அவருக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் போது வெலிக்கடைச்சிறையில் உள்ள தூக்கு மேடையைக் கண்டு அதிர்ச்சியடைந்ததையடுத்து அவர் தாமாகப் பதவி விலகியுள்ளார். (ச)

# 91.5 மெற்றிக் தொன் பாக்கை திருப்பி அனுப்பியது இலங்கை

## இறக்குமதி செய்தவருக்கு 5 லட்சம் ரூபா அபராதம்

கொழும்பு,மார்ச் 14
சிங்கப்பூரிலிருந்து 5 கொள்கலன்களில்இலங்கைக்குகொண்டு வரப்பட்ட 91.5 மெற்றிக் தொன் நிறையுள்ள பாக்குகளை சுங்கத் திணைக் களம் மீண்டும் அதே நாட்டுக்குத் திருப்பியனுப்பியுள்ளது என்று சுங்கத் திணைக்களப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.
பாக்குகளை இறக்குமதி செய்வதற்கான விவசாயத் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் இவ்வித இறக்குமதியைமேற்கொண்டஇலங்கை வர்த்தகருக்கு 5 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.
சுமார் 1,17,000 அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தப் பாக்குகள் 5 கொள்கலன்களில் கொண்டு வரப்பட்டிருப்பதாக தெரிய வந்ததையடுத்து கப்பலில் இருந்து இறக்காமலேயே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
இந்தக் கொள்கலன்களைத் திறப்பதன் மூலமும் பாக்கை இறக்குமதி செய்ய அனுமதிப்பதன் மூலமும் கிருமிகள். பூச்சிகள் எமது நாட்டுக்குள் வருகின்றன.
அதனால் நாட்டுக்குள் தீங்கை வரவழைக்க வாய்ப்புகள் அதிகளவில் உள்ளன. அதனாலேயே அவற்றை நாட்டுக்குள் கொண்டுவர அனுமதி வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். (ச)


# பண மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்

கொழும்பு,மார்ச் 14
20 லட்சம் ரூபா பணம் மோசடி செய்ததாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
தமது மனைவியை ஏமாற்றி அவர் குறிப்பிட்ட பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்று வர்த்தகர் ஒருவர், சிலாபம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.
மாரவில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் 20 லட்சம் ரூபா பணத்தைத் தமது மனைவியிடமிருந்து பெற்றுக் கொண்டார் என்று குறிப்பிட்ட வர்த்தகரால் முறையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இனத்தைக் காட்டிக் கொடுக்கிறார் ஹக்கீம்

## பைசர் முஸ்தபா குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 14
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், அரசியல் நோக்கத்துக்காக இனத்தைக் காட்டிக் கொடுக்கிறார் என்று பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா குற்றஞ் சாட்டியுள்ளார்.



பைசர் முஸ்தபா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரவூப் ஹக்கீம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்கூட்டுப் பொறுப்புக்களை உதாசீனம் செய்துள்ளார்.
நாட்டுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜெனிவாவுக்கு அறிக்கை அனுப்பி வைத்துள்ளது.
எனினும், அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உலக முஸ்லிம் சமூகம் இலங்கையை ஒதுக்கிவிடாது.
முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்கும்-என்றார். (ச)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னர் சிதம்பரபிள்ளை

(முன்னாள் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரும்,
முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளரும்)

**பிறப்பு: 05.08.1926** **இறப்பு:23.02.2013**

ஐயா!

தென்மராட்சி பெற்றெடுத்த தேவமகன் ஐயா நீங்கள்!
வன்னித் தாயின் மடியில் தவழ்ந்த வைரமைந்தன் நீங்கள் ஐயா!
தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து
எமது இன விடுதலைக்காய் வீரமுழக்கமிட்ட மாவீரன் ஐயா நீங்கள்!
ஐயா! ஐயோ!! எம் விடுதலையும் போச்சுதையா!
எம் கண்முன்னே எமது வீடும் விளைநிலமும் பறி போகுதையா!
இவற்றை எல்லாம் இருந்து பார்க்க விரும்பாது நீங்கள் போய்
இன்றோடு ஒரு வருடம் உருண்டோடி விட்டதையா!
ஐயா! நீங்கள் செய்த பொதுப் பணியும், கோயில் திருப்பணியும்,
தமிழ் பணியும் தொடரும் ஐயா! இது உங்கள் மேல் உறுதி ஐயா!
ஐயா! நீங்கள் நிம்மதியாக உறங்குங்களையா - உங்கள்
இனிய ஆத்மா சாந்தி அடையட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி...!

நினைவு கூரும் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மகளிர் பாடசாலை வீதி,
கற்குழி, சாவகச்சேரி.

(29784)(7.6.3)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 01 . 08 . 1939
விண்ணில் 23 . 02 . 2013

## அமரர் சீனிவாசகம் சிவசுந்தரம்

(சுந்தரம் சாமியார்)

திதி: 14.03.2014, பிரதோஷம்

என்றும் எங்களுடனே உள்ளீர்கள் என்ற நினைவுகளுடன்.....

இல.58, செட்டித்தெரு, நல்லூர். (45715)(12.6.3) குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பலவகை சார் பாதிப்புகளையும் ஈடுசெய்யும் சாதக நிலை நாடி....

இம்மாதம் இருபத்தாறாம் திகதி (26.03.2014), இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு முக்கியமான நாள். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்க அரசின் தலைமையில் பிரிட்டன், கனடா, மொறிசியஸ் மற்றும் மசிடோனியா, மொன்ரி நீக்கிரோ ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து சமர்ப்பிக்க உள்ள பிரேரணை (தீர்மான வரைவு) சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைய உள்ளது.

இந்தத் தீர்மான வரைவு, ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட நகல் வரைவை விடவும் வலிமை நிறைந்ததாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பிட்ட இறுதி வரைவைத் தயாரிப்பதற்கு என்றே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (பதினெட்டாம் திகதி) இணை மாநாடு நடைபெற உள்ளது.

மேற்குறிப்பிட்ட மாநாட்டில் அமெரிக்காவின் உயர் அதிகாரிகள் பங்குபற்றி உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விரிவாக விளக்குவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இப்போதைய பிரேரணையின் நகல்வடிவம் இராஜதந்திர சொல்லாடல்களையும் அர்த்தங்கள் புதைந்த சொற்றொடர்களையும் அடுக்கி மிகவும் நுட்பமாகவும்-பூடகமாகவும்-மறைபொருளாகப் பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எனினும் அனைத்துலக விசாரணை என்ற சொற்பதம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் மற்றும் அனைத்துலக மனிதாபிமான சட்டமீறல் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கும், அத்தகைய மீறல்களில் ஈடுபட்டோரை பொறுப்பாக்குவதற்கும், சுயாதீன நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இலங்கையில் தொடர்வதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இலங்கை அரசைக் கோருவதாகவே பிரேரணை அமைந்துள்ளது.

ஒரு வகையில், மீண்டும் இலங்கை அரசையே அத்தகைய விசாரணைகளை நடத்துமாறு கோருவதாக பிரேரணையின் நகல் அமைகிறது.

இலங்கை அரசு மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து சுயாதீன விசாரணை என்று கூறப்பட்டுள்ள அதே சமயம் மனித உரிமை ஆணையாளரே விசாரணை நடத்தி பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுவது சொற்பதத் தெளிவற்றுள்ளது.

இந்த நகல் வடிவம் குறித்து ஒவ்வொரு தரப்பிலிருந்தும் ஒவ்வொரு கருத்தும், ஒவ்வொரு விளக்கமும், வெவ்வேறு வியாக்கியானங்களும் கூறப்படுகின்றன. அதனைக் கருத்தில் கொண்டே இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் இறுதி வடிவத்தில் அனைத்துலக விசாரணை என்ற சொற்பதம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகிறது.

இம்மாதம் 26 இல் சமர்ப்பிப்பதற்கென வரையப்பட்ட பிரேரணையில் அனைத்துலக விசாரணை என்ற சொற்பதம் தெளிவாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் அதனை ஆதரிக்க வேண்டிய கடப்பாடு கூட்டமைப்புக்கு உண்டு. கடந்த திங்கட்கிழமை வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தனும் கூட்டாக விடுத்த அறிக்கை இதனைத் தெளிவுபடுத்துகிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டமைப்புக்கு இந்த விவகாரத்தில் நிதானமாகவும் - அவதானமாகவும்-பக்குவமாகவும் நடந்து கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு. அமெரிக்கத் தீர்மானம் தற்பொழுது தமிழ் மக்களிடமுள்ள இறுதித் துருப்பு.

இதனை எதிர்ப்போமானால் சர்வதேச சமூகம் தமிழ் மக்களைக் கைவிட்டுவிடும்.1987 இலங்கை- இந்திய ஒப்பந்தத்துக்கும் அதுவே நடந்தது.

அந்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்து இந்தியா அக்கறை காட்டவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

எது எவ்வாறாயினும் , இந்தியாவும் அமெரிக்காவும் மற்றும் பிரிட்டன் உட்பட்ட மேற்கு நாடுகளுமே இப்போது தமிழ் மக்களுக்கு ஆபத்பாந்தவராக உள்ளன. போரின் போது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் உடந்தையாக இருந்தன என்பதனை மறந்து விடலாகாது.

ஜெனிவாப் பிரேரணை விடயத்தில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் அனைவரும் பேராதரவு வழங்க வேண்டும்

முன்னர் தமிழ் மக்களுக்கு உண்டான பலவகை சார் பாதிப்புகளையும், போரின் தாக்கங்களையும் ஓரளவேனும் ஈடு செய்யும் கண்ணோடு, நோக்கோடு இப்போதைய சாதகமான நிலை கொள்ளலையும் அணுகுதல் அவசியம்; காலத்தின் தேவையும் அதுவே.

# ஏமாற்றங்கள் எதுவரை...?



ராஜராஜன்

தமக்குச் சொந்தமான நிலங்களை இழந்து இன்னமும் கூட சொந்த நாட்டிலேயே அகதி வாழ்வு வாழ்ந்துவரும் ஒரு தொகுதி தமிழர்களின் நிலை தொடர்பாகத் தெளிவான திட்டங்கள் எவையும் வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக வேளைக்கு வேளை மாறுபட்ட கருத்துக்களே தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மக்களில் பலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதில் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்ற னர். அரசுடன் இணைந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகளும், படைத் தரப்பினரும் வேளைக்கொரு வாக்குறுதியை வழங்கி அவர்களை எரிச்சலடையச் செய்து வருகின்றனர்.

இறுதியாக வளலாய்ப் பகுதியில் இவர்களைக் குடியமர்த்த முடியுமெனப் படைத் தரப்பினர் கூறியதுடன், வலிகாமம் வடக்கில் உள்ள ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் அரசுக்கு உரியதெனவும் தெரிவித்துள்ளனர். இன்றுவரை தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியுமென்ற நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருந்த அப்பகுதியைத் தமது பூர்வீகமாகக் கொண்டிருந்த மக்கள் இந்த அறிவிப்பினால் மிகுந்த ஏமாற்றமும், விரக்தியும் அடைந்து காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழர்கள் வாழும் ஏனைய மாவட்டங்களிலும் இந்த நிலைதான் காணப்படுகின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்கள் தமிழர்களின் பிடியிலிருந்து நழுவிச் செல்கின்றன. அங்கு பூர்வீகமாக வாழ்ந்த தமிழ்க் குடும்பங்களின் சொந்த நிலங்கள் படையினரின் உதவியுடன் பெரும்பான்மையின மக்களின் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு வருகின்றன. அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் தமது வயல் நிலங்களைக் கூட அண்ட முடியாத நிலையில் எட்ட நின்று பார்த்துப் பெருமூச்சு விடும் நிலையே இன்று காணப்படுகின்றது.

தென்னமரவாடி, மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் உட்பட இன்னும் பல தமிழ்க் கிராமங்களில் இந்த நிலைதான் காணப்படுகின்றது. இங்குள்ள தமிழ் மக்கள் தமது விவசாய முயற்சிகளை மட்டுமல்ல மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதிலும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். படையினரின் தலையீடுகள் முழு அளவில் காணப்படுவதால் பாதிக்கப்பட்டுவரும் மக்கள் செய்வதறியாத நிலையில் தமது மனதுக்குள்ளேயே புழுங்கியவாறு வேதனையில் மூழ்கியுள்ளனர்.

வடக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் எவையும் வழங்கப்படாத நிலையில் இங்கு நடப்பதையெல்லாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவே மாகாணசபை நிர்வாகத்தால் முடிகின்றது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் மக்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் படையினரால் கையகப் படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் இரகசியமான முறையில் தமிழர்கள் அல்லாதவர்களுக்கான குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. இவையெல்லாம் இந்த நாட்டின் நல்லிணக்கத்துக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கப் போகின்றன என்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் உணர்ந்து கொண்ட தாகத் தெரியவில்லை. மாறாகத் தமிழர்களை அடக்கி ஒடுக்கிப்படுகுழிக்குள் தள்ளி விடும் செயற்பாடுகளே முனைப்புடன் இடம்பெற்று வருகின்றன.

இன்று இலங்கைத் தமிழர்களின் நிலை அனலில் இடப்பட்ட புழுவின் நிலையை ஒத்ததாகவே காணப்படுகின்றது. ஜெனிவாவில் தீர்மானம், பிரேரணை, சர்வதேச விசாரணை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், போர் இடம் பெற்ற பகுதிகளுக்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை என்பதெல்லாம் வெந்து போய்க்கிடக்கும் தமிழர்களின் இதயங்களுக்கு உடனடியாக ஒத்தடம் தரும் என்று எதிர்பார்க்க முடியாது.

கடந்த முப்பது ஆண்டுகளாக இங்குள்ள தமிழர்கள் எத்தனையோ பேரைப் பார்த்துப் பேசித் தமது குறைகளை எடுத்துரைத்துச் சலிப்படைந்த நிலையில் உள்ளனர். எல்லாமே வெறும் ஏமாற்று வேலை என்பதுதான் அவர்களின் இறுதி முடிவாக உள்ளது.

காலம் கடந்தாவது வெற்றி தரும் என்ற அவர்களின் நம்பிக்கைகள் யாவும் முள்ளிவாய்க்காலுடன் தகர்ந்த பின்னர் இன்று எவரையும் நம்புவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

இப்போதெல்லாம் நம்ப வைத்துக் கழுத்தறுப்பவர்களும், நம்பிக்கைத் துரோகிகளுமே உள்ளூரில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் காணப்படுகின்றனர். தவிப்பவர்களின் வாயில் நீர் ஊற்றுவதற்கு இவர்கள் ஒரு போதுமே நினைப்பதில்லை. மாறாக தவித்த முயலை அடித்து எடுப்பதிலேயே குறியாக இருப்பார்கள், எமது அண்டை நாடான இந்தியா இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றது. மத்திய அரசுடன் இணைந்து ஆட்சி செய்த போது வாயை மூடிக்கொண்டிருந்த கருணாநிதி போன்றவர்கள் இப்போது ஈழத் தமிழர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதில் பயனென்ன? இவரைப் போன்றவர்களால் ஈழத்தமிழர்களின் இழந்த உரிமைகளையும், பூர்வீக மண்ணையும் திரும்பப் பெற்றுக் கொடுக்கமுடியுமா? காலத்துக்குக் காலம் வேடங்களை மாற்றிக் கொண்டிருக்கும் இந்த வேடதாரிகளை இனியும் நம்புவதில் பயன் எதுவுமே கிடைக்காது.

இனியும் கால தாமதம் ஏற்படுமாயின் இன்னும் சில ஆண்டுகளில் தமிழர்கள் வாழ்ந்த பூர்வீக இடங்கள் வேறு பெயர்களால் உச்சரிக்கப்படும் நிலை தோன்றிவிடும். மணலாறு, வெலிஓயாவாகத் திரிவுபெற்று வழக்கத்துக்கு வந்ததைப் போன்று வேறு பல இடங்களும் பெயர் மாற்றம் பெறப்போகின்றன. திருகோணமலைக்கு நேர்ந்த கதி ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் ஏற்படமாட்டாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதத்தையும் வழங்க முடியாத நிலையே இங்கு இன்று காணப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது போருக்குப் பின்னர் தமிழர்களின் நிலை 'பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதை'யாகவே மாறியுள்ளது- உரிமைக்காகப் போராடியவர்கள் இன்று நிலத்தை இழந்து பாடுபட்டுச் சேர்த்த சொத்துக்களை இழந்து, சுதந்தி ரத்தை இழந்து , நடமாடும் உரி மையை இழந்து நடுத்தெருவில் நிற் கின்றனர். எவ்வளவுதான் ஆறுதல் வார்த்தைகள் கூறினாலும் இவர்களின் மன நிலையில் உடனடியாக மாற்றங்கள் வரப் போவதில்லை. மனக் காயங்கள் ஆறுவதற்குப் பல காலம் ஆகலாம். ஆகவே உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு இவர்களின் ரணங்களைக் கிளறுவதால் வேதனைதான் மிஞ்சும். இவர்களுக்குத் தேவை உடனடியாகப் பயன்தரும் நடவடிக்கைகளே என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொண்டால் அதுவே போதுமானது.



## சாதாரண மக்கள் நெருங்க முடியாத

# புராதன கோட்டைகள் ஊர்காவற்றுறையில்

வந்தியத் தேவன்


முன்பெல்லாம் பரவலாகப் பேசப்பட்ட ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையும், மக்களின் கவனத்தைப் பெரிய அளவில் ஈர்க்காத ஊர்காவற்றுறை உருண்டிக் கோட்டையும் இப்போதெல்லாம் பெரிய அளவில் பேசப்படாத ஒன்றாகிவிட்ட புராதன தொல்லியல் சின்னங்களாகும். போருக்கு முன்னர் ஹமன்கில் (Hammen Hill) எனப்படும் கடற்கோட்டை உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்து வந்தது. வடபகுதிக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இதனைச் சென்று பார்வையிட்டு வந்தனர். ஊர்காவற்றுறை துறைமுகத்தில் காணப்பட்ட சிறிய வள்ளங்களில் செல்வதே ஒரு குஷியான பயணம்தான். அப்போதெல்லாம் ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையில் போக்குவரத்துக்கென ஐந்து சதம் மட்டுமே அறவிடப்பட்டது. கடற்கோட்டைக்குச் செல்வதற்கு 10 ரூபா அறவிடுவார்கள். உள்ளூர்க்காரர்களுக்கு சிறிது குறைத்து அறவிடுவார்கள். தீவகப் பகுதிகளுக்குச் செல்லும் படகுகள் இந்தக் கோட்டையின் சமீபமாகவே கடலில் பயணிப்பது வழமை. அதன் அருகில் படகுகள் செல்லும் போது பயணிகள் கோட்டையின் எழிலைக் கண்டு வியப்பதுமுண்டு.

கோட்டையின் துறைமுகப் பாலம் சிறிய படகுகள் அணைப்பதற்குச் சுலபமானது. நுழைவாயில் கிழக்குத் திசையில் உள்ளது. கோட்டையின் உள்ளே மூன்று அறைகள், வெளிச்சக் கோபுரம் என்பன உள்ளன. இரவில் சிவப்புநிற வெளிச்சத்தை நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளில் இருந்து காணக்கூடியதாக இருக்கும். பூவரசு மரங்களும் கோட்டைக்குள் பச்சைப் பசேல் என்று காட்சியளிக்கும்.

இந்திய-இலங்கை கப்பல் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொருட்டும், வெளித் தொடர்புகளைக் கட்டுப்படுத்தவும் 16 ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயரால் இது அமைக்கப்பட்டது. காரைநகர் நீலங்காடு வெடியரசன் மாளிகைக்கும், ஊர்காவற்றுறைக்கும் சமீபமாக கால்வாயின் மறுகரையில் அமைந்துள்ளது. இதனைக் கட்டுவித்தவன் அமிநார் டெமன்சீஸ் என்னும் போத்துக்கேய வீரனாவான். இந்தக் கோட்டை 1685 இல் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவர்களிடமிருந்து கோட்டையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள், இதனைச் சிறைக் கூடமாகவும் மருத்துவ நிலையமாகவும் பயன்படுத்தி வந்தனர். 1945-1946 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பெரிய அம்மை மற்றும் பொக்குளிப்பான் நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தக் கோட்டைக்குள்ளேயே வைத்துப் பராமரிக்கப்பட்டனர். 1971 இல் இலங்கையின் தென்பகுதியில் தாக்குதலில் ஈடுபட்டிருந்த சேகுவேரா இயக்கத்தின் தலைவர் றோகண விஜேவீராவும், சிறிமாவோ அரசினால் இங்கேயே சிறைப்படுத்தப்பட்டிருந்தார்.

பிற்காலத்தில் பிரபல்யம் மிக்க சுற்றுலா மையமாக விளங்கிய இந்தக் கோட்டையைப் பார்வையிட வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டில் இருந்து கணிசமான மக்கள் வந்து செல்வதுண்டு. பாடசாலை மாணவர்களும் இதில் அடங்குவர். தொல்பொருள் திணைக்களம் இதற்கு உதவியிருந்தது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் காரணமாக ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் மக்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் இங்குள்ள துறைமுகங்கள் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இவற்றினூடாக நடைபெற்றுவந்த கடல் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மக்கள் இந்தக் கோட்டையை மறந்துவிட தலைப்பட்டனர். போர் ஓய்ந்து ஓர் அமைதியான சூழ்நிலை உருவான போதிலும் மக்கள் அணுக முடியாத சுற்றுலா மையமாகவே இந்தக் கோட்டை இன்றும் உள்ளது. உல்லாசப் பயணிகள் தமது விருப்பம் போன்று கோட்டைக்குச் சென்றுவரக் கூடியதாக இல்லை. ஊர்காவற்றுறை, காரைநகர் கடற் பகுதிகளில் கடற்படைப் படகுகளின் நடமாட்டம் தவிர்ந்த ஏனைய படகுகள் நடமாடுவதற்கு அனுமதியில்லை. இதனால் முக்கியத்துவம் மிக்க சுற்றுலா மையம் ஒன்றை அணுக முடியாத நிலை காணப்படுவதாக உல்லாசப் பயணிகள் கவலையடைந்துள்ளனர். வடக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைக் காணவரும் இந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் கடற்கோட்டையைப் பார்க்க முடியாதுள்ளதால் கவலை கொண்டுள்ளனர்.

சாதாரண மக்கள் சென்று பார்க்க முடியாத இந்தக் கோட்டையை வசதி படைத்த பிரமுகர்கள் சென்று பார்ப்பதாக இப்பொழுது அறிய முடிகின்றது. காரைநகர் கடற்படையினரின் விடுதியில் தங்கும் இவர்கள் கடற்கோட்டையைப் பார்வையிடவும் ஒருநாள் தங்கி வரவும் கூடிய வசதிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஓர் அறைக்கு 15 ஆயிரம் ரூபா வரை அறவிடப்படுவதாகவும் தெரிகின்றது.



தொல்பொருள் திணைக்களம் இந்தக் கோட்டையைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்து சிறிய படகுகள் மூலம் உல்லாசப் பயணிகளை அங்கு அழைத்துச் சென்று திரும்புவதன் மூலம் அல்லது சுற்றுலாத் துறையினரின் பொறுப்பில் உல்லாசப் பயணிகள் சென்று திரும்பக் கூடிய வசதிகளை ஏற்படுத்துவதன்மூலம் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரும் உல்லாசப் பயணிகள் இந்தக் கோட்டையையும் அதன் வரலாற்றையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். சுற்றுலாத் துறை இது குறித்துக் கவனம் செலுத்துமா அன்றேல் பெரும்பாலான விடயங்களில் மூக்கை நுழைத்து வட பகுதியில் உள்ள மக்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதிலேயே குறியாகவுள்ள படைத்தரப்பினரிடமே சுற்றுலாத்துறையையும் விடுத்து மக்களுக்குக் கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புக்களை சிதறடிக்கும் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்ப்பார்களா என்பதை சம்பந்தப்பட்ட திணைக்களங்களே முடிவு செய்ய வேண்டும்.

---

வாசகர் திருமுகம்

## சிதம்பர ரகசியம்

சொற்சிலம்பத்தில் தாங்கள் கையாளும் சொற்களில் சிதம்பரத்தின் மறு பெயரான தில்லை இடையிடை வருவது கண்டு தாங்கள் ஒரு சிதம்பர பக்தன், ஆத்மிகவாதி என அறிகிறோம்.

சிதம்பரம் என்ற சொல் சகலதும் என்பதாகும். இந்து, சைவ சமயம் என்பதும் அதுவே. ஆனால் அதைப் பிறர் எல்லோருக்கும் (சாதி, மத, இன மற்றும் பேதங்கள் இன்றி ) அறிவிக்கப்புகும் போது சிதம்பரம் என்ற சொல்லைப் பயன்படுத்த விரும்பவில்லை. சிதம்பரம் என்ற சொல் சைவசமயத்தோடு இருப்பதால் அதை நாம் புகுத்தினால் அது சமயப்பற்று ஆகிவிடும்.

உலகில் உள்ள சமயங்கள் யாவும் கடவுளால் உண்டாக்கப்பட்டதென்பதாலும் கடவுள் இந்தச் சமயம் மற்றும் அனைத்துமாக இருப்பினும் அவற்றில் இல்லாமல் இருப்பதாலும் கடவுள் என்ற சொல்லை (பொதுச் சொல்லை)க் கையாள்கின்றோம். அப்படிக் கையாளும் போது அது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

ஆனால் எமக்கு இதன் உண்மை சிதம்பரத்தில் (சிதம்பரம் என்ற கோயிலில்) உள்ள சிதம்பர இரகசியத்தாலும், நடராச விக்கிரகத்தாலுமே கடவுள் பிரபஞ்ச உண்மை (இரகசியம்) புரிய வைக்கப்பட்டது. இது ஓர் அபூர்வ நிகழ்ச்சி.

இந்த நிகழ்வின் மூலம் பெறப்பட்ட உண்மையை ஆத்மிகவாதிகளுக்கும் பயன்படும்படி அறிய வைக்க வேண்டும் என்ற ஒரு நோக்குடன் கீழ்க்காணும் கடவுள் உண்மையைத் தருகிறோம்.

முதலில் இதைத் தாங்கள் கண்டு அறிய வேண்டும். பின்னர் பிறரும் கண்டு அறிய தங்கள் பத்திரிகை வாயிலாக வழி சமைக்கலாம்.

தாங்கள் விரும்பினால் மேலும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் எம்மிடம் இருந்து ஆக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தடை இல்லை.

எக்காரணம் கொண்டும் எமது பெயர், முகவரி தங்களுக்குக் கிடைக்கப் பெறாது. காரணம் இந்த ஆக்கங்களின் மூலம் இவர் தான் என்று எவருக்கும் தெரியவரப்படாது என்பது தான். வேறு ஒரு காரணமும் இல்லை. இதன்படிக்கு எம்முடன் நேரடியாகத் தொடர்புபட முடியாது. பதிலாக எமது நண்பர் மூலம் எமது ஆக்கங்களைப் பெற முடியும். அவரது பெயரும் முகவரியும் இதுதான் நா.தமிழ் மகன், அறுபத்து மூவர் பூசை மடம், நல்லூர் கிழக்கு வீதி, நல்லூர்

"எனக்குப் புரிய வைக்கப்பட்ட உண்மை இதுதான். இந்த உலகத்திலோ அல்லது பிரபஞ்சத்திலோ இருப்பது ஒன்று தான். இங்கே இருப்பது என்று சொல்லும்போது எப்போதும் இருப்பது (நிரந்தரமாக இருப்பது) ஒன்றுதான் என்பதுதான் பொருள்.

மற்றது, இந்தஉலகில் உள்ள (கண்களால் காணப்பட உள்ள) - உருவம் - (முகத்தில் உள்ள இரு கண்களால் காணப்பட இயலாமல் உள்ள)- அருவம் - (முகத்தில் உள்ள இரு கண்களால் காணப்பட இயலாது; ஆனால் இந்த மனித உடலில் உள் உறுப்புகளால் அப்படி ஒன்று இருக்கிறது என்று உணரக்கூடியதாக உள்ள) ஓசை, தொடுதல், ருசி என்கிற அருவுருவங்கள் என்கிற பொருள்கள் அனைத்தும் நிரந்தரமாக உள்ள ஒன்றால் உருவாக்கப்பட்டவை அல்லது படைக்கப்பட்டவை அல்லது உண்டாக்கப்பட்டவையாகும். அந்த ஒன்றைத் தவிர மற்ற எவையும் நிரந்தரமானவை அல்ல. மேலும் அந்த ஒன்று (நிரந்தரமாக இருக்கும் ஒன்று) தம்மால் படைக்கப்பட்டவற்றோடு சேர்ந்தே இருக்கின்றது.

- அடியவன் -

---

## தவக்காலச் சிந்தனை




## பொது நலத்துடன் செபிப்போம்

தவக்காலம் என்றதும் சிந்தனைக்கு வருவது செப, தப, தானம், உடல் உள ஒறுத்தல் என்னும் செயற்பாடுகளாகும். இவற்றுள் செபம் என்பது இறைவனை எம்முடனும், எம்மை அயலவருடனும் இணைத்து வைக்கின்ற அழகான உரையாடல் ஆகும். இயேசு செபிக்க கற்றுத்தந்த போது இறைவனை போற்றிப் புகழ்ந்து அவரது சித்தத்தை ஏற்றுக்கொண்டு பிறருடன் ஒப்புரவாகி அவர்களுக்காகவும் மன்றாடக் கற்றுத் தந்தார்.

ஆனால் இன்றைய எமது செபங்கள் சுயநோக்கிலா பொது நோக்கிலா அமைகின்றன. எங்கள் தேவைகள் அனைத்தையும் அறிந்திருக்கும் இறைவனிடம் எமது தேவைகளை மட்டும் அடுக்கி விண்ணப்பித்து வேண்டுவதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் எது இறைவனின் சித்தமோ அவைகள் அந்தந்த நேரத்திலேயே அருளப்படும்.

பிறர் செய்யும் குற்றங்களை பெரிதுபடுத்தாது அவர்களை மன்னித்து அவர்களுக்காக செபிக்கும்போது எமது தேவைகளையும் நிரப்ப இறைவன் மனமிரங்குவார். திறந்த கைகளுடன் மன்னிக்கக் காத்திருக்கும் இறைவனிடம் திறந்த மனதுடன் ஆழமான விசுவாசத்துடன் வேண்டுதல் புரிந்து நாமும் அயலவரும் இறையரசுக்குள் நுழைய வழிசமைப்போம்.

*எஸ்.தாஸ், கொழும்புத்துறை.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் கவலையான செய்தி வரும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடிச் சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**இடபம்**: குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக் கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்குப் பாராட்டுக் கிடைக்கும்

**மிதுனம்**: கணவன், மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் பற்று, வரவு கணிசமாக உயரும்.

**கடகம்**: ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் மற்றவர்களை முழுமையாக நம்ப வேண்டாம். மற்றவர்களுக்காக நியாயம் பேசப் போய் உங்கள் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு ஏற்படும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**சிங்கம்**: கணவன், மனைவிக்குள் வீண் வாக்குவாதம் வரும். திடீர் பயணங்கள், செலவுகளால் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் ஏற்படும். தடைகளைத் தாண்டி முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி**: திட்டமிட்ட விடயங்கள் கை கூடும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**துலாம்**: உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்வீர்கள். நெருங்கியவர்களைச் சந்தித்து எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர் கொண்டு வெற்றி காண்பீர்கள். அலுவலகத்தில் மரியாதைகூடும்.

**விருச்சிகம்**: குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். .

**தனுசு**:விமர்சனங்களை கண்டு அஞ்சாதீர்கள். வியாபாரத்தில் குழப்பங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

**மகரம்**: பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய கடன்கள் நீங்கும். உத்யோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கும்பம்**: எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்**: புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். சொந்த, பந்தங்கள் தேடி வருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

## நாளை

**பங்குனி-01 சனிக்கிழமை | 15.03.2014**

திதி: சதுர்த்தசி மு.இ.10.24 வரை
நட்சத்திரம்: மகம்
மு.ப.11.21 வரை

சுபநேரம்: 03.21-04.51 வரை
இராகுகாலம்:.09.21-10.51 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### உலகுக்கு நன்மை செய்தல்

"உங்களுடைய மதத்தால் சமுதாயத்துக்கு என்ன நன்மை?" என்று நம்மைக் கேட்கிறார்கள். சத்தியத்தின் சோதனைக்களமாகச் சமூகம் கருதப்படுகிறது. இது தர்க்க ரீதியில் பொருத்தமற்றது. நாம் முன்னேறிச் செல்லும் பாதையின் ஒரு கட்டம்தான் சமூகம். ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் உபயோகம், அதன் நன்மை இவற்றை , அது ஒரு குழந்தைக்கு எவ்வாறு உதவுகிறது என்பதைக் கொண்டுதான் நிர்ணயிக்க முடியும் ; ஒப்புக்கொள்ள முடியும். இதை எண்ணிப் பார்ப்பதே ஆபத்தாக இருக்கிறது. சமுதாயம் மாறாமல் ஒரே நிலையில் இருப்பதாக இருந்தால், அது குழந்தை குழந்தையாகவே இருப்பது போன்றதாகும். முழுமை அடைந்த 'மனிதக்—குழந்தை' ஒன்று இருக்க முடியாது; அந்த இரண்டுமே முரண்பட்டவை. ஆகையால் பரிபூரணநிலை அடைந்த சமுதாயமும் இருக்க முடியாது.

இப்படிப்பட்ட ஆரம்பக் கட்டங்களிலிருந்து மனிதன் வளர்ச்சியடைய வேண்டும்; நிச்சயம் வளர்ச்சியும் அடைவான். ஒரு கட்டத்தில் சமுதாயமானது நல்லதாக இருக்கும். ஆனால் அது நம்முடைய இலட்சியமாக இருக்க முடியாது. அது ஓயாது மாறிக் கொண்டிருக்கும். தற்போதுள்ள வர்த்தக நாகரிகமானது, அதனுடைய ஏமாற்றுதல்கள், தில்லுமுல்லுகள், பகட்டுகள் ஆகியவற்றுடன் ஒழிந்துதான் ஆக வேண்டும். இவையனைத்தும் வெறும் பகட்டார வாரம். தனிப்பட்டவர்கள் மூலம் சிந்தனைச் சக்தி வளர்ச்சி அடைவதே இப்போது உலகத்துக்குத் தேவை. "உனக்குள் இருக்கும் தாமரை மலருமாறு நீ ஏன் செய்யக்கூடாது? அப்போது வண்டுகள் தாமாகவே அங்கு வந்து சேரும்" என்று என்னுடைய குரு கூறுவது வழக்கம். ஆண்டவன் பிரேமையால் பித்துப் பிடித்திருப்பவர்கள் உலகத்துக்குத் தேவை. உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். அப்போதுதான் உலகின் மீது உங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். நம்பிக்கையுள்ள ஆறு மனிதர்கள், ஆழ்ந்த பரிசுத்தமான ஒழுக்கமுடைய ஆறே மனிதர்கள் செய்த காரியந்தான் இந்த உலக வரலாறாகும். மூன்று விடயங்கள் நமக்கு வேண்டும் : உணர்வதற்கான இதயம், சிந்தனைத் திறனுள்ள மூளை, வேலை செய்யக்கூடிய கரங்கள் ஆகிய மூன்றுமே நமக்கு வேண்டும். முதலில் நாம் உலகத்தை விட்டு வெளியேறி நம்மைத் தகுதியான கருவிகளாக் ஆக்கிக் கொள்வோம். முதலில் உங்களைச் சக்தி நிறைந்தவர்களாகச் செய்து கொள்ளுங்கள். உலகின் இன்னல்களை உணருங்கள்.

## பாடசாலைக்கு மகளை தோளில் சுமந்து செல்லும் பிரிட்டன் பிரதமர் கமரூன்





பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தனது மகளை தோளில் சுமந்தபடி பாடசாலைக்கு அழைத்துச் செல்கின்றார்.

மனைவிக்கு நல்ல கணவனாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக, வாரம் ஒருமுறை தனது மகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்று வருகிறார். அவர் தனது தோள்களில் சுமந்தபடி, மகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்கிறார். எல்லா நாடுகளிலும் இப்படி நடக்குமா?

## சுடோக்கு

### எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | 5 | | | |
| | | | | | | 7 | 2 | 6 |
| | 3 | | | 6 | 2 | | | 4 |
| | 7 | | | | 1 | 2 | | 9 |
| 1 | | 4 | 9 | | 7 | 5 | | 3 |
| 9 | | 5 | 6 | | | | 4 | |
| 7 | | | 2 | 5 | | | 3 | |
| 3 | 5 | 6 | | | | | | |
| | | | 4 | | | 6 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 7 | 9 | 8 | 4 | 6 | 3 |
| 7 | 6 | 8 | 4 | 2 | 3 | 5 | 1 | 9 |
| 9 | 4 | 3 | 1 | 6 | 5 | 8 | 2 | 7 |
| 4 | 7 | 9 | 2 | 5 | 6 | 3 | 8 | 1 |
| 3 | 2 | 6 | 9 | 8 | 1 | 7 | 4 | 5 |
| 5 | 8 | 1 | 3 | 7 | 4 | 6 | 9 | 2 |
| 8 | 3 | 7 | 6 | 1 | 9 | 2 | 5 | 4 |
| 6 | 1 | 4 | 5 | 3 | 2 | 9 | 7 | 8 |
| 2 | 9 | 5 | 8 | 4 | 7 | 1 | 3 | 6 |

## கடலிலும் அழகான வண்ணத்துப்பூச்சி



கடல் வண்ணத்துப்பூச்சி (பட்டர்ஃப்ளை) மிகவும் அழகாகக் காணப்படும். இவை அண்டார்டிகா போன்ற குளிர் பிரதேசங்களில் காணப்படும். அதன் இறக்கைகள் கண்ணாடி மாதிரி பளபளவென்று காணப்படும். அதன் இறக்கைகள் கண்ணாடி போன்று இருப்பதால் இது கடலுக்குள் பறந்து செல்லும் போது அதனது அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இது கடல் நத்தைகள் குடும்பத்தை சேர்ந்தது. தண்ணீருக்குள் மிகவும் அழகான, சீரான வேகத்தில் கடல் வண்ணத்துப்பூச்சி பறக்கும்.

## விரைவில் வருகிறது கண்கவர் கடிகாரம்




பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று, ஒரு புத்தம் புதிய ரக ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் மும்முரமாகக் களமிறங்கியுள்ளது. இலகுவான பயனர் இடைமுகத்துடன் கவர்ச்சிகரமானதாக வடிவமைக்கப்பட்டுவரும் இந்தக் கடிகாரம் சகல வசதிகளையும் கொண்டுள்ளது. இந்தக் கண்ணைக் கவரும் கடிகாரம் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விற்பனைக்கு வருகிறது சொனி நிறுவனத்தின் தலைமையகம்


உலகின் முதற்தர இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமாக மக்களின் நம்பிக்கையை வென்ற சொனி நிறுவனம், ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள தனது தலைமையகத்தை விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. தனது கட்டமைப்பை புதுப்பிக்கும் பொருட்டே இந்த முடிவை சொனி நிறுவனம் எடுத்துள்ளது.

இந்த நிறுவனம் இவ்வருட இறுதிக்குள் 1000 வரையான தனது பணியாளர்களை இடைநிறுத்தவுள்ளதாக அறிவித்திருந்ததுடன், அமெரிக்காவிலுள்ள 20 களஞ்சியங்களையும் மூடவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தநிலையிலேயே டோக்கியோவிலுள்ள தலைமையகத்தை விற்பனை செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனை விற்பனை செய்வதன் மூலம் 146.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக சொனி நிறுவனம் பெற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சீனாவில் அறிமுகமாகவுள்ள புதிய கையடக்கத் தொலைபேசி

புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள கையடக்கத்தொலைபேசியொன்று சீனாவின் தலைநகரான பீஜிங்கில் வெளியிடப்படவுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள வர்த்தக நிகழ்வு ஒன்றில் இருவகையான சாதனங்களை சீன நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.




## உடல் ஆரோக்கியத்தை கண்காணிக்க நவீன கையடக்கத் தொலைபேசி

உடலின் குருதி அமுக்கம், ஒட்சிசன் போன்ற அளவுகளை கண்காணிப்பதற்கு கையடக்கத்தொலைபேசியில் புதிய தொழில்நுட்பம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

விசேட சிப் மற்றும் சென்சர்களைக் கொண்டதாக இந்தத் தொலைபேசி காணப்படும்.

இந்தத் தொலைபேசியை கொண்டு விசேட அப்பிளிக்கேஷன் ஒன்றின் மூலம் இதயத்துடிப்பு வீதம், சுவாச வீதம், உடல் வெப்பநிலை, குருதி அமுக்கம், குருதியில் ஒட்சிசனின் மட்டம் போன்றவற்றை நாள்தோறும் இலகுவாக கண்காணிக்க முடியும்.

## இரு இயங்குதளங்களைக் கொண்ட கையடக்கத் தொலைபேசி




இந்தப் புதிய கைப்பேசி இரு இயங்குதளங்களைக் கொண்டதாக வெளிவரவிருப்பதுடன் பயனர்கள் தாம் விரும்பிய இயங்குதளத்தில் கைத்தொலைபேசியை இயக்கமுடியும்.

உலகத் தரம் வாய்ந்த கைப்பேசிகளை உற்பத்தி செய்து அறிமுகம் செய்யும் நிறுவனமான நொக்கியா தற்போது இரண்டு இயங்குதளங்களைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசி உற்பத்தியில் களமிறங்கியுள்ளது.

இந்தப் புதிய கைப்பேசி இரு இயங்குதளங்களைக் கொண்டதாக வெளிவரவிருப்பதுடன் பயனர்கள் தாம் விரும்பிய இயங்குதளத்தில் கைத்தொலைபேசியை இயக்க முடியும்.

இதேவேளை கார்பொன் (Karbonn) நிறுவனமும் அன்றொயிட் (Android) மற்றும் விண்டோஸ் (Windows) இயங்கு தளங்களைக் கொண்ட கைப்பேசி உற்பத்தி தொடர்பாக மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் ஏற்கனவே ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதுடன் அதன் கையடக்கத்தொலைபேசி இன்னும் 6 மாதங்களில் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



சுகவீனமுற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா பூரண சுகமடைய வேண்டி பிரார்த்தனையும், விசேட பூஜையும் கல்முனை புலவிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பூஜை வழிபாட்டில் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன், ஆலோசகர் சீ.வரோதயன், வவுனியா நகரசபைக் கிளைத் தலைவர் ஆர்.சித்திரன் உட்பட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஓ-30)

## பொதுக் கூட்டங்கள்

நெல்லியடி, மார்ச் 14

வட.இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

★ ★ ★

நெல்லியடி, மார்ச் 14

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் பதினொராவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறு காலை 9.30 மணிக்கு மாலிசந்தியிலுள்ள அலுவலகத்தில் நிறுவனத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் அதிகாரி செல்வி கந்தையா வேணுகாபதி கலந்து கொள்ளவுள்ளார்.

இதுவரை காலமும் சிறப்பாக செயற்பட்ட 48 அங்கத்தவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் நடப்பு வருட புதிய நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவும் இடம்பெறும். (ஓ)

## கைப்பணிக் கலைஞர் விவரங்களை பதிவு செய்யலாம்

சில்ப தேசிய கைப்பணிக் கண்காட்சியும் போட்டிகளும் மாவட்ட மாகாண தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளதால் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கைப்பணிக்கலைஞர்கள் தமது விவரங்களை பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலைஞர்கள் அங்கு கடமையில் இருக்கும் தொழிற்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் உடன் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசெயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஓ-7)

## சாவகச்சேரி வணிகர் மன்ற 35 ஆவது வருடாந்தக் கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 35 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாணவர்கள் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கவென வணிகர் மன்றினால் வைப்பிலிடப்பட்ட கல்வி ஊக்குவிப்பு நிதி இங்கு வைத்து வழங்கப்படும். மேலும் விதவைகள், ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கான உதவிகளும் வழங்கப்படும். அத்துடன் மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளையின் ஓய்வு நிலை முகாமையாளர் க.சண்முகலிங்கத்தைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும். (க-9)

## வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவரின் உறவினர் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம், மார்ச் 14

கடந்த 8 ஆம் திகதி இரவு வீதியோரத்தில் காணப்பட்ட நடராஜா (வயது-68) என்பவர் பொலிஸாரால் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு விடுதி இல - 8 இல் சேர்க்கப்பட்டுள்ளார். இதுவரை இவரது உறவினர் யாரும் இவரைப் பார்க்க சமுகமளிக்கவில்லை. கரணவாய் வடக்கு, கரவெட்டி என்பது இவரது முகவரியென தெரிய வந்துள்ளது. இவருடைய உறவினர்கள் வைத்தியசாலைக்கு உடன் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## சமய சந்நிதி

அச்சுவேலி, மார்ச் 14

வளலாய் பெரிய நாக தம்பிரான் கோயில் பங்குனி உத்தர மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். விசேட அபிஷேகம் (நன்னீராட்டு) சிறப்பு உற்சவத்தை அடுத்து மகேஸ்வர பூசை நடைபெறும்.

ராகு- கேது மூர்த்தங்கள் கொண்ட சர்ப்ப தோஷ பரிகார தலத்தைத் தரிசித்து பயன் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-11)

## டிப்ளோமா வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஈ-சொப்ற் மெட்றோ கற்கை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆண்டுக்கான டிப்ளோமா வழங்கும் வைபவம் இன்று முற்பகல் 10.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக ஈ-சொப்ற் நிறுவனங்களின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான கலாநிதி தயான் ராஜபக்ஷ கலந்து கொள்வார். (க)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மயில்வாகனம் புத்திரசிகாமணி

தோற்றம் 01.07.1940 மறைவு 23.02.2013

தந்தையை தானிழந்தார்க்குத்
தரணியிலே அமைதியுண்டோ
ஓயாது உம் நினைவுகள்
உள்ளத்தை வாட்டுகின்றன
எத்தனை பிறவிகள் நாம்
எடுத்திட்ட போதிலும்
என்றும் எம் உறவாக நீங்கள் வர
காத்திருக்கின்றோம்.

சுதுமலை மத்தி, மானிப்பாய்.
குடும்பத்தினர்.
(45693)(7.6.3)



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராஜா மனோகரதாஸ்

தோற்றம் 02.08.1957 மறைவு 04.08.2012

ஈராண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள்
எம்மை விட்டு அழியவில்லை
என்றும் உம் நினைவுகளுடன்

50/18, [illegible]
(45695)(3.6.4)



90 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 12 . 11 . 1978
மறைவு 15 . 12 . 2013

அமரர் சுப்பிரமணியம் தவசீலன்

நாள்கள் தொண்ணூறு ஆன போதும்
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் – எம்
நெஞ்சை விட்டு அகலாது.

இன்று (14.03.2014) வெள்ளிக்கிழமை நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் வட்டாரம், திம்பிலி, கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (43206)(12.6)
குடும்பத்தினர்.



21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 17.04.1925
மறைவு 22.02.2014

அமரர் முருகேசு ஆறுமுகம்

(தேசிய சிறுகைத்தொழில் கூட்டுத்தாபன பார ஊர்திச் சாரதி, S.A.S.லொறி உரிமையாளர்)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தெய்வமே!
நித்தமும் உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 22.02.2014 சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிசெய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (14.03.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
021 224 1982



4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் S.S.தேவசகாயம்


(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



தோற்றம் 08.02.1923
மறைவு 14.03.2010

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே! உங்கள் நினைவுகளுடன்
நாம் வாழ்கின்றோம்.

இல.28, நக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (45692)(3.6.4)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை பிரதான வீதியைக் "காப்பெற்" வீதியாக மாற்றும் வேலைகள் தற்சமயம் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. முதற்கட்டமாக அல்லைப்பிட்டி, மண்கும்பான் வீதிகளில் காணப்படும் பாலங்கள், மதகுகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ஓ-7)

# என்றும் அவன்தாள் நினை

இல்லறத்தில் ஈடுபடுவோரும், இல்லறத்தில் இருக்கும் போதே, பற்றற்றிருக்க வல்லவராயின், அவர்களும் துறவிகளே ஆவர். அவர்கள் துறவிகளில் சிறந்தவருமாகலாம். வேதத்தோடொத்ததாகிய திருக்குறளை உலகுக்கருளிய தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் , இல்லறத்தில் நின்றொழுகியவராயினும் ஒரு மேலான துறவியே. ஜனகமகாராசனும் அங்ஙனமே. அவர்களது வாழ்வு இல்லறத்தாருக்கு நல்ல வழிகாட்டியாகும்.

ஞானக்கதிர்

இல்லறத்தில் இருந்து கொண்டு தத்தமக்கேற்ற தொழில் புரிந்து வாழ்ந்தவர்களும், இறை பணிகளில் ஏதாவதொன்றை இறுகப் பற்றி நின்றதனால் திருவருட் பேற்றுக்கு ஆளாகினர் என்று பெரியபுராணம் கூறுகின்றது. இதனை இல்வாழ்வுடையோர், சிந்தித்து, தெளிந்து கடைப்பிடிப்பார்களாயின் மேலான நன்மை பெறுவர். சிவாலய தரிசனம், சிவாலயசேவை, குரு, சிவனடியார் ஆகிய கண்கண்ட தெய்வங்களைத் தரிசித்தல், அவர்களுக்குச் சேவை செய்தல் ஆகியவை சிவபுண்ணியச் செயற்பாடுகள். மோட்சம் தருவன. நல்லவர்களோடு சேருதல் எப்போதும் நன்மையே தரும். தீயவர்களோடு சேருதல் எப்போதும் தீமையே தரும்.

ஓட்டைக் குடத்துள் நீரைவிட்டால் , அந்த நீர் அதனிலிருந்து ஒழுகிப்போவது ஆச்சரியமன்று. அதனுள் ஒழுகாமல் நிற்பதே ஆச்சரியம் தரும். ஒன்பது துவாரமுடைய எம்முடம்பில் உயிர் நிற்பதுதான் ஆச்சரியம்; உடம்பை விட்டுப்போவது ஆச்சரியமன்று. நம்முயிர் பிரியுமுன் நல்லதைச் செய்வோம். ஓரிடத்துக்கு ஒரு காரிய நிமித்தம் செல்லும் ஒருவன், இடைவழியில் நிகழும் வேடிக்கைகளில் கவனமின்றி அவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டே செல்லுதல் போல, மோட்சத்துக்குச் செல்லும் வாழ்வு நெறியிற் செல்லும் நாமும் இடையில் நிகழும் நிகழ்ச்சிகளில் கவனமின்றி வெறுமனே பார்த்துக் கொண்டே செல்லுவோம். நெஞ்சில் அவன் நினைவே நிலைக்கட்டும்.

**"நின்றும், இருந்தும், கிடந்தும் நினை நெஞ்சே
என்றும் அவன்தாள் இணை"**

# உற்பத்தி செய்த கசிப்பை தானாக ஒப்படைத்த பெண்

### *திடீர் சுற்றிவளைப்பில் சம்பவம்*

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரி மதுவரி நிலைய உத்தியோகத்தர்களின் அறிவுரையால் மனம் மாறிய பெண்ணொருவர் இதுவரை தான் மேற்கொண்டு வந்த சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை நிறுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

உற்பத்திசெய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு கொள்கலன்களை தானே முன்வந்து எடுத்து மது வரி நிலைய உத்தியோகத்தரிடம் கையளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் புதன்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

பொதுமக்கள் வழங்கிய இரகசியத் தகவலையடுத்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற மதுவரி நிலைய உத்தியோகத்தர்கள் அங்கிருந்து ஒரு கொள்கலனில் நிறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பை மீட்டுள்ளனர். அதனை வைத்திருந்த குறிப்பிட்ட பெண்ணுக்கு அவர்கள் வழங்கிய அறிவுரைகளையடுத்து இனிமேல் தான் அத்தகைய செயற்பாட்டில் ஈடுபட மாட்டேன் என அப்பெண் உறுதியளித்துள்ளார். (ச-9)

**சம்பவ இடத்துக்குச் சென்ற மதுவரி நிலைய உத்தியோகத்தர்கள் அங்கிருந்து ஒரு கொள் கலன் கசிப்பை மீட்டுள்ளனர்.**

# சைவப்புலவர் பரீட்சை அடுத்த மாதம் 18 முதல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள் அடுத்த மாதம் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தப் பரீட்சைகள் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம், பிரிட்டன் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

சாத்திரம், இலக்கணம், இலக்கியம், வரலாறு, உரைநடை ஆகிய ஐந்து பாடங்களில் ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்கள் கொண்டதாக பரீட்சை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கு தனித்தனியாக அனுமதிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரை அனுமதிக் கடிதங்கள் கிடைக்காதோர் 0777497100 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சைவப் புலவர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச)

# முழு நிலா கலைவிழா

வவுனியா,மார்ச் 14

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முழு நிலா கலைவிழா நாளை மறுதினம் ஞாயிறு வவுனியா தெற்குக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதிகளாக வவுனியா முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.நவரட்ணராஜா, வவுனியா தெற்கு முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வின் போது நடனம், பாடல், நாடகம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# துர்க்காபுரம் இல்ல ஆண்டு விழா நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம்.மார்ச் 14

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அன்ன பூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திரு முருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மகளிர் இல்ல மாணவிகளின் ஓவியக் கண்காட்சி இடம்பெறும். தொடர்ந்து சிறப்புரைகளும், சிறப்பு மலர் வெளியீடும் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு 'குகபாலன், சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் செல்வி கௌரி செல்வரட்ணம், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உள சமூக இணைப்பாளர் கு.கௌதமன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஓ-14)

# இணுவிலில் இன்று மாலை இசையரங்கு

யாழ்ப்பாணம்.மார்ச் 14

இணுவையூர் ரசிகப் பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் சிறப்பு இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத்தில் இடம்பெறும்.

மையத்தின் தலைவர் வி.கே. குகானந்தன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை யின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினராக வடமாகாண திரைப்படச் சங்கத் தலை வர் என்.கேசவராஜாவும் கலந்துகொள்வர். (ஓ-400)

**கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**
**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

மேற்படி கூட்டம் **19.03.2014 புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில்** அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் புதிய பிரமாணங்களுக்கமைய பழைய மாணவர் சங்கம் அமைத்தலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு உறுப்பினர்கள் நான்கு பேர் தெரிவும் பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் இருவர் தெரிவும் இடம்பெறும்.

1976 தை 19 ஆம் திகதியில் இருந்து கல்வி கற்ற பழைய மாணவர்கள் அனைவரையும் உரிய வேளையில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பே.தனபாலசிங்கம்
அதிபர்

(45722)(3.8.4) **(தனிப்பட்ட அழைப்பு இல்லை)**

**இயேசு வாழ்வு தருகிறார்**
**திறப்பின் வாசல்**
**உபவாச ஜெபம்**

திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும்
ஒரு மனுஷனைத் தேடினேன். (எசே.22:30)

**வடமராட்சியில் சனிக்கிழமை**
**6 மணி நேர உபவாசஜெபம்**

மார்ச் 15
காலை :- 9.00 மணி முதல்
பகல் :- 3.00 மணிவரை
இடம் :- இயேசுகிறிஸ்து பூரண சுவிஷேச சபை,
மணல் தெரு, கம்பர்மலை.

**தேவ செய்தியும் ஜெபமும்**

தேவனால் மிக வல்லமையாக உலகமெங்கும்
பயன்படுத்தப்படும் தேவ ஊழியர்கள்:
**Rev. ஞானம் அம்புறோஸ்**
**Pas.T.போல்ராஜ்**

**அனைத்து திருச்சபைகளின்**
★ சகல ஊழியர்களையும்,
★ சகல விசுவாசக் குடும்பங்களையும்
**மிக அன்போடு அழைக்கின்றோம்.**
(33404)(2.3.8)

தொடர்புகளுக்கு:0777 162 084, 0776 594 473,
0772 310 503, 0777 495 619

CEYLON THEATRES
**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

**இப்பொழுது திரையில்** **DAILY - 10.30am, 2.30pm, 6.30pm**



(C/12438)

Platinum | Silver | Bronze



சொகுசு பஸ்சேவையை ஆரம்பித்து வைத்தார் மஹிந்த

# தேர்தல் சட்டங்களை மீறும் மஹிந்த அரசு

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 14
அரசு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, ஒழுக்கத்தையும் சட்டத்திட்டங்களையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, அரச அதிகாரத்தை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி வருகிறது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசுக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் போயுள்ளது. மக்கள் ஆதரவு குறைந்துள்ளதால், அரசு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அரசின் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா, மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளர் கே.டி. லால்காந்த, கொழும்பு மாவட்ட வேட்பாளர் லக்ஷ்மன் நிபுணாராச்சி ஆகியோர் நேற்று வியாழக்கிழமை தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவைச் சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் சட்டங்களை அரசு பாரதூரமான வகையில் மீறி வருகிறது. இது சம்பந்தமாகவே தேர்தல் ஆணையாளருடன் பேசினோம்.

தங்காலையில் தொடங்கி தேர்தல் நடைபெறும் 6 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை முதல் 10 நாள்களுக்கு ஊர்வலங்களையும் மனுக்களில் கையெழுத்து பெறும் வேலைத் திட்டம் ஒன்றையும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளாது தேர்தல் நடைபெறும் மாவட்டங்களில் மாத்திரம் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவது தேர்தல் சட்டத்தை மீறும் செயல்.

ஊர்வலங்களை நடத்த முடியாது. தேர்தலுக்கும் அழுத்தங்களை கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட முடியாது. இது குறித்தே நாங்கள் தேர்தல் ஆணையாளருடன் பேசினோம்.

அரசின் இந்த நடவடிக்கை சட்டவிரோத நடவடிக்கை என்பதால் அதனைத் தடுத்து நிறுத்துவதாக தேர்தல் ஆணையாளர் எங்களிடம் தெரிவித்தார்.

அரசு வலுவற்ற நிலையில் உள்ளது. அரசுக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் போயுள்ளது. மக்கள் ஆதரவு குறைந்துள்ளதால், அரசு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அமைச்சர்கள், ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலர் என அரசில் உள்ள அனைவரும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்- என்றார். (ச)

# அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க சொகுசு பஸ்கள்

## திறப்புகளைக் கையளித்தார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,மார்ச் 14
அதிவேக நெடுஞ்சாலைகளூடாக பிரதான நகரங்களுக்கு பயணிப்பதற்கென 50 புதிய அதிசொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த பஸ்கள் பொதுமக்களின் போக்குவரத்தை துரிதப்படுத்தும் வகையில் நிதி அமைச்சால் போக்குவரத்து அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.

இந்த பஸ்களின் திறப்புக்களை நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ, போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கொழும்பு, காலி முகத்திடலில் இடம்பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 50 டிப்போக்களுக்கு இந்த 50 பஸ்களும் கையளிக்கப்படவுள்ளன என்று போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, பிரதி அமைச்சர் ரோஹண குமார திசாநாயக்க உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச)

# கைவிரல் அடையாளம் மூலம் 899 குற்றவாளிகள் சிக்கினர்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



அஜித் ரோஹண

கொழும்பு,மார்ச் 14
தானியங்கி கைவிரல் அடையாள முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது தொடக்கம் இதுவரை 899 குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தானியங்கி கைவிரல் அடையாள முறை அறிமுகப்படுத்தி 12 நாள்களுக்குள் 4,035 கைவிரல் அடையாளங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

அதில் நூற்றுக்கு 22 வீதமானோர் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

தானியங்கி கைவிரல் அடையாள முறை கடந்த 27 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



அகில இலங்கை சிவாலய சைக்கிள் யாத்திரை சித்தன்கேணி சிவன் கோயில் முன்றிலில் கடந்த சிவராத்திரி தினத்தில் ஆரம்பித்தது. இவ்வாறு யாத்திரை புறப்பட்ட இருவரும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை ஏறத்தாழ 1700 கிலோ மீற்றர்கள் சைக்கிளில் பயணித்து முடித்து மீண்டும் சித்தன்கேணி சிவன் கோயில் முன்றிலை வந்தடைந்தனர். அவர்களை வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் வரவேற்று வெற்றிக் கிண்ணங்களை வழங்கிக் கெளரவித்தார். (ஓ)

# வாய்ப்புற்று நோயால் தினமும் இருவர் சாவு

மட்டக்களப்பு,மார்ச் 14
வாய்ப்புற்று நோயால் இலங்கையில் நாளாந்தம் இருவர் உயிரிழக்கின்றனர் என்று ஒலுவில் மாவட்ட வைத்திய சாலையின் பல் வைத்திய நிபுணர் ஏ.ஏ.வாஸில் வாரிட் தெரிவித்தார்.

சுகாதார வாரத்தை முன்னிட்டு ஒலுவில் மாவட்ட வைத்தியசாலையால் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட வாய்ச் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொற்றா நோயான வாய்ப்புற்று நோயை தடுப்பதற்கு அல்லது சிகிச்சை அளிப்பதற்கு ஆரம்பத்திலேயே பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

ஆரம்பப் பரிசோதனை மூலம் வாய்ப்புற்று நோய் கண்டறியப்பட்டால் அதனை இலகுவில் குணப்படுத்த முடியும்.

ஒரு மனிதரின் வாயை பரிசோதிப்பதன் மூலம் 90 வீதமான நோய்களைக் கண்டறிய முடிகின்றது என்று மருத்துவத் துறை கூறுகின்றது. -என்றார். (ச)

# மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டவேண்டாம்

## அரசு வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 14
இலங்கை மீனவர்கள் சட்ட விரோதமான முறையில் ஏனைய நாடுகளின் கடற்பரப்புகளுக்குள் ஊடுருவிச் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஏனைய நாடுகளின் கடற்பரப்புகளுக்குள் ஊடுருவிச் செல்வதால் அந்த நாடுகளின் அதிகாரிகளால் கைது செய்யப்படுவது தொடர்பில் தகவல்கள் கிட்டுகின்றன. இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் வேளையில், உள்நாட்டு மீனவர்கள் ஏனைய நாடுகளின் கடற்பிராந்தியத்துக்குள் சட்ட விரோதமாக நுழைவது அந்தப் பேச்சுக்கு தாக் கத்தை ஏற்படுத்தும் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஏனைய நாடுகளின் கடல் பிராந்தியத்தில் சட்டவிரோதமாக மீன்பிடித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்தக் குற்றத்தை தொடர்ந்தும் இலங்கைக் கடற்றொழிலாளர்கள் செய்து வருவதால் சர்வதேச கடற்பரப்பில் புகுதல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு உள்ளாகும் நிலைமை இலங்கைக்கு ஏற்படுகின்றது என்று அரசு கூறியுள்ளது.

வெளிநாட்டுச் சந்தைக்கு மீன்களை ஏற்றுமதி செய்யும் போது இலங்கை கடும் கட்டுப்பாடுகளுக்கும் முகம் கொடுக்க நேரிடுகின்றது என்று அரசு கூறியுள்ளது. (ச)

# சகல வகையான மருந்துகளுக்கும் கட்டுப்பாட்டு விலைகள்

## மீறினால் கடும் நடவடிக்கை என்கிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு,மார்ச் 14
நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்து வகைகளுக்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கடந்த 4 ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலையை மீறி மருந்துப் பொருள்களை விற்பனை செய்யும் தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் மருந்தகங்களிலும், மருத்துவமனைகளிலும் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கான விலைகளை தன்னிச்சையாக அதிகரித்து விற்பனை செய்வதனால் மக்கள் பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்றனர்.

இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீண்ட காலமாக அக்கறை செலுத்தி வந்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு நிர்ணயவிலையைநடைமுறைப்படுத்துவதை துரிதப்படுத்துமாறு ஜனதிபதி கேட் டுள்ளார். அதனையடுத்தே நாம் இதனை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளோம்.



ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

மருந்தகங்களுக்கு இடையில் மருந்துகளின் விலைகள் வேறுபடுகின்றன. இனிமேல் நோயாளிகளை ஏமாற்றி பணம் பறிக்கும் செயற்பாடு தொடர அரசு இடமளிக்க மாட்டாது-என்றார். (ச)

OLD BOYS' ASSOCIATION OF
ST. PATRICK'S COLLEGE JAFFNA.
ST. PATRICK'S DAY & OBA-TEA

Old Boys as usual will participate in the College Day Celebrations attending the Triduum at the College Chapel on the 14th, 15th & 16th March commencing daily at 5.00 pm and the St.Patrick's Day Eucharist Service on Monday the 17th March, at 8.15am, followed by the Fellowship Breakfast.

All Patricians are exhorted to attend the Triduum on all three days and the Festival Mass and strengthen our affection and fidelity to our Alma Mater.

The OBA-TEA gathering will be held on 17th March at 4.30 pm commencing with a friendly football match among the Patricians at the Deogupillai Stadium.

Expecting to see the Patricians, one and all Participating in the Celebrations

14th March.2014 (45728)(5.6)
J.Nitharshan
Hony. Gen. Secretary




இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
வண்ணார்பண்ணைத் தவமையம் வழங்கும்
சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்

**காலம்:** 15.03.2014 சனி தொடக்கம் 21.03.2014 வெள்ளிவரை
சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4.30 மணி
திங்கள் - வெள்ளி வரை தினமும் மாலை 6.00 மணி

**இடம்:** **நாச்சிமார் கோயில் திருமண மண்டபம்**
கே.கே.எஸ்.வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**நிகழ்ச்சி நிரல்:** **இறை வணக்கம், குரு வணக்கம்**

**தொடக்கவுரை:**
மனவளக்கலை பேராசிரியர் **அருள்நிதி சி.முருகானந்தவேல்** அவர்கள்
(அறங்காவலர் இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

**பயிற்சி வழங்குபவர்கள்**
மனவளக்கலை பேராசிரியர்
**அருள்நிதி Dr. S.பாலசுப்பிரமணியம்** அவர்கள்
மனவளக்கலை துணைப் பேராசிரியர்
**அருள்நிதி A.தங்கராசா** அவர்கள்

**உலக நல வாழ்த்து**

தொடர்புகளுக்கு: **வண்ணார்பண்ணைத் தவமையம்**
077 772 6732, 077 123 5646, 071 440 3268, 077 736 8745

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை,
வண்ணார்பண்ணைத் தவமையம், யாழ்ப்பாணம்.
"வாழ்க வளமுடன்"
(45751)(2.6)

# கொக்குகளால் மன்னார் நகரில் சுகாதாரச் சீர்கேடு

மன்னார், மார்ச் 14

மன்னாரில் அண்மைய நாள்களாக அதிகரித்துள்ள கொக்கு களால் மன்னார் நகரத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 30 ஆண்டுகால போரின் விளைவாக காடுகளிலும் ஓடைகளிலும் சதுப்பு நிலங்களிலும் வாழ்ந்து வந்த வெள்ளைக் கொக்குகள் இடம் பெயர்ந்து மன்னார் நகருக்கு அடைக்கலம் தேடி வந்துள்ளன.

அவை தற்போது பல்கிப் பெருகியுள்ளன. குறிப்பாக மன்னார் மாவட்டச் செயலக வளாகம், அதையொட்டிய மரங்கள் நிறைந்த வீதிகள், சிறு குளங்கள், ஓடைகள் என்பனவற்றில் அவை வாழ்ந்து வருகின்றன.

அவற்றின் எச்சங்கள் சகிக்க முடியாத அளவுக்கு துர்நாற் றம் வீசுகின்றன.

இதனால் மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் அதற்கு முன்பாகவுள்ள மரங்கள், கட்டடங்கள், வீதிகள் என்பன வற்றிலும் துர்நாற்றம் வீசுகின்றது.

குறித்த இடங்களில் நடைபாதை வியாபாரிகள் தங்கள் உணவுப் பண்டங்களை வைத்து விற்பனை செய்கின்றனர். இதனால் அந்தப் பகுதியில் பெரிய சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதுடன் குறித்த வீதி யால் செல்ல முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசி வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-56)

கட்டடம் வாடகைக்கு/
குத்தகைக்கு

யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் 4000 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கட்டடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு (தேவைக்கு ஏற்ப பகுதி களாகப் பிரித்துக் கொடுக்கப்படும்) Show Room, Supermarket களஞ்சிய சாலை போன்றவற்றுக்கு சிறந்த இடம்
தொடர்பு: 0777 304 545 (45728)(6.2)

TRADE FINANCE & INVESTMENTS PLC
Since 1978
A Finance Company Licensed by the
Monetary Board Of the Central Bank of SriLanka
Under the Finance Business Act No.42 of 2011

விற்பனைக்குண்டு

மோட்டார் சைக்கிள்கள்
APACHE-150 - NPBAB-XXXX
APACHE-180 - NPXX-XXXX, NPXQ-XXXX
SPLENDER NXG - NPXS . XXXX

உழவு இயந்திரங்கள் (MASSEY FERGUSAN)
1. 49 - XXXX
2. 270 - XXXX

மோட்டார் கார்
1. WPHO-XXXX (TOYOTA HARRIER JEEP)

முச்சக்கர வண்டி
1. NPAAD-XXXX (TVS)

தொடர்பு: மேனகாந் - 077 364 4409
TRADE FINANCE AND INVESTMENTS PLC
74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898 (C12691)(5.6)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.12.1963

மறைவு
16:02.2011

திதி: திரயோதசி
(14.03.2014)

## அமரர் இராசையா பரமநாதன்

அயராது எமக்காய் உழைத்த அன்புத் தந்தையே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
இங்கு நாங்கள் உங்கள் அன்பை இழந்து தவிக்கின்றோம்.
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈசனை வேண்டுகின்றோம்.

நவாலி தெற்கு,
நவாலி.
மனைவி, பிள்ளைகள்.
(45727)(2.6)

உயர்தர அரசியல் பிரிவு மாணவர்களே!
இதோ உங்கள் வெற்றிக்கான அரிய படைப்பு
எதிர்வரும் புதன்கிழமை முதல் வெளிவருகின்றது

G.C.E. A' Level
அரசியல் விஞ்ஞானம்

பகுதி - I
460 பல்தெரிவு வினாக்களும் விடைகளும்
பகுதி - II
A பகுதிக்கான 300 சுருக்க வினாக்கள்



தொடர்புகளுக்கு:
ஆசிரியர் - வெற்றிப்படி,
இல.85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.
தொ. பே. : 011 5738855, 077 2374191
மின்னஞ்சல்: vetripadi@gmail.com
விநியோகப்பிரிவு : கொழும்பு - 011 5737592
யாழ் - 021 5677222; 071 6182182

முதலீடு 75/=

விழாமல் இரு!
விழுந்தாலும் எழுந்திரு!!

தொகுப்பாக்கம்
A. Mohanadas,
B.A(Hons), Spl in political Science, Dip in HR, SL Law College.
வெளியீடு - வெற்றிப்படி

உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள பத்திரிகை முகவர்களிடம் உடன் முற்பதிவு செய்து கொள்ளவும்.
(பாடசாலைகளுக்கு விசேட கழிவு உண்டு)

# மரண அறிவித்தல்

## செல்லப்பா இராசரத்தினம் (பேப்பர் துரைசிங்கம்)

(முன்னாள் யாழ்.பத்திரிகை விநியோகஸ்தர்,
சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா)



உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இல.45, பழைய சிலாப வீதி, நீர்கொழும்பில் வசித்தவருமாகிய செல் லப்பா இராசரத்தினம் கடந்த (10.03.2014) திங்கட்கிழமை நீர்கொழும்பில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், தம்பி முத்து - குட்டியம்மா தம்பதியரின் மரு மகனும், இராசம்மாவின் பாசமிகு கணவரும், இரத்தினம், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, அருணாசலம், இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி, காலஞ் சென்றவர்களான இராசதுரை, வைத்திலிங்கம், தங்கராணி, பரமராசா, பொன்னம்மா, தேவியம்மா, கிருஷ்ணராசா ஆகியோரின் அன்பு மைத்து னரும், பரிபூரணானந்தன், பரிமளகாந்தன் (நோர்வே), சிவானந்தன், செல்வானந் தன் (லண்டன்), ஜெயரூபி (டென்மார்க்), சு.சுந்தரலட்சுமி (சுவிஸ்), தயாளினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகரஞ்சினி, பாலரஞ்சினி (நோர்வே), சறோஜினி, உமாமகேஸ்வரி (லண்டன்), உதயகுமார் (டென்மார்க்), சந்திரகுமார் (சுவிஸ்), வரதலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், நிறேஸ்- லக்ஷாயினி (சம்பத் வங்கி, மானிப்பாய்), பானுஷா, உஷாநாத் (நோர்வே), அபிஷாலினி, குமரநாத் - துஷாலினி, அபிலாஷ், மனுதர்ஷன், ரதீவன், ரசிக்கா, பவீனா (லண்டன்), டிவோஜன், விஜோஜன், ரகீபன் (டென்மார்க்), சாருஜன், சாரங்கி (சுவிஸ்), தீபிகா, பானுஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (2.6)(45730)

ஆனந்தன் 077 6144 129 (மகன்),
சிவா 077 983 9429 (மகன்)

# இலங்கையில் மீளிணக்கம் வேண்டுமானால் தீர்க்கமான அரசியல் தீர்வே அவசியமானது

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் கருத்துக்கு கூட்டமைப்பு பதில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கையில் மீளிணக்கம் ஏற்பட வேண்டுமானால் தீர்க்கமான அரசியல் தீர்வொன்று அவசியானது. அதுவே மீளிணக்கத்துக்கான அத்திபாரமாகும் என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

கடந்த 5ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத் தொடரின் உயர்மட்ட நிரலின்போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்த கருத்துக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு வடிவம் வருமாறு:

இலங்கையில் வசிக்கும் மக்கள் பிரிவினர் இடையே சுய மரியாதையுடனான நிரந்தர அமைதி, சமத்துவம் மற்றும் நியாயம் ஆகியவற்றைக் கட்டி யெழுப்பவதற்கு பொறுப்புக் கூறல் மற்றும் மீளிணக்கம் என்பன முக்கிய தேவைகளாக உள்ளன.

### அமைச்சரின் உரையில் தவறுகள்

அதன் அடிப்படையில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரி.யர் பீரிஸ் தன்து உரையில் குறிப்பிட்ட சில விடயங்களில் காணப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டுவது பொருத்த மென்று நாம் கருதுகின்றோம். மீளிணக்கம் ஏற்பட வேண்டுமானால் தீர்க்கமான அரசியல் தீர்வொன்று அவசியமாகின் றது. அதுவே மீளிணக்கத்துக்கான அத்திபாரமும் ஆகும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு குறித்துக் குறிப்பிட்ட மதிப்பிற்குரிய பேராசிரியர் அச் செயற்பாட்டில் பங்குபற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசு விடுத்து வந்த அழைப்பை அது ஏற்றுக் கொள்ளாமையே தீர்வொன்றை அடைவதற்கான முக்கிய தடையாக இருந்தது என்று கூறினார். இது உட்பட, இக் கூற்றில் உள்ள மேலும் பல பிழைகளைச் சரி செய்வது அவசியமாகும்.

ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத ஒரு இலங்கையில் எட்டப்படக் கூடிய தீர்வொன்றுக்கான திட்ட வரைபடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்ததன் பின்னர் இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையே கடந்த 2011 ஜனவரி மாதத்தில் இரு தரப்புப் பேச்சுகள் ஆரம்பமாகின. அதன் பின்னர் அதே ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அதற்கான தமது யோசனைகளுடன் இலங்கை அரசுக்குத் தமது திட்ட வரைவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்தது.

### பதிலளிக்காத இலங்கை அரசு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகளுக்கு எழுத்து மூலம் பதில் அளிப்பதாக இலங்கை அரசின் குழுவினர் வாக்களித்தாலும், 5 மாத காலம் சென்ற பின்னரும் 7 கூட்டத் தொடர்கள் நடந்த முடிந்த பின்பும் அதை அவர்கள் நிறைவேற்றவில்லை. உண்மையில் இந்தத் திகதி வரை அதற்கான பதிலை அவர்கள் நமக்குத் தர வில்லை. எனவே எமது யோசனைகள் தொடர்பான இலங்கை அரசின் கருத்துக்களை அறிந்த பின்னர் அடுத்த கட்டப் பேச்சுகளைத் தொடரலாம் என 2011 ஓகஸ்டு 4 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அறிவித்தது.

### மீண்டும் அழைப்பு

அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் 2011 செப் ரெம்பர் 2 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் ஜனாதிபதியைக் காணச் சென்றார். மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோ சிப்புக்களின் போது பிரஸ்தாபிக்கப்பட்ட சகல விடயங்களையும், 13ஆவது திருத்தத்தின் பின்னர் பேச்சுக்கு உட்படுத்தி, அதன் பின்னர் இரு தரப்பு பேச்சுகளை மீண்டும் ஆரம்பம் செய்யலாம் என்றும், அந்த கலந்துரையாடல் களுக்குப் பின்னர் இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணக்கம் காணும் விடயங்களை, வெகுவிரைவில் அமைக்கப் படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் சமர்ப்பிக்கலாம் என்றும் அதன் போது கூறப்பட்டது.

2011 செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி இரு தரப்பு பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையே ஏற்பட்ட இணக்கப்பாடுகள் மேலே குறிப்பிட்டவாறு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டன. குறிப்பிடும்படியான முன்னேற்றம் எதுவும் இன்றியே பேச்சுகள் பெயரளவில் நடைபெற்று வந்தன. 2012 ஜனவரி 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் அறிவிக்கப்பட்டிருந்த கலந்தா லோசிப்புத் தொடர்களுக்கு அரச தரப்பில் இருந்து ஒருவர் கூட சமூகமளிக்கவில்லை. உண்மையில் பேச்சுகளைத் தொடர முடியாமல் போனதற்கான பின்னணி இவைகளேயாகும்.

அதைத் தொடர்ந்து 2012 ஜனவரி மற்றும் மே மாதம் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குத் தடையாக இருந்தது இலங்கை அரசின் ஆர்வமற்ற போக்காகும். இவை அனைத்தும் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன.

### அரச பங்காளிக் கட்சிகள் இடையூறு

இதற்கிடையே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட, அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் அமைச்சரவையைச் சேர்ந்தவர்களுமான அரச தரப்பினர் ஒரு பகிரங்கப் பிரகடனத்தை வெளியிட்டனர். அதில் 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும். அதனடிப்படையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்க வேண்டும் எனவும், அதில் உள்ள சில விடயங்களை முற்றாக நீக்கவோ அல்லது மாற்றங்களை ஏற்படுத்தவோ வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர். இவ்வாறு கூறிய வண்ணம் நம்மை தெரிவுக் குழுவில் பங்கேற் கும்படியும் கட்டாயப்படுத்தினர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் 31 உறுப்பினர்கள் உட்படுவர் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன் கட்டமைப்பில் அரச தரப்பில் இருந்து 19 பேரும், எதிர்கட்சி தரப்பில் இருந்து 12 பேரும் உட்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டது. எதிர்கட்சித் தரப்பினில் 3 அல்லது 4 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பர் என்றும் இருந்தது. இந்த நிலையில் அரசதரப்பின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையே தர்க்க ரீதியான ஒரு உடன்பாடு ஏற்பட்டாலேயன்றி, ஏற்கக் கூடிய, நியாயமான ஒரு இணக்கப்பாடு ஏற்படும் சாத்தியம் மிகவும் குறைவாகவே தென்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு வில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயங்கி வந்த தன் பின்னணி இதுவேயாகும். ஆனால் தற்போது நிலைமை இன்னும் மோசமாகி தெரிவுக் குழுவில் அரச தரப்பினர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனாதிபதி அவர்கள் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டு அடிப்படையில் செயற் படுமாறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகின்றது.

### நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை

அரசியல் தீர்வொன்றுக்கான யோசனைகளை அரசே முன்வைக்க வேண்டும் என்று கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அரசுக்கு அறிவுறுத்தி வந்தாலும் அதையும் இதுவரை அரசால் மேற்கொள்ள முடியவில்லை. ஏற்கக் கூடிய அரசி யல் தீர்வொன்றை முன் வைப்பதற்கான மனப்பூர்வ மான ஆர்வம் உண்மையில் அரசிடம் இருக்கின்றதா என்ற சந்தேகத்தையே இது ஏற்படுத்துகின்றது.

நாம் மேலே விளக்கியுள்ள விடயங்களின் அடிப்படையில். ஏற்கக்கூடிய அரசியல் தீர்வொன்றை அடைய முடியாமல் போனதற்கு வெளிவி வகார அமைச்சர் முன்வைத்துள்ள காரணங்கள் உண்மை நிலையைப் பிரதிபலிப்பவையாக இல்லை.

### பொறுப்புக் கூறல் இல்லை

பொறுப்புக் கூறல் மற்றும் உண்மையை உரைத்தல், நல்லிணக்கத்துக்கான அடித்தளங்களாகும். 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலைக் கடற்கரையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் அதே ஆண்டில் ஓகஸ்ட் மாதத்தில் 'அக்ஷன்பாம்' தொண்டு அமைப்பை சேர்ந்த 17 தொண்டர்கள் கொலை செய்யப்பட்டமை ஆகியன அதுவரை மேற்கொள்ளப்பட்ட மோசமான பாதகச் செயல்களில் உச்சங்களாகும் . அவை நடந்து 7 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் அவை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி பேராசிரியர் பீரிஸ் இச்சபை யில்பேசு கின்றார். அதேபோன்று அதற்கு முன்பு நடைபெற்ற கொடுமைகள் பற்றியும் பிரஸ் தாபிப்பது அவசியமாகும். மேற்குறிப்பிட்ட படுபாதகச் செயல்களுடன் மேலும் பலவற்றைப் பற்றி விசாரணை நடத்த ஜனாதிபதி அவர்கள் ஒரு ஆணைக்குழுவை நியமித்தார். சர்வதேச நியதிகளுக்கும் தரங்களுக்கும் உட்பட்டு விசாரணைகள் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக முக்கிய நபர்களை கொண்ட சர்வதேச குழுவொன் றும் (IIGEP) நியமிக்கப்பட்டது. அதன்போது மேலே குறிப்பிட்ட இரு படுகொலை சம்ப வங்கள் தொடர்பாக சாட்சிகளைக் கையாள்வதை சட்ட மா அதிபரோ அல்லது அவரு டைய பிரதிநிதியோ மேற்கொள்ளக் கூடாது எனவும் IIGEP குழு நிபந்தனை இட்டது. அரசையும் பாதுகாப்புப் பிரிவினரையும் பாதுகாக்கும் விதத்தில் சட்ட மா அதிபர் மனித உரிமைகள் ஆணைக் குழு முன் முயற்சிகளை மேற்கொண்டமையையே இந் நிபந்தனைக்கான காரணமாக IIGEP குழுவினர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

### சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்

அதே போன்று, சாட்சிகள் மற்றும் துன்புற்றவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகச் சட்ட மூலம் ஒன்றை இயற்றுவதன் அவசியம் குறித்தும் அந்தக் குழு வலியுறுத்தியது. இருப்பினும் அரசின் பூரண அனுசரணையுடன் சட்ட மா அதிபர் தொடர்ந்தும் சாட்சியங்களை கையாண்டதோடு, சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம் தொடர்பான வலியுறுத்தலும், முதலில் ஆரம்பிக்கப்பட்டு, இரு தடவை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கும் எடுத்துக் கொண்டதன் பின்னர் கிடப்பில் போடப்பட்டது. இந்த நிலையில் சாட்சிகளுக்கு மேற் கொள்ளப்பட்ட பல அச்சுறுத்தல்கள் காரணமாக அவர்கள் நாட்டை விட்டே வெளியேறி னர். அதன் பின்னர் தொலை பேசி மூலம் அவர்களுடைய சாட்சிகளை பதிவு செய்யும் செயற்பாட்டையும் நிறுத்திவிட அரசு நடவடிக்கை எடுத்தது.

அதன் பின்னர் நடைபெற்றுள்ள மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச நியதிகளின்படி விசாரணை நடத்துவதற்காக உண்மையான ஆர்வமோ, தேவையோ இலங்கை அரசுக்கு இருப்பதாகத் தென்படவில்லை என்று பகிரங்க மாகவே அறிவித்துவிட்டு, IIGEP தன்னுடைய பாத் திரத்தில் இருந்து விலகிக் கொண்டது.

நீண்ட நாள்களுக் குப் பின்னர் 'அக்ஷன்பாம்' அமைப்பு சுயமாக ஒரு விசாரணையை நடத்தியதுடன், தமது தொண்டர்களை கொலை செய்தவர்கள் இராணுவத்தினரே என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

போரின் இறுதிக் கட்டங்களில் கொல்லப்பட்ட தமிழ் பொது மக்களின் எண்ணிக்கையை உறுதி செய்து கொள்வதற்கு, அச்சமயத்தில் மோதல் நடை பெற்ற பகுதிகளில் சிக்கியி ருந்தவர்களின் சரியான எண்ணிக்கையை அறிவது அவசியமாகும். நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் சனத் தொகைக் கணிப்பு மூலம் இது சாத்தியமாகாது. மோதல் இடம் பெற்ற பகுதிகளில் சுமார் 60,000 பேர் இருந்தனர் என்று அரசு கூறுகின்றது. ஆனால் சரியான கணிப்பீடுகளின்படி அந்த எண் ணிக்கை 350,000 என நம்பப்படுகின்றது. மோதல் முடிவடைந்ததும் சுமார் 290,000 பேர் வெளியேறி வந்தனர். இது குறித்து அறிவதற்கு நேரடி அணுகுமுறையே அவசியமாகும். நிலைமையை மேலும் குழப்புவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

இதற்காக இராணுவ மேலிடமே அமைக்கும் இராணுவ விசாரணைக் குழுவின் மீது நம்பிக்கை வைக்க முடியாது என்பதை சொல்லத் தேவையில்லை. தங்கள் புறத்தில் இருந்து நடைபெற்ற அக்கிர மங்களுக்காக அவர்களையே நீதிபதிகளாக நியமிக்கும் போது அந்தச் செயற்பாட்டில் நேர்மையை எதிர்பார்க்க முடியாது. அவை தொடர்பாக இலங்கை அரசு காட்டிவரும் பிடிவாதம் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருப்பதையே மேலும் உறுதி செய்கின்றது. இனியும் தன்னுடைய பொறுப்பை இலங்கை அரசு செய்து முடிக்க முன்வரா விட்டால் அதன் விளைவுகளை அனுபவிப்பதை தவிர்க்க முடி யாமல் போகலாம். இருந்தாலும், சுயாதீனமான, நம்பகத் தன்மை மிக்க உள்ளூர் விசாரணை ஒன்று நடை பெறுவதை நாம் ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது என்பதற்கு கடந்த கால நிகழ்வுகள் சாட்சி பகர்கின்றன.

### காணிப் பிரச்சினைகள்

காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மிக அவசியமாவ துடன், இதுவும் மீளிணக் கத்துக்கான மற்றுமொரு அத்திபாரமாகும். பாதுகாப்புப் படைகளின் துணையோடு, இலங்கை அரசு தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சனத்தொகை மற்றும் கலாசார வரை படத்தை மாற்றியமைக்க திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது என்ற சந்தேகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பலமாகவே உள்ளது. நாடாளுமன்றத்தில் இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல முறை பிரஸ்தாபித்திருந்தாலும் இந்த திட்டம் தங்கு தடையின்றி செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தினர் வசம் இருந்த பெருந்தொகை காணிகள், போர் முடிந்த பின்பும் அவர்கள் கைகளிலேயே தொடர்ந்தும் உள்ளன. அதில் இருந்து சிறு பகுதி விடுவிக்கப்பட்டுள்ளமை மட்டுமே உண்மை ஆனால் தமக்குச் சொந்தமான காணிகளை இராணுவம் தொடர்ந்தும் அவர்கள் வசம் வைத்துக் கொண்டி ருப்பதன் ஒரே காரணமாக அகதி முகாம்களிலும், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் தவித்துக் கொண்டிருப்போர் பலர் உள்ளனர்.

அரசு இது குறித்து பரிந்துரைகள் செய்தும், நாடாளு மன்றததில் இது பற்றிப் பேசியும், உயர் நீதிமன்றம் தனது தீர்ப்புக்களை அப்பாவித் தமிழ் மக்களுக்கு சார்பாக வழங்கியும், வடக்கில் வலிகா மம் மற்றும் கிழக்கில் சம்பூர் உட்பட பல பகுதிகளில் கைப்பற்றிய காணிகளை இராணுவம் விடாப்பிடியாக தம் வசம் வைத்த வண்ணமே உள்ளது. அது மட்டுமின்றி, போர் முடிவுற்றதன் பின்னர் பல புதிய காணிகளையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர். இராணுவம் மட்டுமன்றி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் தமிழர்களுக்கு சொந்தமான காணிகளைக் கைப்பற்றியுள்ளதால், தமது வாழ்வாதார செயற்பாடுகள் மற்றும் வதிவிடத் தேவைகளுக்காக தம்முடைய பாரம்பரியக் காணிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் அந்த மக்கள் அகதிகளாக நிர்க் கதியாகித் தவிக்கின்றனர். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் இல்லாத பகுதிகளிலும் அவர்களுடைய மதத்தைப் பரப்புவதற்காகவும் மேற்படி காணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுபான்மை இனங்களின் மதவழிபாட்டு ஸ்தலங்கள் மற்றும் அவர்களுடைய கலாசார சின்னங்களுக்கு எதிராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தாக்குதல்களை மேற்கொள்வது இலங்கையில் இப்போதெல்லாம் ஒரு சாதாரண விடயமாக மாறிவிட்டுள்ளது. இந்தத் தாக்குதல்களை நடத்துபவர்கள், சட்டத்தின் கரம் தம்மைத் தீண்டவே தீண்டாது என்ற முழு நம்பிக்கையுடன் செயற்பட்டு வருவதைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. அரசின் மௌனம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிறுத்த வேண்டிய அரசின் அமைப்புக்களின் செயலின்மை இது போன்ற துணிச்சலை அந்தக் கயவர்களுக்கு தந்துள்ளது.

### இராணுவத் தலையீடு

வடக்கு மாகாண சபைத் தேர்தல் சமயத்தில் அரசின் பாதுகாப்புப் படைகள் நடந்து கொண்ட விதத்தில் இருந்தே, அங்கு சிவில் கருமங்களுக்கு அவர்கள் இடையூறு செய்யும் விதத்தை உள்நாட்டு, வெளி நாட்டு கண்காணிப்பாளர்கள் கண்கூடாகக் கண்டு தமது அறிக்கைகளில் அவை பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் ஜனாதிபதி அவர்களும் மாதந் தோறும் ஒரு பிரகடனத்தை மேற்கொள்வதன் மூலம் இலங் கையின் சகல மாவட்டங்களி லும் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நிறுத்துமாறு பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தி வருகின்றார்.

17ஆவது சீர்திருத்தத்தை இல்லாமல் செய்வதன் ஊடாக அரசியல் யாப்பு சபை கலைக்கப்பட்டதோடு, அதைத்தொடர்ந்து 18 ஆவது சீர்திருத்தத்தை கொண்டு வந்ததன் மூலம் நீதித்துறை, பொதுத்துறை, பொலிஸ் திணைக்களம் போன்றவைகளின் சுயாதீனம் மிக மோசமான நிலைக்கு வந்துள்ளதுடன் அவைகளின் கட்டுப்பாடு ஏகாதிபத்திய சாயல் துரிதமாக அதிகரித்துவரும் நிறைவேற்று அதிகாரத்தின் பிடிக்குள் இறுகி வருகின்றன. - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வன்னியில்

தாயாரும் நேற்று மாலையில் திடீரெனக் கடத்தப்பட்டனர் என்று வதந்தி பரவியது. ஆனால் நேற்று இரவு வரை அவர்கள் தருமபுரத்தில் உள்ள அவர்களது வீட்டில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் தீவிரமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று உறுதியாகத் தெரியவந்தது. அதன் பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு வவுனியாவில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே "கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம், உசிலம்பட்டி பிரதேசத்தில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் அந்தப் பகுதிக்கு தேடுதலுக்காகச் சென்றனர். நேற்று மாலை 3.30 மணியளவில், திடீரென பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தப்பி விட்டார். இதில் காயமடைந்த பொலிஸ் நபர் சிகிச்சைக்காக இரணைமடு விமான நிலையம் ஊடாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்" என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தன.

தமக்கு சூட்டுச் சத்தம் கேட்டதாக சம்பவ இடத்திற்கு அருகே குடியிருப்பவர்கள் கூறுகின்றனர். சூட்டுச் சம்பவத்தையடுத்து தருமபுரம் மற்றும் கல்லாறு, பிரமனந்தாறு உள்ளிட்ட பல பிரதேசங்களில் உடனடியாக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீடு வீடாக தேடுதல் வேட்டையும் நடத்தப்பட்டது என்று கூறப்படுகிறது.

அதே போன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் வீதிகளில், வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து அடையாள அட்டை மற்றும் பொதிகள், உடல்பரிசோதனை என்பவற்றில் ஈடுபட்டனர். போர்க் காலச் சூழல் போன்றே இரு மாவட்டங்களிலும் இராணுவத்தினர் குவிக்கபட்டு இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று மக்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

இதற்கிடையே பாலேந்திரன் ஜெயகுமாரி (வயது - 50), அவரது மகளான விபூசிகா (வயது-13) இருவரும் வசித்து வந்த வீடு இராணுவத்தினராலும் பொலிஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது.

ஜெயகுமாரியின் மூன்றாவது மகன் இறுதிப் போரின்போது காணாமற்போயிருந்தார். எனினும் அவர் தடுப்பு முகாமில் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் முகமான படம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் காட்டப்பட்டிருந்தது என்கிறார் இவர். எனவே காணாமற்போன மகனைத்தேடி தாயும் மகளும் நடத்தப்படும் சகல போராட்டங்களிலும் பங்கெடுத்து வந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, யாழ்ப்பாணம் வந்த போது நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம், பிரிட்டன் பிரதமர் யாழ்ப்பாணம் வந்த போது நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் எல்லாவற்றிலும் பங்கெடுத்திருந்தனர்.

குறித்த சிறுமி "அண்ணாவைத் தாங்கோ" என்று கதறியழும் காட்சி பலரையும் கண்ணீர் விட வைத்திருந்தது. இதனால் உள்ளூர் ஊடகங்கள் மற்றும் சர்வதேச ஊடகங்களினால் குறித்த சிறுமி தொடர்ச்சியாக பிரபல்யப்படுத்தப்பட்டிருந்தாள். அத்துடன் சனல் - 4 தொலைக்காட்சிக்கும் சிறுமி நேர்காணல் வழங்கியிருந்தாள்.

குறித்த சிறுமி, தந்தையை ஏற்கனவே இழந்த நிலையில் போரில் இரு அண்ணன்களையும் பறிகொடுத்திருந்தாள். அத்துடன் இரு வாரங்களுக்கு முன்னரே குறித்த சிறுமி பூப்படைந்திருந்ததுடன், அதற்கான பூப்புனித நீராட்டு விழாவும் இந்த மாதம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே குறித்த சிறுமியையும், தயாரையும் பயங்கரவாதப் பிரிவினர் நேற்று பலமணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தினர். அவர்களது வீட்டிலிருந்தே, பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டபோதும் உறுதிப்படுத்தப்படவில்லை.

விசாரணையின் பின்னர் சிறுமியும், தாயும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றபோதும், அவ்வாறு எந்தச் சம்பவமும் இடம்பெறவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்தினர் தெரிவித்த னர்.

இதுகுறித்துக் 'பிபிஸி'க்குக் கருத்துத் தெரிவித்திருந்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண,

"அந்த வீட்டுக்கு ஒரு கிரிமினல் குற்றவாளியைத் தேடி பொலிஸார் சென்றிருந்தனர். எனினும் அவர் தப்பிச் சென்றுவிட்டார். அப்போது பொலிஸார் ஒருவருக்குக் காலில் காயம் ஏற்பட்டது. காயமடைந்தவர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பதை என்னால் உடனடியாக கூற முடியாது. அங்கு பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். இந்தச் சம்பவத்தில் இராணுவத்துக்கு சம்பந்தம் கிடையாது என்றும் அது ஒரு கிரிமினல் சம்பவம் மாத்திரமே" என்று தெரிவித்துள்ளார்.

இரவு 10 மணியளவில் குறித்த சிறுமி வீட்டிலிருந்து பொலிஸார், இராணுவத்தினரின் வாகனங்கள் போய் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இராணுவத்தினர் குறித்த பகுதியில் தொடர்ந்தும் குவிக்கப்பட்டேயிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வீடுகளிலும் இராணுவத்தினர் நேற்று நள்ளிரவு வரை நிலைகொண்டிருந்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.(உ-5-426)

### சந்தேகநபரை

திரன் பிரபாகரனை விரைவில் நீதிமன்றத்தில் முற்படுத்த வுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவருடன் இந்த மோசமான செயலைச் செய்தார்கள் என்று கருதப்படும் மேலும் இருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். அவர்கள் தலைமறை வாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

தேடப்படும் சந்தேகநபர்களில் ஒருவர் மந்திகை புலோலியில், வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வருபவரின் மகன் என்றும் மற்றையவர் துன்னாலை குடவத் தையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் கூறினர்.

மூன்றாவது சந்தேகநபரான பிரபாகரன் ஹன்ரர் சாரதி. துன்னாலை கிளவிதோட்டத்தைச் சேர்ந்தவர். இவர் சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த ஹன்ரருடன் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தமை தொடர்பான வழக்கு ஏற்கனவே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றில் அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அதற்காக சந்தேகநபர் பிரபாகரன் நீதிமன்றத்துக்கு வருவதற்காக தனது தாயார் மற்றும் சகோதரியுடன் பயணித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் துன்னாலை முல்லை வீதியில் இடம்பெற்றது வன்புணர்வுக் குற்றச் செயலில் வரணியைச் சேர்ந்த இளம் பெண் பாதிக்கப்பட்டார். அவரது காதலன் என்று கூறப்படும் அல்வாயைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான இளைஞனுடன் வீதியோரம் ஓட்டோவை நிறுத்திவிட்டுக் கதைத்துக் கொண்டிருந்த போது இந்தக் குற்றம் இடம்பெற்றதாக அவர்கள் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

ஓட்டோவைக் கடந்து மோட்டார் சைக்கிள்களில் சென்ற மூவர், திரும்பி வந்து இங்கு ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டு தன்னைத் தாக்கினர் என்று அந்த இளைஞர் கூறியுள்ளார். இருவரையும் பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்றுகூறி அழைத்துச் சென்ற அவர்கள் பற்றைக்குள் கொண்டு சென்று தன்னைக் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு தனது காதலியை தனக்கு முன்பாகவே மூவரும் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்றும் அவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இடத்திலிருந்து சந்தேகநபர் ஒருவரினுடையது எனக் கருதப்படும் பேர்ஸ் மற்றும் ஆவணங்கள் சிலவற்றைப் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஆணும் பெண்ணும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். (உ-4)

### கொலையல்லாத

ழுந்தார். அதையடுத்து அதே இடத் தைச் சேர்ந்த விநாயகமூர்த்தி என்பவர் சுன்னாகம் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார். மல்லாகம் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. யாழ். மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.மணிவண்ணன் கொலையல்லாத மரணம் விளைவித்த குற்றச்சாட்டை குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்தார்.

அதனையடுத்து அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்ததோடு அதனைச் செலுத்தத் தவறின் ஒரு வருடகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து அதனை ஆறு வருடங்களுக்கு ஒத்திவைத்தும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ற)

### மாங்குளத்தில்

டுள்ளது. அவரது சகோதரி நேற்று அதனை அடையாளம் காட்டினார்.

கடந்த வருடம் மாகாண சபைத் தேர்த லுக்கு முதல் நாள் வவுனியாவில் இருந்து புறப்பட்ட இவர் பின்னர் காணாமற்போயிருந்தார். அவர் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சடலம் அங்கு வீசப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

சடலம் மீட்பு

மாங்குளம் ஏ9 பிரதான வீதியின் 225 ஆவது மைல் கல்லுக்கும் 226ஆவது மைல் கல்லுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் எலும்புக்கூடு மீட்கப்பட்டது. அருகில் இருந்து பலவகையான தடயப் பொருள்களும் மீட்கப்பட்டன.

மாங்குளம் வடக்கு மாதர் முன்னேற்றச் சங்கத்திற்குரிய காணியை துப்பரவு செய்தபோதே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்திய சாலையின் சட்டவைத்திய அதிகாரி சின்னையா சிவ ரூபன் நேற்று எலும்புக்கூடு மற்றும் தடய பொருள்களை சம்பவ இடத்தில் ஆராய்ந்தார்.

சாவில் சந்தேகம்

அவரைக் கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் கத்தி ஒன்றும் எலும்புக்கூட்டுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். வவுனியா நேரியகுளம் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானப் பாட ஆசிரியராகக் கடமையாற்றியவரான நிரூபன் வடமாகாண தேர்தல் காலத்தில் ( 18.09.2013) அன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டுள்ளார். எனினும் அவர் வீடு வந்து சேரவில்லை.

மூன்று தினங்கள் கழிந்த நிலையில் நிரூபனைக் காணாத உறவினர்கள் கோப்பாய் பொலிஸ்நிலையம் மற்றும், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகம் என்பவற்றில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நிரூபன் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர் எனவும் அவருக்கு ஒரு கையும் ஒரு காலும் இயல்பாகவே இயங்காதவை எனவும் அவரது சகோதரி நேற்று தெரிவித்தார். (ஐ-18-5-422)

### 24 இந்திய

இரவு 3 படகுகளில் 15 பேரும், மறுநாள் அதிகாலை 2 றோலர்களில் 9 பேருமாக 24 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் மன்னார் நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையிலேயே சட்டமா அதிபர் திணைக்கள அறிவுறுத்தலுக்கேற்ப நேற்று மன்னார் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள் ளனர்.

அதேவேளை, நெடுந்தீவுக் கடற்பரப்பை அண்மித்து கடந்த 3 ஆம் திகதி 8 படகுகளுடன் பிடிபட்ட 32 பேரையும் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர்களில் 14, 16 மற்றும் 17 வயதுடைய மூன்று சிறார்களும் உள்ளடங்குவர். நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சான்று பெற்ற பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய 29 பேரும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்த நிலையில் அனைவரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, நேற்றுமுன்தினமும் இந்திய மீனவர்கள் 116 பேர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். (ற-4-56)

### மயிலிட்டியில்

யிலிருந்து தாக்குதல் நடத்தக்கூடும் என்ற காரணத்தினாலேயே மீள்குடியமர்வு சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றது. மயிலிட்டியில் மீன்பிடியில் ஈடுபடலாம். என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

போர் முடிந்து விட்டது, இன்னமும் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ன இருக்கின்றது என்று கேட்டபோது, தற்போது சில இடங்களில் ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன. அதனால் விமான நிலையத்துக்கு அச்சுறுத்தல் இருக்கின்றது என்று இராணுவத் தளபதி என்னிடம் தெரிவித்தார்.

அதற்கு நான் நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள் என்று அவரிடமே நேரடியாகத் தெரிவித்தேன். அத்துடன் வளலாயில் இருந்து கொண்டு எங்கள் மக்கள் மயிலிட்டியில் மீன்பிடியில் ஈடுபட முடியாது என்பதையும் அவருக்குத் தெளிவுபடுத்தினேன்.

இராணுவத் தளபதியைப் பொறுத்த வரையில் வளலாயில் மக்களை குடியேற்றுவதே அவர்களது நோக்கமாக இருக்கின்றது"- என்று தெரிவித்தார். (ற)

### ஆசிரியர்

மீட்கப்பட்டமை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த கார்த்திகேசு நிரூபன் வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வந்துள்ளார்.

இவர் கடந்த மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியாவிலிருந்து கடந்த செப்ரம்பர் 19 ஆம் திகதி கோப்பாய்க்குத் திரும்பியுள்ளார். அதன்போதே அவர் காணாமற்போயுள்ளார்.

அவர் இவ்வாறு காணாமல் போய் பின்னர் உயிரிழந்த சம்பவமானது மிகவும் மோசமான செயல். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எதிர்காலத்தில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறக் கூடாது.

போர் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் ஆகவுள்ள நிலையில் இவ்வாறு ஒரு ஆசிரியர் காணாமற்போவது உயிரிழப்பது எவ்வாறு? என்று கேட்கிறோம். அவர் காணாமற்போனது தொடர்பாக பொலிஸிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறிருந்தும் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்று தெரிவித்துள்ளார். (ற-4)

### யாழ்ப்பாணம்

வாக்களித்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல் மாகாண மற்றும் தென் மாகாணத் தேர்தல்கள் இந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளன. அதற்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள தேர்தல் நடைபெறும் இரண்டு மாகாணங்களையும் சேர்ந்த இராணுவம், பொலிஸ், கடற்படை, அரச அலுவலர்கள் நேற்று தபால் மூல வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 105 நிலையங்களில் 4 ஆயிரத்து 200 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 60 நிலையங்களில் 2 ஆயிரத்து 100 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களில் 80 சதவீதமானோர் நேற்றே தமது வாக்களிப்பை பூர்த்தி செய்துள்ளனர். இரு மாவட்டங்களிலும் எதுவித அசம்பாவிதங்களுமின்றி வாக்களிப்பு இடம்பெற்றது என்று கூறப்படுகின்றது.

நேற்று வாக்களிக்காதோர் இன்று வாக்களிக்க முடியும் என்றும், இன்று வாக்களிக்கத் தவறுவோர் எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகங்களில் வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### ஜெனிவா

விடயங்களுக்கும் பதிலடி கொடுக்கும் வகையில் செயற்படவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால், இலங்கைக்கு எதிரான தீர்மான வரைபு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மான வரைவு திருத்தங்களுடன் கடுமையானதாக இரண்டாவது தடவையாக அமர்வில் சமர்ப்பிக்கப்பட வுள்ளது. அந்த வரைவில் சர்வதேச விசாரணையைக் கோரும் விடயங்கள் உள்ளடக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


அவ்வாறானதொரு தீர்மான வரைபு முன்வைக்கப்பட்டால் அதை எதிர்கொண்டு தோற்கடிக்கடிப்பதற்காக இலங்கை அரசு தனது அதியுயர் அதிகாரிகள் மட்டத்தை ஜெனீவா சமரில் களமிறக்கவுள்ளது என்று கூறப்படுகின்றது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையில், நீதியமைச்சின் அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என்று பல்வேறு தரப்பினர் இந்தக் குழுவில் உள்ளடங்கவுள்ளனர். இவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்படவுள்ளனர்.

ஜெனிவாவில் அமைச்சர்கள் தலைமையிலான நடவடிக்கைகளுக்கு புறம்பாகவே இந்தக் குழுவினர் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர். அத்துடன் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரினால் இலங்கை தொடர்பில் எதிர்வரும் 26 ஆம் திகதி முன்வைக்கப்படும் அறிக்கை மற்றும் அமெரிக்காவின் இறுதித் தீர்மான வரைவில் சுட்டிக் காட்டப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே அரசின் உயர் மட்டக் குழு செயற்படும் என்று தெரியவருகின்றது. (ற-5)

# யாழ்.மத்தி பலமான நிலையில்




ஆரவாரத்துடன் களமிறங்கும் மத்திய கல்லூரி வீரர்கள்



பந்தை அடித்தாடும் யாழ். மத்திய கல்லூரி வீரர்களும் களத்தடுப்பில் ஈடுபடும் சென். ஜோன்ஸ் வீரர்களும்



மைதானத்துக்குள் உற்சாகத்துடன் சென். ஜோன்ஸ் அணி வீரர்கள்



ஆடுகளத்தில் ஆர்வத்துடன் வீரர்கள்



யாழ். மத்திய கல்லூரி வீரர் அடித்த பந்தை பிடியெடுக்கும் சென். ஜோன்ஸ் வீரர்

யாழ்ப்பாணம்.மார்ச் 14

வடக்கின் மாபெரும் போர் முதலாம் நாள் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுப் பலமான நிலையில் உள்ளது. சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தடுமாறியது.

இலங்கையில் தொன்மை வாய்ந்த பாடசாலை மட்ட மாபெரும் கிரிக்கெட் போட்டிகளில் ஒன்றான வடக்கின் பெரும் போர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 3 நாள்களைக் கொண்ட இந்தப் போட்டி 108 ஆவது தடவையாக நடைபெறுகின்றது.

நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

**முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மத்திய கல்லூரியின் துடுப்பாட்டத்தில் பதினாதன் நிரோ ஜன் அதிகபட்சமாக 40 ஓட்டங்களையும், குலேந்திரன் ஜூனிஸ் கனிஷ்ரன் 63 ஓட்டங் களையும், கலியுகவரதன் சன்சயன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.**

மத்திய கல்லூரியின் துடுப்பாட்டத்தில் பதினாதன் நிரோஜன் 40 ஓட்டங்களையும், குலேந்திரன் ஜூனிஸ் கனிஷ்ரன் 63 ஓட்டங்களையும், கலியுகவரதன் சன்சயன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில். சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் சிறப்பாகப் பந்துவீசிய ரவீந்திரன் லோஹதீஷ்வர் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் தனது முதலாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி ஆரம்பம் முதலே தடுமாற்றத்தை எதிர் நோக்கியது.

நேற்றைய ஆட்டநேர முடிவில் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆறு இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் மணிவண்ணன் சிந்துர்ஜன் 18 ஓட்டங்களையும் எஸ். கபில்ராஜ் 13 ஓட்டங்களையும், துவாரசீலன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மத்திய கல்லூரியின் பவனாதன் நிருபன் மற்றும் சிவராசா மதுஷன் ஆகியோர் தலா 3இலக்குகளைக்கைப்பற்றினர்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்த போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இம்முறை, முதல் நாளிலேயே சிறப்பாகப் பிரகாசிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கூறப்படுகிறது.


போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரவுள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் இரு பாடசாலைகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (த-23)



வெற்றிக் குறி இடும் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள்

# பங்களாதேஷ் வெற்றி



ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான 20/20 உலகக் கிண்ணப் பயிற்சிப் போட்டியில், பங்களாதேஷ் அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் 5 ஆவது 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. இதில் இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணி உள்ளிட்ட 16 அணிகள் பங்கேற்கின்றன. இந்தத் தொடருக்கு முன் ஒவ்வொரு அணிகளும் பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்கின்றன.

பகதுல்லாவில் நேற்றுமுன்தினம் நடந்த பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷ் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு அணித் தலைவர் குர்ராம் கான் (44), பைசன் ஆசிப் (31), அம்ஜத் அலி (19), ஷாய்மன் அன்வர் (19) கை கொடுத்தனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றத்தில் 7 இலக்குகளுக்கு 142 ஓட்டங்கள் எடுத்தது. பங்களாதேஷ் சார்பில் பர்கத் ரெஜா 2 இலக்குகளை வீழ்த்தினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்குத் தமிம் இக்பால் (43) நல்ல ஆரம்பம் கொடுத்தார். அனாமுல் ஹக் (0), சாகிப் அல் ஹசன் (9) ஏமாற்றினர். அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் (27), நசிர் ஹுசைன் (15), மகமதுல்லா (29), பர்கத் ரெஜா (14) நம்பிக்கை தந்தனர். பங்களாதேஷ் அணி 18.5 பந்துப் பரிமாற்றத்தில் 6 இலக்குகளுக்கு 146 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

**ஆப்கானிஸ்தான் அசத்தல்**

மற்றொரு பயிற்சி ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் - நெதர்லாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 150 ஓட்டங்கள் எடுத்தது. பின் களமிறங்கிய நெதர்லாந்து அணிக்கு, மழை காரணமாக 15 பந்துப்பரிமாற்றங்களில் 122 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.



*அசத்தலாக ஆடிய தமிம் இக்பால்*

ஆப்கானிஸ்தான் பந்துவீச்சில் சிதறிய நெதர்லாந்து அணி, 12.3 பந்துப் பரிமாற்றங்களில் 86 ஓட்டங்களுக்குள் சுருண்டு தோல்வி அடைந்தது. இதன்மூலம் டக்வோர்த் லூயிஸ் முறைப்படி ஆப்கானிஸ் தான் அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆப் கானிஸ் தான் சார்பில் அப்தாப் ஆலம் 4, ஹம்ஜா ஹோடக் 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (த)

# போராடி வென்றது ஆஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது 20/20 போட்டியில், ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள ஆஸ்திரேலியா அணி மூன்று 20/20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி மழையால் ரத்தான நிலையில் இரண்டாவது போட்டி டர்பனில் நடந்தது. மழை அவ்வப்போது பெய்து கொண்டிருந்ததால், போட்டி 7 பந்துப் பரி மர்ற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பெய்லி களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதன்பின் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி ஒரு இலக்கு இழப்புக்கு 80 ஓட்டங்கள் எடுத்தது.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகள் இழப்புக்கு 82 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (த)

# சூதாட்டத்தில் ஈடுபட்டால் இனிமேல் வாழ்நாள் தடை

கிரிக்கெட் சூதாட்டங்களில் ஈடுபடும் வீரர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என இந்தியக் கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல். போட்டிகளில் கிரிக்கெட் சூதாட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது.

இதனையடுத்து சூதாட்டத்தில் ஈடுபடும் நபர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என இந்திய கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தொடங்கும் ஐ.பி.எல். போட்டிகளை கண்காணிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் இந்திய கிரிக்கெட் சபை கூறியுள்ளது. (த)

# வெளியேறியது மன்செஸ்ரர்



சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரில் இருந்து மன்செஸ்ரர் சிற்றி கழகம் வெளியேற்றப்பட்டுள்ளது. மன்செஸ்ரர் சிற்றி கழகத்தை வெற்றிகொண்ட ஸ்பெய்னின் பார்சிலோனா அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. இதன்மூலம் தொடர்ச்சியாக 7 ஆவது தடவையாகப் பார்சிலோனா அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

போட்டியின் முதல் பாதியில் எந்தவொரு அணியாலும் கோல் போட முடியவில்லை. எனினும் இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணி சார்பாக லயனல் மெஸ்ஸி 67 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் போட்டதுடன், மன்செஸ்ரர் சிற்றி 89 நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டுப் போட்டியைச் சமப்படுத்தியது. எனினும் 90 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் போட்ட பார்சிலோனா அணி வெற்றியைத் தன் வசப்படுத்தியது.

சம்பியன்ஸ் லீக்கின் முதல் ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்ரர் சிற்றி கழக அணியை, பார்சிலோனா அணி வெற்றிகொண்டிருந்தது. (த)

# சகீர்கானுக்கு ஓய்வு?



சகீர்கான்

இந்திய அணியின் பந்துவீச்சாளர் சகீர்கான் பந்துவீச்சில் தடுமாற்றம் இருப்பதால், ஓய்வு குறித்து முடிவெடுக்கலாம் என முன்னாள் வீரர் வெங்கடேஷ் பிரசாத் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் சகீர்கான் (வயது - 35). இதுவரை 92 டெஸ்ட்(311 இலக்குகள்), 200 ஒருநாள் (282 இலக்குகள்), 17 20/20 (17 இலக்குகள்) போட்டியில் விளையாடி உள்ளார். கடந்த மாதம் நியூசிலாந்தில் நடந்த 2 டெஸ்டில் பங்கேற்ற இவர் 9 இலக்குகள் வீழ்த்தினார்.

இவரது செயல்பாடு குறித்து வெங்கடேஷ் பிரசாத் கூறுகையில், தொழில்நுட்ப முறையில், சகீர் சிறந்தவர் தான். ஆனால் டெஸ்ட் போட்டியில் இவர் பந்து வீசுவதைப் பார்த்தால் தடுமாறுவது தெரிகிறது.

இதற்கு வயது, காயம் என இரண்டு காரணங்கள் உண்டு. ஏனெனில் கடந்த 14 ஆண்டுகளாக இவர் விளையாடி வருகிறார், இது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எனவே ஓய்வு குறித்து முடிவெடுக்க, இவருக்கு அவகாசம் தரலாம் எனக் கருத்து வெளியிட்டுள்ளார். (த)

# 20/20 கிண்ணத்தை வெல்லும் ஆஸ்திரேலியா



ஷேன் வொட்சன்

*20/20 உலகக் கிண்ணத்தை ஆஸ்திரேலியா வெல்லும் என அந்த அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நாளை மறுதினம் பங்களாதேஷில் தொடங்குகின்றன. இதில் பங் கேற்கும் 16 அணிகளில் ஒன்றான ஆஸ்திரேலியா முதல் முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் தயாராகி வருகிறது.*

*இது குறித்து ஆஸ்திரேலியாவின் சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் கூறுகையில், நான் இதுவரை இடம் பெற்ற ஆஸ்திரேலிய அணிகளிலேயே இது தான் ரொம்பச் சரியான கலவையில் அமைந்திருப்பதாகக் கருதுகிறேன்.*

*எல்லா வகையிலும் தொடர்ச்சியாக அதிரடி காட்டக்கூடிய துடுப்பாட்ட வீரர்கள் இருப்பதால், 10ஆவது வரிசை வீரராலும் கூட அதிரடியாக விளையாட முடியும்.*

*இதேபோன்று உலகத் தரமான வேகப்பந்து வீச்சாளர்கள், இறுதிக் கட்டத்தில் கட்டுக்கோப்பாகப் பந்து வீசக்கூடிய பந்துவீச்சாளர்கள், தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர்கள் என்று பந்து வீச்சுத் துறையும் வலுவாக இருக்கிறது. உலகின் எந்த விதமான சூழலிலும், எந்த அணிக்கு எதிராகவும் அபாரமாக விளையாடும் சர்வ வல்லமை உடைய அணியாகத் திகழ்கிறோம். எனவே 20/20 கிண்ணத்தை வெல்ல எங்களுக்குப் பிரகாசமான வாய்ப்புள்ளதெனத் தெரிவித்துள்ளார். (த)*

# தலைமுறையின் சிறந்த வீரர் விருது வழங்கல் இன்று

கிரிக் இன்போ இணையத்தளத்தின் 20 வருடப் பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படுகின்ற, இந்தத் தலைமுறையின் சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

1993ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர் மற்றும் சிறந்த சகலதுறை வீரர் ஆகிய மூன்று விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி இந்த காலப்பகுதியின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது இந்திய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கப்படவுள்ளது.

சிறந்த பந்துவீச்சாளருக்கான விருது, ஆஸ்திரேலியாவின் முன்னாள் பந்துவீச்சாளர் ஷேன் வோர்னுக்கும், சிறந்த சகலதுறை வீரருக்கான விருது தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் ஜக் கலிஸுக்கும் வழங்கப்படவுள்ளது.

50 பேர் கொண்ட குழு ஒன்று இந்த விருது பெறுவோரைத் தெரிவு செய்துள்ளது.

எவ்வாறாயினும் இந்தக் காலப்பகுதியில் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருது, இலங்கையின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனுக்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விருதுக்காக முத்தையா முரளிதரன் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் பிரையன் லாரா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதும், அவர்கள் இறுதி மூன்று பேருக்குள் தெரிவாகவில்லை.

விருது பெறுவோரைத் தெரிவு செய்யும் 50 பேர் கொண்ட குழுவில், இலங்கை கிரிக்கெட் அணியின் மஹேல ஜயவர்த்தன, குமார சங்ககார ஆகியோரும், முன்னாள் வீரர்களான ரஞ்சன் மடுகல்ல மற்றும் ரசல் ஆனல்ட் ஆகியோரும் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு ஆக்ரோஷமான தலைவர் தேவை



பாகிஸ்தான் அணிக்கு ஆக்ரோஷமான அணித் தலைவர் ஒருவர் தேவை எனஅந்த அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் வர்ணனையாளருமான வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்கின் துடுப்பாட்டம் சிறப்பாக உள்ளது. ஆனால் அவரது தலைமை தான் கேள்வி நிலையில் இருக்கிறது. தலைவர் பதவியில் அவரது செயற்பாடு சரியில்லை.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் அவர் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது சரியான முடிவு இல்லை. ஏனென்றால் அந்தப் போட்டித் தொடரில் பாகிஸ்தான் 2 ஆவதாகத் துடுப்பாட்டம் செய்து சிறப்பான வெற்றியை பெற்று இருந்தது.

2015 உலகக் கிண்ணத்தைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தான் அணிக்கு ஆக்ரோஷம் மற்றும் புத்தசாலித்தனமான தலைவர் தேவை. இதனால் உலகக் கிண்ணப் போட்டிக்கு அப்ரிடியைத் தலைவராக நியமிக்க வேண்டும்.

பங்களாதேஷில் நடைபெறும் 20/20 உலகக் கிண்ணத்தை வெல்ல இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு வாய்ப்பு உள்ளது-என்றார். (த)

# யுவராஜுக்கு ஊக்க மருந்து சோதனை

கிரிக்கெட் வீரர்களுக்குத் தேசிய ஊக்க மருந்துத் தடுப்பு மையம் ஊக்க மருந்துச் சோதனையை நடத்தி வருகிறது. உள்ளூர் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் வீரர்களிடம் சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யுவராஜ் சிங்குக்கும் ஊக்க மருந்துச் சோதனை நடத்தப்பட்டது. 20/20 உலகக் கிண்ணப் போட்டிக்கான அணியில் இடம்பெற்ற அவர் விஜய் ஹசாரே போட்டிக்காகக் கொல்கத்தா மைதானத்தில் விளையாடினார்.

பஞ்சாப்பை சேர்ந்த அவர் ரயில்வே அணிக்கு எதிரான காலிறுதியில் ஆடிய போது ஊக்க மருந்துச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதேபோல ரயில்வே அணித் தலைவர் மகேஷ் ரவாத், அனுருத் சிங் ஆகியோரிடம் ஊக்க மருந்துச் சோதனை நடத்தப்பட்டது. இந்த மாதிரிகள் டில்லியில் உள்ள தேசிய ஊக்கமருந்துத் தடுப்பு மையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அமைப்பு சோதனையின் அறிக்கையை கிரிக்கெட் சபைக்குச் சமர்ப்பிக்கும். (த)

**கருத்தரங்கு**

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர் பரீட்சைக்கு
சனி [15/3], ஞாயிறு [16/3]
காலை 9.00 - 4.00 மணிவரை
★ பகுப்பாய்வுத்திறன்
★ பொதுஅறிவு
★ ஆங்கிலம்
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு, யாழ்.நகர்.
075 416 4564

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



14.03.2014
இன்று
நாவலர் கலாச்சார மண்டபத்தில்
இடம்பெறும்
வருடாந்த சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்
சான்றிதழ்களை
பெற்றுக்கொள்ளும்
அனைவரையும் வாழ்த்துகின்றோம்

*Wishing from*
ESOFT Shaping Lives, Creating Futures.
Manager & Staff
ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137. K.K.S Road, Jafna

**ஆசிரியர்கள் தேவை**

திசைகாட்டியின் துவ்வாலை இலவச அறநெறிப் பாடசாலைக்கு....

✱ பண்ணிசை போதனாசிரியர்கள்:
முறைப்படி பண்ணிசை பயின்ற பட்டதாரிகள் விரும்பப்படுகின்றனர்.

✱ அறநெறி ஆசிரியர்கள்:
இந்துமத அறநெறிக் கருத்துக்களைப் போதிக்கக்கூடிய கணினி அறிவுடைய ஆசிரியைகள் தேவை.

கவர்ச்சியான வேதனம்
நேர்முகத் தேர்வு: 16.03.2014 மு.ப. 10 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.

(45709) (7.6.3)



Ms.V. இந்துஜா
பொதுமுகாமையாளர்
(கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016

*Anniversary Offer*

*80% Scholarship*

We thank Jaffna students to give us this much support.

Softtech Computer Education முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தேர்ந்தெடுக்கும் எந்தவொரு கணினிக்கற்கைநெறிக்கும் 80% Scholarship இனை பெற்றுக்கொள்ளுங்கள்

We gave the best education
Giving the best education
Will give the best education

அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

Offer valid till : 31.03.2014

For more details
SofTTech Computer Education
306, Kandy Road, Pungankulam Junction, Ariyalai, Jaffna.
T.P : 021-221-1220, 077-9122997 www.softtech-edu.com

**மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

மலேசியா நாட்டில் உள்ள ஐந்து நட்சத்திர (Fivestar) Hotel இல் உடனடி வேலைவாய்ப்பு. ✱Waiter ✱Room boy ✱ Cleaner போன்ற துறைகளில் அதி உயர் சம்பளம், சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம். இரண்டே வாரத்தில் பயணம்.

தொடர்பு:LANKA VOICE 077 058 4658
(43208)(3.6.4)

NALIN Information Technologies(Pvt)Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

இதோ!






வந்துவிட்டது
**85A Torner**
முந்துங்கள்

No. 195/4, Parameswara Junction, Palaly Road.

021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin it www.nit.lk

Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.